ஸநத்ஸுஜாதீயம்

த. சுந்தரராஜ சர்மா.

T
6309

வேதாந்த போதினி

(இரண்டாம் புஸ்தகம்)

ஸ்ரீமத்

ஸநத்ஸுஜாதீயம்

த. சுந்தரராஜசர்மா

பரிசோதித்து மொழிபெயர்த்தது.

சென்னை

வேதாந்தபோதினி ஆபிஸ்

1910.

(காபிரைட் ரிஸெர்வ்ட்)

வேதாந்த போதினி ப்ரெஸ், சென்னை.

1910.

உள்ளடக்கம்.

		பக்கம்
உரைப்பாயிரம்		க - ௨
வேதாந்த முடிபு	...	க
நூல்	...	௨
முதல் அத்தியாயம்		௩ - கசு
திருதராஷ்டிரனும் விதுரனும் கூடிப் பேசுதல்	...	௩
விதுரன் நல்லோரொழுக்கத்தைக் கொள்ளுதல்	...	ரு
பிறர்க்கு உரைப்பதிலே பிராமணர் உரியவர்	...	சு
விதுரன் திருதராஷ்டிரனுக்காக ஸநத்குமாரரை வரவழைத்தல்	...	அ
விதுரன் ஸநத்குமாரரை உபசரித்துப் பிரார்த்தித்தல்	...	அ
இரண்டாம் அத்தியாயம்		கஎ - அ௩
திருதராஷ்டிரன் ஸநத்குமாரரை வினவுதல்	...	கஎ
ஸநத்ஸுஜாதர் விடை கூறுதல்	...	கஅ
தன்னை யறியாத தடுமாற்றமே மிருத்தியு என்பது	...	ககூ
அஜ்ஞானிகள் ஸூர்யன்மகனை மிருத்தியுவாகக் கொள்கிறார்கள்	...	௨௨
அஜ்ஞான கார்யங்கள்	...	௨௩
ஞானிக்கு மிருத்தியு இல்லை	...	௨அ
காமத்தின் தீமையும், ஞானத்தின் நன்மையும்	...	௨கூ

		பக்கம்
அஜ்ஞானிக்கே கர்ம மாம்	...	௩௨
ஜீவனும் ப்ரஹ்மமும் உண்மை யிலே ஒரேபொருள்	...	௩௪
பரம்பொருளுக்கு வேருகப் பிரபஞ்ச மில்லை	...	௩௮
கர்மம்	...	௩௯
ஞானியின் வாழ்க்கை	...	௪௩
துறவிக்கு உரிய இடம்	...	௪௪
துறவிக்கு நல்லது செய்வோர்	...	௪௪
ஞானி அங்கீகரிக்கும் உணவு	...	௪௬
ஞானியின் ஒழுக்கம்	...	௪௭
ஆத்மாவை யறியாமையே பெருங் குற்றம்	...	௪௯
அடக்கமுள்ள ஞானி	...	௫௦
டம்பமுள்ள ஞானி	...	௫௦
ஞானியின் மகிமை	...	௫௧
ஞானியின் ஒழுக்கம்	...	௫௨
மானமும், மௌனமும்	...	௫௩
மூன்றாம் அத்தியாயம்		௮௪ - ௧௪௪
மௌனம்	...	௮௪
வேதஇயல்பின் திறமை	...	௮௬
ஈச்வரன்	...	௮௯
கர்மம்	...	௯௨
குற்றங்கள்	...	௯௭
குணங்கள்	...	௯௯
அடக்கத்தைக் கெடுக்கும் குற்றங்கள்		௧௦௦
இன்னும் தள்ளவேண்டிய குற்றங் களும், கொள்ளவேண்டிய குணங்களும்	...	௧௦௧

உள்ளடக்கம்.

		பக்கம்
ப்ராஹ்மணன் [ப்ரஹ்மத்தை யறிந்தவன்]	...	கo௫
ப்ராஹ்மணனுதற்கு வழிகள்	...	ககஉ
ஞானியே முனிவன்	...	ககந
ஞானியே வையாகரணன்	...	ககச
ஞானியே எல்லாம் அறிந்தவன்	...	ககச
ப்ரஹ்மத்தைக் காணுதல்	...	கக௫
நான்காம் அத்தியாயம்		**கசரு - களஅ**
ப்ரஹ்மவித்யை	...	கச௫
ப்ரஹ்மசர்யம்	...	கசஎ
ப்ரஹ்மசர்யத்தின் புகழ்ச்சி	...	க௫ச
ப்ரஹ்மம்	...	க௫சு
ஐந்தாம் அத்தியாயம்		**களசு - உoஉ**
நீக்கவேண்டிய குற்றங்கள்	...	களசு
கொள்ளவேண்டிய குணங்கள்	...	கஅக
இன்னும் தள்ளவேண்டிய குற்றங்கள்		கஅஉ
ஸுஹ்ருத்தின் இயல்பு	...	கஅச
ஆறாம் அத்தியாயம்		**உoந - உசசு**
ஆத்மஸ்வரூபமும், ஆத்மக்காட்சியும்	...	உoந
குறிப்புக்கள்		**உசஎ - உசுசு**
மூலச்லோகங்களினுடைய முற்பாதி பிற்பாதிமுதற்குறிப்பகராதி	...	உசசு
மேற்கோள்முதற்குறிப்பகராதி	...	உசுந
விஷயஅகராதி	...	உசுஎ
அச்சுப்பிழைதிருத்தம்	...	உஎo

குறிப்பெழுத்துக்களின் விளக்கம்.

ஆப = ஆபஸ்தம்ப தர்மஸூத்ரம்.
ஆப - தர்ம = ,,
ஈ = ஈசாவாஸ்யஉபநிஷத்.
ஈச = ,,
ஐ - ஆ = ஐதரேய ஆரண்யகம்.
கட = கடஉபநிஷத்.
கே = கேநஉபநிஷத்.
கேந = ,,
கை - உப = கைவல்யஉபநிஷத்.
கௌட = கௌடபாதகாரிகை(மாண்டூக்யஉபநிஷத்).
சா = சாந்தோக்யஉபநிஷத்.
ச்வே = ச்வேதாச்வதரஉபநிஷத்.
தை - ஆ = தைத்திரீய ஆரண்யகம்.
தை - உப = தைத்திரீய உபநிஷத்.
தை - ப்ரா = தைத்திரீய ப்ராஹ்மணம்.
நீதி = பர்த்திருஹரி நீதி(கே. டி. தைலங்கரது பதிப்பு).
பிரு = பிருகதாரண்யகஉபநிஷத்.
ப்ர = ப்ரச்நஉபநிஷத்.
ப்ரச்ந = ,,
ப்ரு = ப்ருகதாரண்யகஉபநிஷத்.
மகாநா = மகாநாராயணஉபநிஷத்.
மகாபா - அரண்யப = மகாபாரதம், அரண்யபர்வம்.
மநு = மநுஸ்மிருதி.
மு = முண்டகஉபநிஷத்.
மைத்ரீ = மைத்ரீஉபநிஷத்.
ருக்வே = ருக்வேதம்.
விஷ்ணுபு = விஷ்ணுபுராணம்.
வே - ஐதரே - உப = ஐதரேயஉபநிஷத்(வேதாந்தபோதினிப் பதிப்பு).
வே - கீ = பகவத்கீதையும் ஸ்ரீசங்கராசார்ய பாஷ்யமும்(வேதாந்தபோதினிப் பதிப்பு).
வே - த - மா = தக்ஷிணாமூர்த்திஸ்தோத்திரமும் மாநஸோல்லாஸமும்(வேதாந்தபோதினிப் பதிப்பு).
வே - த - மூ = ,,
வே - மா = ,,
வே - ஸா = ஸாவித்ரி(வேதாந்தபோதினிப் பதிப்பு).
ஸம்க்ஷேப = ஸம்க்ஷேபசாரீரகம்.

ஸ்ரீ:

ஸநத்ஸுஜாதீயம்।

ஸ்ரீ

ஸநத்ஸுஜாதீயம்.

உரைப்பாயிரம்.

வேதாந்த முடிபு.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய. ஆத்மாஅல்லாத உடம்புமுதலியவற்றை ஆத்மாவாகக்கொண்டவர் நலத்தை இழந்து, தீங்கை யடைந்து, வேண்டியதை விரும்பி, வேண்டாததை வெறுக்கிறார்கள். அவர், லௌகிக கர்மங்களையும் வைதிக கர்மங்களையும் அநுஷ்டிப்பவராயினும் யாவற்றினும் மேம்பட்ட புருஷார்த்தமாகியமோக்ஷம் என்னும் உறுதிப் பொருளான உறுதியான நன்மையைப் பெறாது, ஸம்ஸாரக்கடலினுள் மூழ்கி, உறவு பகை முதலான முதலைமுதலியவற்றால் புரட்டி உருட்டி அங்குமிங்கும் இழுத்தடிக்கப்பெற்று, தேவர் மனிதர் விலங்கு முதலிய பற்பல பிறவிகளில் மாறிமாறிப் பிறந்து இறந்து உழன்று மயங்கிக் கிடக்கிறார்கள். மற்று, அவருள் ஒருவன் ஒருவாறு புண்யத்தின் வலிமையினால் கர்மங்களை ஈச்வரார்ப்பணமாக அநுஷ்டிப்பவனாயின், அதனால் ஆசைமுதலிய அழுக்குநீங்கி, நிலையில்லாப் பொருள்களின் தீங்குகளை உணர்ந்து, இம்மை மறுமைப் போகங்களின்மேல் அவா அற்று, வேதாந்தங்களால் உணர்த்தப்படுகின்ற "ப்ரஹ்மமே ஆத்மா என்னும் உண்மையைக் காண விரும்பி, சமம் தமம் முதலிய ஸாதநங்களோடு கூடி, நல்லாசிரியனை நாடி வழிபட்டு, வேதாந்தப்பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து "நான் இதோ ப்ரஹ்மமா யிருக்கின்றேன்" என ஆத்மாவை ப்ரஹ்மமாக அறிந்து, அஜ்ஞானமும் அதனது செய்கையும் அகன்றவனாய், அறிவான ஆநந்தமாய், ப்ரஹ்மமாய் விளங்குகிறான்.

ஸநத்ஸுஜாதீயம்.

நூல்.

ஆகவே, இஃதனைத்தையும் மந்தர்களும் அறிந்து ஈடேறுமாறு பகவான் ஸநத்குமாரர் திருதராஷ்டிரனை வியாஜமாகக்கொண்டு இந்நூலை உலகிற்கு உபதேசித்தருளினர். ஸ்ரீமஹாபாரதத்திலே பீஷ்மபர்வத்தினுள் பகவத்கீதைபோல, இது அதனுள்ளே உத்யோகபர்வத்தினுள் ஆறு அத்தியாயங்களால் அமைந்திருக்கின்றது. ஸநத்குமாரரைப்பற்றி வேதாந்தபோதினிப் பதிப்பு பகவத்கீதையில் ச - ஆம் பக்கத்தில் உ - ஆம் குறிப்பைப் பார்க்க.

அத

ப்ரதமோऽத்யாய: ||

க.

த்ருதராஷ்ட்ர உவாச ||

அநுக்தம் யதி தே கிஞ்சித் வாசா விதுர வித்யதே |
தந்மே ஶுஶ்ரூஷதே ப்ரூஹி விசித்ராணி ஹி பாஷஸே ||

முதல் அத்தியாயம்.

திருதராஷ்டிரனும் விதுரனும் கூடிப்பேசுதல்.

க.

துன்பம்முதலியவற்றால் மயங்கித் தவிக்கின்ற திருதராஷ்டிரனுக்கு-மனஅழுக்கு நீங்கி புத்தி திருந்துவதற்கான வழிகளை, சென்ற சிலபல அத்தியாயங்களால் விதுரன் கூறிவருகையில் ஆங்காங்கு பரம்பொருளைப் பற்றிச் சிறிதுசிறிது குறித்துவந்தான். வரவே, திருதராஷ்டிரன் அவ் வளவோடமையாமல், உறுதியான நன்மையைத் தருகின்ற அந்த ஞான வார்த்தைகளை விரிவாகச் செவ்வனே கேட்டு,

"தரதி ஶோகமாத்மவித்"

"ஆத்மாவை அறிந்தவன் துன்பதைக் கடந்துநிற்கிறான்"

(சா - எ - க - ௩)

எனச் சுருதிகூறியவாறு "ஆத்மாவை அறிந்தாலன்றி துன்பம்முதலிய வற்றைத் துடைத்தல் இயலாது" என்று எண்ணி இதனைக் கூறலாயினன் :

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான் :

விதுர ! உனது வாக்கால் சொல்லாதிருப்பதொன்று இருந்தால், கேட்க விரும்புகின்ற எனக்கு அதனைச் சொல்லவேண்டும் ; ஏனெனில், நீ ஆச்சரியங்களைப் பேசுகிறாய்.

௨, ௫.

விது³ர உவாச ॥

த்⁴ருதராஷ்ட்ர குமாரோ வை ய: புராண: ஸநாதந: ।
ஸநத்ஸுஜாத: ப்ரோவாச ம்ருத்யுர்நாஸ்தீதி பா⁴ரத ॥

ஸ தே கு³ஹ்யாந் ப்ரகாஶாம்ஶ்ச ஸர்வாந் ஹ்ருத³யஸம்ஶ்ர- [யாந் ।
ப்ரவக்ஷ்யதி மஹாராஜ ஸர்வபு³த்³தி⁴மதாம் வர: ॥

௨, ௫.

விதுரன் சொல்லலுற்முன் :

பரதவம்சத்திற் பிறந்த திருதராஷ்டிர! பழமைச் சிறுவரான எந்த ஸநாதநரென்னும் ஸநத்ஸுஜாதர் "இறப்பென்பது இல்லை" எனக் கூறினரோ,

அவர் ரஹஸ்யமும் வெளிப்படையுமான உன்மனச்சம்சயங்கள் யாவற்றையும் விரித்துரைப்பர்; மகாராஜனே! அறிவுடையோ ரனைவரி லும் சிறந்தவர் (ஆதலின்).

பழமைச் சிறுவரான - படைப்புத்தொடக்கத்திலிருந்தே சிறுவரா ன, ப்ரவிருத்திமார்க்கமான இல்லறத்தைப் பற்முத என்றபடி; வே-கீ-ச - ஆம் பக்கத்தைப் பார்க்க. ஸநத்ஸுஜாதர் - ஹிரண்யகர்ப்பன் என்னும் ப்ரஹ்மாவினுடைய மனத்தினின்றும் ஞானம் வைராக்கியம் முதலியவற்ருேடுகூடிப் பிறந்தவர். ஸநத் - எப்பொழுதும் (உள்ளது), அதாவது, ஹிரண்யகர்ப்பன் என்னும் ப்ரஹ்மா; ஸு - நன்ருக, அதாவது, ஞானம் வைராக்கியம் முதலியவற்ருேடு கூடி; ஜாதர் - பிறந்தவர். ஸநாதந ரெனினும், ஸநத்ஸுஜாத ரெனினும், ஸநத்குமாரரெனினும் ஒக்கும். ரஹஸ்ய சம்சயங்கள் - ரஹஸ்யமான விஷயங்களைப்பற்றிய ஸம்சயங்கள். வெளிப்படைச் சம்சயங்கள் - வெளிப்படையான விஷயங்களைப்பற்றிய ஸந்தேகங்கள். திருதராஷ்டிர! அவர் எல்லா ஞானிகளினும் மிகப் பெரியோ ராதலால், உன்னுடைய எத்தகைய ஸந்தேகங்களையும் நன்ருய்ப் போக்கித் தெளிவிப்பார் என்பது கருத்து. (௨, ௫)

௪.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌕𑌿𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌵𑍇𑌦 𑌤𑌦𑍍𑌭𑍂𑌯𑍋 𑌯𑌨𑍍𑌮𑍇 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃 ।
𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌵𑌿𑌦𑍁𑌰 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌶𑍇𑌷𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍𑌤𑌵 ॥

௫.

𑌵𑌿𑌦𑍁𑌰 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑍋𑌨𑌾𑌵𑌹𑌂 𑌜𑌾𑌤𑍋 𑌨𑌾𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍁𑌤𑍍𑌸𑌹𑍇 ।
𑌕𑍌𑌮𑌾𑌰𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌯𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌵𑍇𑌦 𑌤𑌾𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀𑌮𑌹𑌮𑍍 ॥

௪.

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான் :

ஸநாதநர் எனக்கு எதனை உரைக்கவேண்டுமோ, அதனை நீ அதிகமாக அறியாயோ? உனது ஞானம் மிகுதியா யிருந்தால், நீயே எனக்கு (அதனைச்) சொல்வாயாக.

விதுரன் நல்லோரொழுக்கத்தைக் கொள்ளுதல்.

௫.

விதுரன் சொல்லலுற்றான் :

நான் சூத்திரயோநியில் பிறந்தவன் ஆதலால், வேறு சொல்லத் துணிகிறேனில்லை. ஆனால், ஸநத்குமாரருடைய ஞானம் எதுவோ, அதனை நான் சாச்வதமாக அறிகின்றேன்.

சாச்வதமான மோக்ஷத்தைத் தருவதனால், ஞானம் சாச்வதமாக உபசரிக்கப்பட்டது.

திருதராஷ்டிரனுக்கு முற்கூறிய அளவினும் அதிகமாக தத்துவத்தை உரைப்பதிலே விதுரனுக்கு மனம் எழவில்லை; ஏனெனில், பிறர்க்குத் தத்துவத்தை உபதேசிப்பதிலே தனக்கு உரிமையில்லை என்று நினைத்து விட்டான்; வேதமோதுதல் முதலியவற்றை சாஸ்திரம் சூத்திரர்களுக்கு மறுக்கின்றமையின்.

சங்கை:—அப்படியிருந்தாலும், விதுரன் மெய்ப்பொருளைக் கண்ட ஞானியாதலால், விரும்பிக்கேட்போருக்கு அதனை உரைக்க வல்லவனே தான்; எனவே, திருதராஷ்டிரனுக்கு உண்மையை உரைப்பதிலே விதுரனுக்கு என் உள்ளக்கிளர்ச்சி உண்டாயிற்றில்லை?

ஸூ.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀𑌂 𑌹𑌿 𑌯𑍋𑌨𑌿𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌃 𑌸𑍁𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑌪𑌿 𑌯𑍋 𑌵𑌦𑍇𑌤𑍍 ।
𑌨 𑌤𑍇𑌨 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿 𑌤𑍇 ॥

ஸமாதாநம் :—சுருதி ஸ்மிருதிகளின் கட்டளையை மீறுது ஆன்றோரொழுக்கத்தைப் பாதுகாக்கின்ற ஞானிகளின் மனம் விலக்கப்பட்ட விஷயங்களைத் தலைப்படாது. தலைப்படுமாயின்,—ஜனங்கள், "எல்லாம் அறிந்த விதுரனே தனக்குரிமையில்லாக் காரியத்தைச் செய்துவிட்டான்; ஒன்றும் அறியாத நான் ஏன் இந்த ஆகாத காரியத்தைச் செய்தல் கூடாது?" எனமயங்கி நல்வழியினின்றும் விலகித் தீவழியை மேற்கொள்வார்கள்; அவர்களது வேதவியவஹாரங்களும் உலகவியவஹாரங்களும் உயர்ந்தோனைப் பின்பற்றுமாதலின் என்க. அவ்வாறே, பகவான் ஜனங்களது இயல்பையும், ஞானி நடக்கவேண்டிய முறையையும் அருளிச்செய்கிறார் :

"𑌯𑌦𑍍𑌯𑌦𑌾𑌚𑌰𑌤𑌿 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌤𑌤𑍍𑌤𑌦𑍇𑌵𑍇𑌤𑌰𑍋 𑌜𑌨𑌃 ।
𑌸 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌲𑍋𑌕𑌸𑍍𑌤𑌦𑌨𑍁𑌵𑌰𑍍𑌤-
𑌤𑍇" ॥

"மேலானவன் எதெதைச் செய்கின்றானோ, அததையே மற்றை ஜனங்கள் (செய்கிறார்கள்); அவன் எதனைப் பிரமாணமாகக் கொள்கின்றானோ, அதனை உலகம் அநுஸரிக்கின்றது"—(வே - கீ - ௩ - ௨௧);

"𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌂 𑌜𑌨𑌯𑍇𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌜𑍋𑌷𑌯𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌮𑌾-
𑌚𑌰𑌨𑍍 ॥"

"ஞானியானவன், கர்மத்திற் பற்றுள்ள அஜ்ஞானிகளுக்குப் புத்திக்கலக்கத்தை உண்டாக்கக் கூடாது [அவர்களது புத்தியைக் கலையும்படிசெய்தல் கூடாது]; ஸகலகர்மங்களையும் (தானும்) நன்றாகச் செய்துகொண்டு, (அவர்களையும்) செய்விக்கவேண்டும்"—(வே - கீ - ௩ - ௨௬). (௫)

பிறர்க்கு உரைப்பதிலே பிராமணர் உரியவர்.

ஸூ.

பிராமணப்பிறவியை அடைந்தவனாய் எவன் மிக்க ரஹஸ்யமானதையும் சொல்வானோ, (அவன்) அதனால் தேவர்களா(லும்) இகழப்படமாட்டான், ஆதலால், உனக்கு இதனைச் சொல்லுகிறேன்,

பிராம்மணனுகப் பிறந்தவன் கேட்போர்க்குஉரிய அதிரஹஸ்யமான விஷயங்களை வெளிப்படையாக அறிவித்தாலும், அதனுல் இந்திரன்முதலிய தேவர்களும் அவனை இழ்ந்துரைக்கமாட்டார்கள்; எனவே, மனிதர் அவனை இகழமாட்டா ரென்பது சொல்லாமையே விளங்கும்.

பாரத! நீ கேட்டதைச் சொல்ல நான் துணிகிறேனில்லை; ஏனெனில்,

"அத்யாபநமத்யயநம் யஜநம் யாஜநம் ததா |
தாநம் ப்ரதிக்ரஹஶ்சைவ ஷட் கர்மாண்யக்ரஜந்மந꞉ ||"

"ஓதுவித்தலும், ஓதலும், வேள்விசெய்தலும், வேள்விசெய்வித்தலும், அவ்வாறே ஈதலும், ஏற்றலுமாகிய ஆறும் பிராமணனுடைய தொழில்கள" (மநு - க௦ - எரு)

எனக் கூறப்படுகின்ற இவற்றுள் ஓதுவித்தலாகிய [பிறர்க்கு உரைத்தலாகிய] பிராமண தருமத்தை சூத்திரயோநியிற் பிறந்த நான் என்தருமமாகக் கொள்ளுதல் பழியையும், பாவத்தையும் விளைக்குமன்றோ. அவ்வண்ணமே, ஸ்மிருதி கூறுகின்றது:

"ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண꞉ பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் | ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய꞉ பரதர்மோ பயாவஹ꞉ ||"

"நன்கு அநுஷ்டிக்கப்பட்டதான பிறருடைய தருமத்தைக் காட்டிலும் குணமில்லாத [நன்கு அநுஷ்டிக்கப்படாத] தன்தருமம் மேலானது; தன்தருமத்திலே சாதல் நல்லது; பிறருடைய தருமம் அபாயத்தை விளைப்பது"—(வே - கீ - ங - ஙரு);

"ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண꞉ பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் | ஸ்வபாவநியதம் கர்ம குர்வந்நாப்நோதி கில்பிஷம் ||"

"தனக்குரிய கர்மம் நலமில்லாத (தாயினும், தான்) நன்ருய் அநுஷ்டித்த பிறரது கர்மத்தினும் மிகவும் நல்லது. ஸ்வபாவத்தா லமைந்த கர்மத்தைச் செய்கிறவன் பாவத்தை யடையமாட்டான்"—(வே - கீ - கஅ - சஎ). (சு)

எ.

த்ருதராஷ்ட்ர உவாச ॥

ப்ரூஹி விதுர த்வம் மே புராணம் தம் ஸநாதநம் |
கதமேதேந தேஹேந ஸ்யாதிஹைவ ஸமாகம: ॥

அ.

வைசம்பாயந உவாச ॥

சிந்தயாமாஸ விதுர: தம்ருஷிம் ஸம்சிதவ்ரதம் |
ஸ ச தச்சிந்திதம் ஜ்ஞாத்வா தர்சயாமாஸ பாரத ॥

கூ.

ஸ சைநம் ப்ரதிஜக்ராஹ விதித்ருஷ்டேந கர்மணா | [சு॥
ஸுகோபவிஷ்டம் விச்ராந்தம் அதைநம் விதுரோऽப்ரவீத்.

விதுரன் திருதராஷ்டிரனுக்காக ஸநத்குமாரரை வரவழைத்தல்.

எ.

திருதராஷ்டிரன் சொல்லலுற்முன் :

விதுர ! நீ அந்தப்பழமை(ச் சிறுவரான)ஸநாதநரை எனக்காகப் பேச வேண்டும். இங்கேயே இந்த சரீரத்தோடு சந்தித்தல் எப்படி ஆகும் ?

நான் ஸநத்குமாரரை இப்பொழுதே நேரில் தரிசித்து சம்பாஷித்து ஈடேறுமாறு, நீ அவரை இங்கே வந்தருளும்படி செய்யவேண்டும் என்பது பொருள். (எ)

அ.

வைசம்பாயநர் சொல்லலுற்முர் :

பிராணிகளிடத்து கருணைமிகுந்த ஞானியான

விதுரன், கடுமையான விரதம்பூண்ட அந்த ரிஷியைத் தியானித்தான். பாரத ! அவரும் அந்தத் தியானத்தை அறிந்து (அங்கு தன்னைத்) தோற்றுவித்தார்.

கடுமையான விரதமாவது - ஸநத்குமாரர் தாம் பிறந்தபொழுதே "நான் இல்லறத்தைத் தலைப்படேன்" என வரைந்து கொண்டது. (அ)

விதுரன் ஸநத்குமாரரை உபசரித்துப் பிரார்த்தித்தல்.

கூ.

அவன் விதிகளிற் கூறிய உபசாரங்களால் இவர்க்கு வழிபாடு செய்தனன். ஸுகமாக உட்கார்ந்து ஆறுதலடைந்தபின்னர், விதுரன் இவரோடு பேசலாயினன் ;

க0.

𑌭𑌗𑌵𑌨𑍍 𑌸𑌂𑌶𑌯𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌾𑌨𑌸𑍇 ।
𑌯𑍋 𑌨 𑌶𑌕𑍍𑌯𑍋 𑌮𑌯𑌾 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌤𑌮𑌸𑍍𑌮𑍈 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

கக, கஉ.

𑌯𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾𑌯𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌾𑌤𑌿𑌗𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌲𑌾𑌭𑌾𑌲𑌾𑌭𑍌 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑍌 𑌯𑌥𑍈𑌨𑌂 𑌨 𑌜𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑍌 ॥
𑌵𑌿𑌷𑌹𑍇𑌰𑌨𑍍 𑌭𑌯𑌾𑌮𑌰𑍍𑌷𑍌 𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌪𑌿𑌪𑌾𑌸𑍇 𑌮𑌦𑍋𑌦𑍍𑌭𑌵𑍌 ।
𑌅𑌰𑌤𑌿𑌶𑍍𑌚𑍈𑌵 𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑍀 𑌚 𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑍌 𑌕𑍍𑌷𑌯𑍋𑌦𑌯𑍌 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤𑍀𑌯𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

க0.

“பகவானே! திருதராஷ்டிரனுடைய மனத்தினுள் ஒரு ஸம்சயம் இருக்கின்றது. நான் அதனை விரித்துரைத்தல் ஆகாது. நீங்கள் (அதனை) இவனுக்கு விரித்துரைக்கவேண்டும்.

கக, கஉ.

“மனிதர்கட்குத் தலைவனான இவன் எதனைக் கேட்டு எல்லாத் துன்பங்களையும் கடந்திட்டானவானோ, (அதனை அறிவுறுத்தவேண்டும்). லாபமும் நஷ்டமும், விரும்பப்படுவேதும் வெறுக்கப்படுவேதும், மூப்பும் இறப்பும், அச்சமும் பழிக்குப் பழிவாங்கலும், பசியும் தாகமும், மதமும் பெருமிதமும், கவலையும் சோம்பலும், காமமும் கோபமும், கேடும் ஆக்கமும் இவனைத் தாக்காவண்ணம் (இவன் எதனால் நித்யமான ஆநந்தத்தைப் பெறுவானோ, அதனை உரைத்தருளவேண்டும்).”

ஸ்ரீமத் ஸநத்ஸுஜாதீயத்தில் முதல் அத்தியாயம் முற்றும்.

மதம் - செல்வக்களிப்பு. பெருமிதம் - அதிகாரம் முதலியவற்றால் மேன்மேல் கிளர்க்கும் மேட்டிமை. (கக, கஉ)

முதல் அத்தியாயம்.

பதவுரை.

க.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌃	திருதராஷ்டிரன்
𑌉𑌵𑌾𑌚	சொன்னான் :
𑌵𑌿𑌦𑍁𑌰	விதுரனே !
𑌤𑍇	உன்னால்
𑌵𑌾𑌚𑌾	வாக்கினால்
𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌂	சொல்லப்படாதது
𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍	ஒன்று
𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌯𑌦𑌿	இருந்தால்,
𑌤𑌤𑍍	அதனை
𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌤𑍇	கேட்க விரும்புகின்ற
𑌮𑍇	எனக்கு
𑌬𑍍𑌰𑍂𑌹𑌿	சொல் ;
𑌹𑌿	ஏனெனில்,
𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿	ஆச்சரியமானவற்றை
𑌭𑌾𑌷𑌸𑍇	பேசுகிறாய்.

உ, ங.

𑌵𑌿𑌦𑍁𑌰𑌃	விதுரன்
𑌉𑌵𑌾𑌚	சொன்னான் :
𑌭𑌾𑌰𑌤	பரதவம்சத்திற் பிறந்த
𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰	திருதராஷ்டிரனே !
𑌯𑌃	எந்த

𑌪𑍁𑌰𑌾𑌣𑌃	பழைய
𑌕𑍁𑌮𑌾𑌰𑌃 𑌵𑍈	சிறுவரான
𑌸𑌨𑌾𑌤𑌨𑌃	ஸநாதநர் (எனப்படுகின்ற)
𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤𑌃	ஸநத்குமாரர்
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃	" இறப்பென்பது
𑌨 𑌅𑌸𑍍𑌤𑌿	இல்லை "
𑌇𑌤𑌿	என்று
𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚	கூறினரோ,
𑌸𑌃	அவர்
𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌨𑍍	ரஹஸ்யமாயும்
𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌨𑍍 𑌚	வெளிப்படையாயுமுள்ள
𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍	எல்லா
𑌤𑍇	உனது
𑌹𑍃𑌦𑌯𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌨𑍍	மனச்சம்சயங்களையும்
𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿	விரித்துச்சொல்வர் ;
𑌮𑌹𑌾𑌰𑌾𑌜	பெரிய அரசனே !
𑌸𑌰𑍍𑌵𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌂	எல்லா ஞானிகளிலும்
𑌵𑌰𑌃	(அவர்) சிறந்தவர்.

௪.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌃	திருதராஷ்டிரன்
𑌉𑌵𑌾𑌚	சொன்னான் :
𑌸𑌨𑌾𑌤𑌨𑌃	ஸநாதநர்
𑌯𑌤𑍍	எதனை
𑌮𑍇	எனக்கு
𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍	கூறவேண்டுமோ,
𑌤𑌤𑍍	அதனை
𑌤𑍍𑌵𑌮𑍍	நீ
𑌭𑍂𑌯𑌃	அதிகமாக

𑌨 𑌵𑍇𑌤𑍍𑌸𑌿 𑌕𑌿𑌂	அறியாயோ ?
𑌵𑌿𑌦𑍁𑌰	விதுரனே !
𑌤𑌵	உனக்கு
𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌶𑍇𑌷𑌃	அறிவுமிச்சம்
𑌅𑌸𑍍𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍	இருந்தால்,
𑌤𑍍𑌵𑌮𑍍 𑌏𑌵	நீயே
𑌬𑍍𑌰𑍂𑌹𑌿	(அதனைச்) சொல்.

௫.

𑌵𑌿𑌦𑍁𑌰𑌃	விதுரன்
𑌉𑌵𑌾𑌚	சொன்னான் :
𑌅𑌹𑌮𑍍	நான்
𑌶𑍂𑌦𑍍𑌰𑌯𑍋𑌨𑍌	சூத்திரயோநியில்
𑌜𑌾𑌤𑌃	பிறந்தவன் ;
𑌅𑌤𑌃	இதனினும்
𑌅𑌨𑍍𑌯𑌤𑍍	வேறு
𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍	சொல்ல
𑌨 𑌉𑌤𑍍𑌸𑌹𑍇	துணிகிறேனில்லை.
𑌤𑍁	ஆனால்,
𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌯	ஸநத்குமாருடைய
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃	ஞானம்
𑌯𑌾	எதுவோ,
𑌤𑌾𑌮𑍍	அதனை
𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀𑌮𑍍	சாச்வதமாக
𑌅𑌹𑌮𑍍	நான்
𑌵𑍇𑌦	அறிகிறேன்.

௬.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀𑌮𑍍	பிராமணனுடைய
𑌯𑍋𑌨𑌿𑌮𑍍	யோநியை

ஆபந்ந:	அடைந்த
ய:	எவன்
ஸுகுஹ்யம் அபி	மிக ரஹஸ்யமானதையும்
வதேத் ஹி	சொல்வானே,
(ஸ:)	(அவன்)
தேந	அதனால்
தேவாநாம்	தேவர்களாலும்
ந கர்ஹ்ய:	இகழத்தகுந்தவனல்லன்.
தஸ்மாத்	ஆதலால்,
ஏதத்	இதனை
தே	உனக்கு
ப்ரவீமி	சொல்லுகிறேன்.

௭.

த்ருதராஷ்ட்ர:	திருதராஷ்டிரன்
உவாச	சொன்னான் :
விதுர	விதுரனே !
த்வம்	நீ
மே	எனக்காக
தம்	அந்த
புராணம்	பழைய
ஸநாதநம்	ஸநாதநரை
ப்ரவீஹி	சொல் ;
இஹ ஏவ	இப்பொழுதே
அநேந	இந்த
தேஹேந	சரீரத்தோடு
ஸமாகம:	சந்தித்தல்
கதம்	எப்படி
ஸ்யாத்	ஆகும் ?

அ.

𑌵𑍈𑌶𑌂𑌪𑌾𑌯𑌨𑌃	வைசம்பாயநர்
𑌉𑌵𑌾𑌚	சொன்னார் :
𑌵𑌿𑌦𑍁𑌰𑌃	விதுரன்
𑌶𑌂𑌸𑌿𑌤𑌵𑍍𑌰𑌤𑌮𑍍	கடுமையான விரதமுடைய
𑌤𑌮𑍍	அந்த
𑌋𑌷𑌿𑌮𑍍	ரிஷியை [ஸநத்குமாரரை]
𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌸	நினைத்தான்.
𑌭𑌾𑌰𑌤	பரதவம்சத்திற் பிறந்தோனே !
𑌸𑌃 𑌚	அவரும்
𑌤𑌸𑍍𑌯	அதனை
𑌚𑌿𑌨𑍍𑌤𑌿𑌤𑌮𑍍	(அதாவது, அவன்) நினைத்ததை
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾	அறிந்து
𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌮𑌾𑌸	(தன்னைத்) தோற்றுவித்தார்.

கூ.

𑌸𑌃 𑌚	அவன்
𑌏𑌨𑌮𑍍	இவரை
𑌵𑌿𑌧𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌨	விதியில் காணப்பட்ட
𑌕𑌰𑍍𑌮𑌣𑌾	கர்மத்தால்
𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌗𑍍𑌰𑌾𑌹	ஏற்றுக்கொண்டான்.
𑌅𑌥	பின்பு
𑌵𑌿𑌦𑍁𑌰𑌃	விதுரன்,
𑌸𑍁𑌖𑍋𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌮𑍍	சுகமாக உட்கார்ந்தவராய்
𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌮𑍍	ஆறுதலடைந்த
𑌏𑌨𑌮𑍍	இவரை
𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍	சொன்னான்.

கo.

𑌭𑌗𑌵𑌨𑍍	பகவானே !
𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍	ஒரு

𑌸𑌂𑌶𑌯𑌃	ஸந்தேகம்
𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌸𑍍𑌯	திருதராஷ்டிரனுடைய
𑌮𑌾𑌨𑌸𑍇	மனத்தில்
(𑌵𑌰𑍍𑌤𑌤𑍇)	(இருக்கின்றது.)
𑌯𑌃	எது
𑌯𑌥𑌾	என்னால்
𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍	சொல்ல
𑌨 𑌶𑌕𑍍𑌯𑌃	தகாததோ,
(𑌤𑌮𑍍)	(அதனை)
𑌯𑍂𑌯𑌮𑍍	நீங்கள்
𑌅𑌸𑍍𑌮𑍈	இவனுக்கு
𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍	சொல்ல
𑌅𑌰𑍍𑌹𑌥	தகுந்தவரா யிருக்கிறீர்கள்.

கக, கஉ.

𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃	மனிதர்கட்குத் தலைவனான
𑌅𑌯𑌮𑍍	இவன்
𑌯𑌮𑍍	எதனை
𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾	கேட்டு
𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌾𑌤𑌿𑌗𑌃	எல்லாத் துன்பங்களையும் கடந்தவனாக
𑌭𑌵𑍇𑌤𑍍	ஆவானோ,
(𑌤𑌮𑍍)	(அதனை)
(𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍)	(சொல்ல)
(𑌅𑌰𑍍𑌹𑌥)	(தகுந்தவரா யிருக்கிறீர்கள்.)
𑌯𑌥𑌾	எப்படி
𑌲𑌾𑌭𑌾𑌲𑌾𑌭𑍌	லாபமும் நஷ்டமும்,
𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑍌	வேண்டப்படுவதும் வெறுக்கப்படுவதும்,

𑌜𑌰𑌾𑌮𑍃𑌤𑍍𑌯𑍌	மூப்பும் இறப்பும்,
𑌭𑌯𑌾𑌮𑌰𑍍𑌷𑍌	அச்சமும் பழிவாங்கலும்,
𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌪𑌿𑌪𑌾𑌸𑍇	பசியும் தாகமும்,
𑌮𑌦𑌦𑌰𑍍𑌪𑍌	மதமும் பெருமிதமும்,
𑌆𑌰𑍍𑌤𑌿𑌃 𑌚 𑌚𑍈𑌵	கவலையும்,
𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑍀 𑌚	சோம்பலும்,
𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑍌	காமமும் கோபமும்,
𑌕𑍍𑌷𑌯𑍋𑌦𑌯𑍌	கேடும் ஆக்கமும்
𑌏𑌨𑌮𑍍	இவனை
𑌨 𑌵𑌿𑌷𑌹𑌨𑍍𑌤𑍇	பாதிக்கமாட்டாவோ,
(𑌤𑌥𑌾)	(அப்படி)
(𑌤𑌤𑍍)	(அதனை)
(𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑍍)	(சொல்ல)
(𑌅𑌰𑍍𑌹𑌸𑌿)	(தகுந்தவரா யிருக்கிறீர்கள்.)

𑌅𑌥

𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤𑍀𑌯𑌮𑍍 ॥

௧.

𑌵𑍈𑌶𑌂𑌪𑌾𑌯𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌤𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑍋 𑌮𑌨𑍀𑌷𑍀
𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌵𑌿𑌦𑍁𑌰𑍇𑌰𑌿𑌤𑌂 𑌤𑌤𑍍 ।
𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤𑌂 𑌰𑌹𑌿𑌤𑍇 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾
𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌬𑍁𑌭𑍂𑌷𑌨𑍍 ॥

௨.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤 𑌯𑌦𑌿𑌦𑌂 𑌶𑍃𑌣𑍋𑌮𑌿
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌹𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌤𑌵𑍋𑌪𑌦𑍇𑌶𑌮𑍍 ।

இரண்டாம் அத்தியாயம்.

திருதராஷ்டிரன் ஸநத்குமாரரை வினவுதல்.

௧.

வைசம்பாயனர் சொல்லலுற்றார் :

பின்னர், அறிவுள்ள அரசன் திருதராஷ்டிரன் - விதுரன்கூறிய அவ்வார்த்தையை நன்குமதித்து, பேரறிவைப் பெறக் கருதி, தனிமையிலே ஸநத்ஸுஜாதரை உயர்ந்த ஞானத்தைப்பற்றி வினவலாயினன் :

தனிமையிலே - பேதையரில்லாத இடத்திலே என்க. பேரறிவைப் பெறக் கருதி - அவித்யையினால் அபகரிக்கப்பட்ட ஆத்மாவை வித்யையினால் அடைய விரும்பி என்றபடி. (௧)

௨.

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான் :

ஸநத்ஸுஜாதரே ! இவ்விரண்டினுள் எது சரியானது ? க. இறப்பு இல்லை யென்பது உமது உபதேசமாம் எனக் கேள்விப்படுகின்றேன் :

𑌦𑍇𑌵𑌾𑌸𑍁𑌰𑌾 𑌹𑍍𑌯𑌾𑌚𑌰𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑍍
𑌅𑌮𑍃𑌤𑍍𑌯𑌵𑍇 𑌤𑌤𑍍𑌕𑌤𑌰𑌨𑍍𑌨𑍁 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

௩.

𑌶𑍍𑌰𑍀𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌅𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌕𑍇𑌚𑌿𑌨𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌚𑌾𑌪𑌰𑍇 ।
𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑍋 𑌰𑌾𑌜𑌨𑍍𑌯𑌥𑍈𑌤𑌨𑍍𑌮𑌾 𑌵𑌿𑌶𑌙𑍍𑌕𑌿𑌥𑌾𑌃 ॥

இதுவா ? உ. தேவர்களும் அஸுரர்களும் சாகாமைக்காக ப்ரஹ்மசர்யத்தை அநுஷ்டித்தார்கள் : அதுவா ?

மரணமென்பதே இல்லை யென்று நீங்கள் உமது மாணுக்கர்கட்கு உபதேசித்ததாக விதுரன் சொல்லுகிறுன். மற்று, இந்திரன் முதலிய தேவர்களும், விரோசநன் முதலிய அஸுரர்களும் மரணம் உண்டு எனக் கொண்டு, அது வாராமைக்காக ப்ரஹ்மசர்யத்தை, குருகுலவாஸத்தைச் செய்தார்கள் என்று சாந்தோக்ய சுருதி (அ - எ - உ . . . . . .)கூறுகின்றது. மரணம் என்று ஒன்று இல்லை என்பது உமது கொள்கையாயின்,— அங்ஙனம் தேவாஸுரர்கள் அஃது உண்டு எனக் கொண்டு, அது வாராமைக்காக ப்ரஹ்மசர்யத்தை அநுஷ்டித்தல் எவ்வாறு கூடும்? ஆகவே, இறப்பு உண்டு, இல்லை என்னும் இவ்விருகொள்கைகளுள் எது நேரானதோ, அதனை எனக்கு அருளிச்செய்யவேண்டும். (உ)

ஸநத்ஸுஜாதர் விடை கூறுதல்.

௩.

இவ்வாறு வினவப்பட்ட

ஸ்ரீஸநத்ஸுஜாதர் சொல்லலுற்றுர் :

சாகாமை கர்மத்தா லாகின்றது எனச் சிலர் கூறுகிறுர்கள். மற்றையோர்கள், சாதலென்பது இல்லை யெனக் கூறுகிறுர்கள். அரசனே ! இதனை உள்ளபடி உரைக்கின்றேன், கேள். ஸந்தேகப்படாதே.

அஜ்ஞானிகள் - மிருத்தியு என்பது வாஸ்தவமாகவே உண்டு என்றும், கர்மத்தை அநுஷ்டிப்பதனுல் அதனை விலக்குதல் கூடும் என்றும் நினைத்து, சாகாமை வாராமைக்காக வைதிககர்மங்களைச் செய்கிறுர்கள். (இவர்களைப்பற்றி வே - கீ - 47 ஆம் பக்கத்தைப் பார்க்க.) ஞானிகளோ ப்ரஹ்மமாகிய ஆத்மாவைத்தவிர வேறென்றையும் காணுதவ

௪.

உபே ஸத்யே க்ஷத்ரியாத்ய ப்ரவ்ருத்தே
மோஹோ ம்ருத்யு: ஸம்மதோ ய: கவீநாம் ।
ப்ரமாதம் வை ம்ருத்யுமஹம் ப்ரவீமி
ஸதாப்ரமாதமம்ருதத்வம் ப்ரவீமி ॥

ராய், மிருத்தியு என்பது இல்லை யென்கிறார்கள். அரசனே! மிருத்தியு உண்டு, இல்லை என்னும் இவ்விருகொள்கைகளையும் ஒன்றோடொன்று முரணுதபடி கூறுகின்றேன்; கேட்பாயாக. (௩)

தன்னை யறியாத தடுமாற்றமே மிருத்தியு என்பது.

௪.

எப்படி?—

க்ஷத்திரிய! இரண்டும் சரியானவையாய் படைப்புக்காலம் முதல் தலைப்பட்டுவருகின்றன. ஞானிகள் மயக்கத்தை மிருத்தியுவாகக் கோள்கிறார்கள். நானோ, தமோற்றத்தையே மிருத்தியுவாகச் சொல்லுகிறேன்: எப்பொழுதும் தமோற்றமின்மையை - சாகாமையாகக் கூறுகிறேன்.

வினா:—உண்டு என்பதும், இல்லை என்பதும் தம்முள் மாறுபட்டவை. ஆகவே, மிருத்தியு உண்டு என்பதும், மிருத்தியு இல்லை என்பதும் ஆகிய இவ்விரண்டும் எவ்வாறு நேராகும்?

விடை:—இது குற்றமன்று; மிருத்தியு என்று ஒருபொருள் உண்மையிலே இல்லையாதலின். உடம்பு முதலியவற்றோடு கூடுதல் - பிறப்பென்பதும், அவற்றை விட்டுப் பிரிதல் - இறப்பென்பதும் உலகவழக்கு. இது, இங்கே சொல்லுவான் குறிப்பன்று; ஏனெனில், பிறந்ததற்கு இறப்பும் இறந்ததற்குப் பிறப்பும் இன்றியமையாதவையாம் (வே - கீ - ௨ - ௨௭).—ஆனல், அங்ஙனம் மிருத்தியு என்பது யாதெனின்—கூறுவோம்: ஆத்மாஅல்லாத உடம்பு முதலியவற்றை ஆத்மாவாகக்கொள்ளுதல் எதுவோ, அதுவே, அந்தப்பொய்யுணர்வே மிருத்தியு என்று அறிஞர்சிலர் கருதுகிறார்கள். எனது கருத்தோ அப்படியன்று.— மற்றென்னவெனின்,— கவனித்தலின்மையே, தடுமாற்றமே, ஆத்மஇயல்பான ப்ரஹ்மநிலையினின்றும் பிறழ்தலே, தன்நிலையினின்றும் தவறுதலே மிருத்தியு எனக் கூறுகிறேன். இந்தத் தவறுனது கீழ்க்கூறிய பொய்யுணர்விற்கும் காரணமாய், ஆத்மா இன்னதென்று அறியாத அஜ்ஞான

ரு.

𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌦𑍍𑌵𑍈 𑌅𑌸𑍁𑌰𑌾𑌃 𑌪𑌰𑌾𑌭𑌵𑌨𑍍
𑌅𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌾𑌃 𑌸𑍁𑌰𑌾𑌶𑍍𑌚 ।
𑌨 𑌵𑍈 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰 𑌇𑌵𑌾𑌤𑍍𑌤𑌿 𑌜𑌨𑍍𑌤𑍂𑌨𑍍
𑌨𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌮𑍁𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 𑌹𑌿 ॥

மாம். இந்த அஜ்ஞானமே கீழ்க்கூறிய பிறப்பிறப்பு முதலிய எல்லா அநர்த்தங்களையும் விளைக்கின்ற மிருத்தியு என்க. இனி, தானாய், தன் நிலையாய், ஆநந்தஅறிவான ப்ரஹ்மநிலையாய்நிற்றலென்பது சாகாமை எனக் கூறுகின்றேன்; அவ்வாறே, சுருதி கூறுகின்றது :

"𑌪𑌰𑌂𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍁𑌪𑌸𑌂𑌪𑌦𑍍𑌯 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌰𑍂𑌪𑍇𑌣𑌾-
𑌭𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇"
"பரம்பொருளான ஒளியாகித் தன்வடிவமாகின்றான்"—
(சா - அ - ௩ - ௪).

உடம்பு முதலியவற்றோடு கூடிநிற்றல் - வாழ்வென்பதும், அவற்றை விட்டுப் பிரிதல் - இழவென்பதும் அவிவேகிகட்காம். விவேகிகட்கோ, தன்நிலைதவறுதல் இழவாம்; தன்நிலைநிற்றல் வாழ்வாம் என்பது தேர்ந்த கருத்து.

பகவான் ஸநத்ஸுஜாதர், சாகாமையைக் கர்மத்தால் பெறலாம் (௨-௩) என்னும் கொள்கையை மேலே (௨ - ௯) மறுப்பர். அதனை அங்கே கண்டுகொள்க. (௪)

ரு.

வினா :—தடுமாற்றமே மிருத்தியு எனவும், அஃதின்மையே சாகாமை எனவும் எப்படித் தெரிகின்றன ?

விடை :—கூறுவோம் :

தடுமாற்றத்தாலன்றோ அஸுரர்கள் தோற்றார்கள். ஸுரர்கள், தடுமாற்றமின்மையினால் ப்ரஹ்ம மானார்கள். நிச்சயமாகவே, மிருத்தியு புலி போலப் பிராணிகளைத் தின்பதில்லை; ஏனெனில், இதற்கு உருவமே காணப்படவில்லை.

விரோசநன் முதலான அஸுரர்கள் தடுமாற்றத்தினால், ஆத்மஇயல்பான ப்ரஹ்மநிலையினின்று நழுவுதலால், ஆத்மாஅல்லாத உடம்பு முதலியவற்றை ஆத்மாவாகக்கொள்ளுதலால் தோல்வி யடைந்தார்கள் (சா -

அ - கஉ - ௬). அவ்வண்ணமே, இந்திரன் முதலான தேவர்கள் ஆத்ம இயல்பான ப்ரஹ்மநிலையாய்நிற்பதனல் ப்ரஹ்ம மானர்கள் (சா - அ - கஉ - ௬).

அல்லது, இவ்வாறு பொருள் கொள்ளலாம்:— **அஸுரர்கள்** - சிற்றின்பத்தினுள் அழுந்தி, ஆத்மாவை அறியாதுகிடக்கும் பிராணிகள் (அஸுஷு ப்ராணேஷு இந்த்ரியேஷு ஏவ ரமந்தே இதி அஸுரா:=இந்திரியங்களிலேயே இன்புறுகிறவர்கள்). அவர்கள் தடுமாற்றத்தினல், தன்நிலைதவறியுள்ளமையினல் உடல் முதலியவற்றை ஆத்மாவாகக்கொண்டு தோற்றர்கள், அதாவது விலங்குமுதலிய பிறவிகளைப் பெற்றர்கள் (ஐ - ஆ - உ - க - க). **ஸுரர்கள்** - ஆத்மாவை அறிந்தவர்கள் (ஸ்வஸ்மின் ஆத்மன்யேவ ரமந்தே இதி ஸுரா: = தன்ஆத்மாவினிடத்தேயே இன்புறுகிறவர்கள் :

> " ஆத்மன்யேவ ரதிரேஷாம் ஸ்வஸ்மின் ப்ரஹ்மணி வா-
> வ்யயே । தே ஸுரா இதி விக்யாதா: . . . . ॥"
>
> " எவர்கட்கு இன்பம் தன்னிடத்திலேயே, அசைவிலா
> ஆத்மாவான ப்ரஹ்மத்தினிடத்திலேயே உள்ளதோ,
> அவர் "ஸுரர்" எனப் பிரஸித்தர்").

அவர்கள் தடுமாற்றமின்மையினல் [ஆத்மாவான ப்ர்ஹ்மமாய்நிற்றலால்] ப்ரஹ்ம மானர்கள், பொய்யுணர்வும் அதனது செய்கையும் நீங்கியவராய் ப்ரஹ்மமாகவே ஆனர்கள்.

வின :—இனி, ஸகலப்பிராணிகளையும் ஸம்ஹரிக்கின்ற வேறோர் மிருத்தியு ஒருவன் பிரஸித்தமா யிருக்கிறன். ஆகவே, தடுமாற்றமே மிருத்தியு என எவ்வாறு கூறலாகும்?

விடை :—இது குற்ற மில்லை; அவன், புலிபோலப் பிராணிகளைத் தின்பதில்லையாதலின். தின்பானயின்,—புலியினது உருவம்போல, அவனது உருவம் காணப்படவேண்டும்; ஆனல், காணப்படவில்லை. ஆதலால், தடுமாற்றமே நேரான மிருத்தியுயென்க. அல்லது, உண்மை நோக்கிலே, மிருத்தியு என்பதே இல்லை என்க- (௫)

கூ.

𑌯𑌮𑌂 𑌤𑍍𑌵𑍇𑌕𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌮𑌾𑌹𑍁𑌃
𑌆𑌤𑍍𑌮𑌾𑌵𑌸𑌨𑍍𑌨𑌮𑌮𑍃𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑍍 ।
𑌪𑌿𑌤𑍃𑌲𑍋𑌕𑍇 𑌰𑌾𑌜𑍍𑌯𑌮𑌨𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌃
𑌶𑌿𑌵𑌃 𑌶𑌿𑌵𑌾𑌨𑌾𑌮𑌶𑌿𑌵𑍋𑌽𑌶𑌿𑌵𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

அஜ்ஞானிகள் ஸூர்யன்மகனை மிருத்தியுவாகக் கோள்கிறர்கள்.

கூ.

சங்கை:—ஆயின், உலகநோக்கிலே யமன் என்னும் மிருத்தியு காணப்படுகின்றான்; ஸத்யவான்மனைவி ஸாவித்ரி அவனைக் கண்டு பேசியதாகக் கூறப்படுகின்றமையின் (வே - ஸா). ஆகவே, அவளது கண்ணிற்குப் புலப்பட்ட உருவமுடைய அந்த மிருத்தியு யார்? எனில்,—

ஸமாதாநம்:—கூறுவோம்:

ஆனால், சிலர் மிருத்தியுவை இதனினும் வேறாக யமனாகக் கூறுகிறார்கள்; அவனை - மனத்தினுள் வசிப்பவனாகவும், சாகாதவனாகவும், ப்ரஹ்மத்திலே அமர்ந்தவனாகவும் கூறுகிறார்கள். அக்கடவுள் நல்லோர்க்கு நல்லோனாய், தீயோர்க்குத் தீயோனாய், பிதிருலோகத்திலே ராஜ்யத்தை ஆளுகிறான்.

சிற்றின்பவிஷத்தால் மதி மயங்கி, ஆத்மாவிற்குப் புறம்பாக இரண்டாவதை, த்வைதத்தைக் காணும் அஜ்ஞானிகள் வேறோர் மிருத்தியுவைக் கூறுகிறார்கள்: கீழ் எடுத்துக்காட்டிய தடுமாற்றமென்னும் மிருத்தியுவினும் வேறாக ஒரு மிருத்தியுவைக் கொள்கிறார்கள்.—எப்படி?—மிருத்தியு என்பான் - ஸூர்யனது மகன். அவன் பாவஞ்செய்தோரைத் தண்டிப்பவன் என யாவர்க்கும் தெரிந்துள்ளமையால், எல்லாரது மனத்திலும் இருப்பவன்என்க. அன்றியும், அவன் சாகா இயல்பினன், ஆத்மாவான ப்ரஹ்மத்திலே நிலைத்தவன்; காடகோபநிஷத்தினுள், நசிகேதஸுக்கு ப்ரஹ்மவித்யையை உபதேசித்தருளிய ஆசார்யனாதலின். மற்றும், அவன் நல்வினைசெய்பவர்க்கு இன்பத்தைத் தருபவன், தீவினை செய்தவர்க்குத் துன்பத்தைக் கொடுப்பவன்: பட்சபாதமில்லாது நடுவு நிலைமையி லிருந்தே சகலப்பிராணிகட்கும் தருமமாய் நியாயம் தீர்த்துப் பிதிருலோகத்தை ஆண்டுவரும் தர்மராஜன் என்றபடி.

எ.

ஶ்ருஸ்ராஷேஷ நிஷ்ஸரதே நராணாம்
க்ரோத: ப்ரமாதோ மோஹமயஶ்ச ம்ருத்யு: ।

இவ்வாருகவே, பகுத்தறிவுள்ளவர்கள் இவனை மிருத்தியுவாகக் கொள்வதில்லை. எப்படியெனில்,—கேட்டிற்குக் காரணம் எதுவோ, அது மிருத்தியு என்பது. தமோற்றம் என்னும் பெயருடைய அஜ்ஞான மானது, பிறப்புமுதலியகேட்டிற்குப்போல, இறப்பு முதலிய கேட்டிற் கும் அடிக்காரணமாயுளது. அவ்வாறே, சுருதி ஸ்மிருதிகள் கூறுகின் றன :

"ந சேதிஹாவேதீந்மஹதீ விநஷ்டி:"
"(ஆத்மாவை) இங்கு அறியாவிடில், பெரிய கேடு (வந்தி ட்டது)"—(கே - கரு);
"ம்ருத்யுர்வை தம:"
"(விவேகத்தை மூடுகின்ற) இருளான அறியாமையே மிருத்தியுவாம்"—(பிரு - க - ரு - உஅ);
"அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ: ।"
"அறிவு அஜ்ஞானத்தினுல் மூடுண்டுகிடக்கின்றது; அத னுல் பிராணிகள் மயங்குகின்றன"—(வே - கீ - டு - கடு).

ஆதலால், அறிவுடையோராவார் - தமோற்றமாகிய அஜ்ஞானத் தையே மிருத்தியுவாக, தீங்குகள் யாவற்றிற்கும் நேரான அடிக்காரண மாகக் கொள்கிருர்கள். விவேகமில்லாதவரோ ஸூர்யனது மகனை மிருத் தியுவாக, தீங்குகட்குக் காரணமாகக் கொள்கிருர்கள். மற்று, அவன் அப்படியல்லன்; அவர்களைச் சிக்ஷித்து நல்வழிப்படுத்துகின்ற தர்மராஜ னும் என்பது கருத்து. (சு)

அஜ்ஞான காரியங்கள்.

எ.

இவ்வாருக, "தமோற்றமே மிருத்தியு" என மிருத்தியு இன்ன தென்று நிச்சயிக்கப்பட்டது. இனி, அதனது விகாரங்களைக் கூறுகின் ருர் :

மனிதர்கட்கு இந்தத் தமோற்றமென்னும் மிருத்தியுவானது-காமத்தி னின்று கோபமாகவும், மயக்கவடிவாகவும் வெளிக்கிளம்புகின்றது. ஒரு

अहंकारेणैव चरन्विमार्गान्
न चात्मनो योगमुपैति कश्चित् ॥

அ.

ते मोहितास्तद्वशे वर्तमानाः
इतः प्रेतास्तत्र पुनः पतन्ति ।
ततस्तं देवा अनुपरिप्लवन्ते
ततो मृत्युं मरणादभ्युपैति ॥

வன் செருக்கினுல் வழியல்லா வழிகளில் அலேகிறவனுய், ஆத்மஸமாதியை அடைவதில்லே.

மிருத்தியுவானது, அதாவது அஜ்ஞானமானது காமமாக மாறுகின்றது. பின்னர், அக்காமம், தான் விரும்பியதைப் பெருது தடைப்பட்ட வழி, கோபமாக மாறிடுகின்றது (வே - கீ - ௩ - ௬௨). பின்பு, அக்கோபத்தால் மயக்க முண்டாக (வே - கீ - ௩ - ௩எ), அதனுல் ஒருவன்-செய்வன ஒழிவன தெரியாதவனுய், சுருதி ஸ்மிருதிகட்கு மாருன வழியை, நான் என்னும் அகங்காரத்தருக்கினுல் நேரான வழியாக நினைத்து, அதுனுள் கெட்டலேந்து திரிகிருன்; ஆகவே, ஆத்மநிலேயைக் கூடுதல் இல்லே யென்பதாம். (எ)

அ.

மேலும்,

அவர்கள் (அதனுல்) மயக்கப்பட்டு அதனது வசத்திலே இருப்பவராய் இதனினின்று இறந்துபோய், அதனினின்று மீட்டும் கீழே வீழ்கிருர்கள். பின்னர் இந்திரியங்கள் (கர்மத்திற்கு)ஏற்ப அவனேச் சுற்றிவளே கின்றன. ஆதலால், அவன் சாதலினின்று சாதலேப் பெறுகிருன்.

அகங்காரமாகவும், காமமாகவும், மற்றுமிவைபோன்றதாகவும் விகாரப்பட்டிருக்கும் அஜ்ஞானத்தினுல் உடம்பு முதலியவற்றை ஆத்மாவாகக் கொண்டவர் அந்த அஜ்ஞானமாகிய மிருத்தியுவிற்கு வசப்பட்டு நின்று, இவ்வுலகிலே இறந்து, பரலோகத்தை யடைந்து, தமது கர்மம் கழியுமளவும் அங்கே வாழ்ந்து, மறித்தும் உடம்பை யெடுத்தற்காக இவ்வுலகினுள் வந்து வீழ்கிருர்கள். அவ்வாறே, சுருதியும் ஸ்மிருதியும் கூறுகின்றன:

"तस्मिन्यावत्संपातमुषित्वाथैतमेवाध्वानं
पुनर्निवर्तन्ते"

கூ.

[illegible]

"(கர்மம்) கழிந்திடும்வரை அதில் வசித்துப், பின்பு, இதே வழியை மீளத் திரும்புகிறார்கள்"— (சா - டு - க0 - டு)

"க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி"

"புண்யம் கழிந்தவளவிலே, மநுஷ்ய லோகத்தைப் புகுகிறார்கள்"—(வே - கீ - கூ - உக)

பின்னர் உடம்பை எடுக்குமளவிலே, அவரவர்செய்த கர்மங்கட்குத் தக்கவாறு இந்திரியங்கள் அவரைச் சூழவளைந்துகொள்கின்றன, அவரைத் தமக்கு வசப்படுத்திக்கொள்கின்றன; கொள்ளவே அவர் அவற்றினது வேலைக்காரர்கள்போன்று அவற்றைப் பின்பற்றி இறப்பைப் பெறுகிறார்கள்; பின்பு வேறோர் பிறப்பை அடைகிறார்கள்; மறுபடியும் மரிக்கிறார்கள், மீண்டும் பிறக்கிறார்கள். இவ்வாறாக, பிறப்பு இறப்பென்னும் சக்கிரத்தில் ஏறிக்கொண்டு சுற்றிச்சுற்றிச் சுழல்கிறார்கள்.

ஆத்மஸ்வரூபத்தைக் கண்டுணராமையினால் அவர்கள் ஸம்ஸாரக்கடலினுள் மூழ்கி ஆசை கவலை முதலிய முதலை முதலியவற்றால் அங்குமிங்கும் கவ்வப்பட்டுத் தத்தளித்து தவிக்கிறார்கள் என்பது கருத்து. ()

கூ.

இனி, ஸம்ஸாரக்கட்டிற்குக் கர்மமும் காரணமாம்:—எப்படி ?—

கர்மப்பயனிலே ஆசையுள்ளவர்கள் கர்மம் தோன்றுமளவிலே அதனைத் தொடர்கிறார்கள்; மிருத்தியுவைக் கடத்தலில்லை. உடம்போடுநிற்பவன் உண்மைப்பொருளைக் கூடுதலை உணராமையினால் எப்புறத்தும் போகப்பற்றோடு செல்லுகிறான்.

கர்மத்தினுடைய பயனின்மேல் அவாவுடையவர்கள் "இக்கர்மத்தினால் இப்பயன் கிடைக்கும்" என அக்கர்மம் வந்தவழி அதனைத் தலைப்பட்டு அதனது பயனை யடைகிறார்கள். எனவே, மிருத்தியுவைக் கடந்

௧௦.

𑌤𑌦𑍍𑌵𑍈 𑌮𑌹𑌾𑌮𑍋𑌹𑌨𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂
𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌗𑌤𑌿𑌰𑍍𑌹𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾 ।
𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌯𑍋𑌗𑌾𑌭𑌿𑌹𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾
𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌨𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍 𑌸𑌮𑌨𑍍𑌤𑌾𑌤𑍍 ॥

துநிற்றல் ஆதலில்லை; பிறப்பிறப்பாகிய ஸம்ஸாரத்தினுள் மீண்டும்மீண்டும் சுற்றிவருகிறார்கள் என்பது பொருள்.

வினா :—அவர்கள் கர்மம் வந்தவழி கர்மப்பயனில் ஆசையுள்ளவராய் எதனால் ஸம்ஸாரத்தினுள் இவ்வாறு கிடக்கிறார்கள் ?

விடை :—உண்மைப்பொருளைக் கூடுதலை அறியாமையினால், தன் ஆத்மஸ்வரூபத்தை பரம்பொருளான ப்ரஹ்மமாகக் கண்டுணராமையினால் என்க.

ஆதலால், உடம்புமுதலியவற்றை ஆத்மாவாகக்கொண்டவர் “ இந்திரியவிஷயங்களை அநுபவிப்பதிலே ரஸ மிருக்கின்றது” என்னும் நினைப்பினால் எவ்விடத்தும் செல்லுகிறார்கள். குருடன் மேடு, பள்ளம், முள் உள்ள இடம் முதலியவற்றின்மேல் தட்டித்தடுமாறுவதுபோல், விவேகமில்லாதவன் இந்திரியவிஷயஇன்பத்தை வேண்டி எங்கும் தட்டித்தடுமாறுகிறான் என்பது தேர்ந்த கருத்து. (௯)

௧௦.

அன்றியும்,

அதுவோ இந்திரியங்கட்குப் பெருமயக்கமாம். பொய்ப்பொருள்களுடைய சம்பந்தத்தால் இவனுக்கு (ஸம்ஸார)கதி என்றுமுள்ள (தாகின்றது. இவன்) பொய்ப்பொருள்களுடைய சம்பந்தத்தாலே உள்ளேயுள்ள ஆத்மா தாக்கப்பெற்றவனாய், விஷயங்களைக் கருதிக்கொண்டு, (அவற்றையே) எப்புறத்தும் தொழுகிறான்.

பெருமயக்கமாவது - இந்திரியபோகங்களைத் தேடித் திரிதல். எவனுக்கு விஷயங்களின்மீது வாஸ்தவபுத்தி இல்லையோ, அவனது இந்திரியங்கள் விஷயங்களின்மேல் செல்லா. செல்லாமையினால், அவன் உள்ளேயுள்ள ஆத்மாவைநோக்கியே செல்லுதலாகும். ஆகவே, மயக்கம் தொலையுமென்க. மற்று, எவனுக்கு விஷயங்களின்மீது வாஸ்தவபுத்தி உள்ளதோ, அவன் வெளியிலுள்ள விஷயங்களின்மீது செல்லுகின்ற

கக.

அபித்யா வை ப்ரதமம் ஹந்தி சைநம்
காமக்ரோதௌ க்ருஹ்ய சைநம் து பஸ்சாத் |
ஏதே பாலாந் ம்ருத்யவே ப்ராபயந்தி
தீராஸ்து தைர்யேண தரந்தி ம்ருத்யும் ||

மையால், உள்ளேயுள்ள எகமான பரம்பொருளை ஆத்மாவாக நேரே காண்பதில்லை. ஆதலால், வெளிநோக்குடையவன் விஷயங்களின்மேல் மறித்துமறித்துச் சென்றுஅலைகிறான்; அலையஅலைய,போகஆசை மேன் மேல் கிளர்க்கின்றது. அவ்வண்ணமே, பகவான் மநு அருளிச்செய் கிறார்:

"ந ஜாது காம: காமாநாமுபபோகேந ஶாம்ய-தி | ஹவிஷா க்ருஷ்ணவர்த்மேவ பூய ஏவாபிவர்த-தே ||"

"காமம், விரும்பிய விஷயங்களை அநுபவித்தலால் ஒரு காலும் அடங்குவதில்லை; தீ ஹவிஸினாற்போல, மிகுதி யாகவே வளர்கின்றது"—(மநு - உ - கூச)

இவ்வாறு ஓசைமுதலிய கற்பனைப்பொருள்களோடு கூட்டுறவு நிகழுங் கால், ஸம்ஸாரத்தினுள் கிடந்துஉழலும் நிலைமையானது மனிதனுக்கு அவச்யம் அமைவதாகின்றது. ஏனெனில்,—அவன், அவித்யையினால் கற்பிக்கப்பட்ட பொய்ப்பொருள்களைக் கூடி, தனது இயல்பான ப்ரஹ் மாத்மநிலையை இழந்தவனாய், ஸ்திரீமுதலிய விஷயங்களைக் கருதி, பரம் பொருளைத் தொழாது, அந்த ஸ்திரீமுதலான விஷயங்களையே தொழு கின்றான். (க0)

கக.

அதனால் என்னவெனின்,—கூறுவோம், கேட்பாயாக:

(விஷயங்களைக்) கருதுதல் இவனை முதலில் கெடுக்கின்றன. பின்பு, காமமும் கோபமும் இவனைப் பிடித்துக்(கெடுக்கின்றன). இவை சிறுவர் களைச் சாதற்குச் செலுத்துகின்றன. தீரர்களோ தைரியத்தினால் சாதலைக் கடக்கிறார்கள்.

ஸ்திரீ பணம் முதலான விஷயங்களை மனத்தினுள் கருதிக்கொண்டிரு த்தல் எதுவோ, அது மனிதனை முதலில் கெடுக்கின்றது, தன்நிலை பிறழ

கஉ.

𑌯𑍋𑌽𑌭𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌨𑍁𑌤𑍍𑌪𑌤𑌿𑌷𑍍𑌣𑍂𑌨𑍍𑌨𑌿𑌹𑌨𑍍𑌯𑌾𑌤𑍍
𑌅𑌨𑌾𑌦𑌰𑍇𑌣𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 ।

ச்செய்கின்றது. இவ்வாறு அவற்றைக் கருதிக் கேடுற்று நிற்குங்கால் அவன் கருதியுள்ள விஷயம் அவனுக்கு நேர்ப்பட்டவளவிலே, காமம் அவனை உடனே பிடித்துத் தாக்குகின்றது. காமத்தால் தாக்கப்பட்ட அவனை கோபம் பிடித்துச் சீரழிக்கின்றது. விஷயத்தியாநமும், காமமும் கோபமும் தமக்கு வசப்பட்ட மூடரான பகுத்தறிவில்லா ஜனங்களை சாவென்பதில், மூப்பு இறப்பு பிணிமுதலியவற்றில் தள்ளுகின்றன. அவ்வாறே, சுருதியையும் காணலாம்:

"𑌪𑌰𑌾𑌚𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑌨𑍁𑌯𑌨𑍍𑌤𑌿 𑌬𑌾𑌲𑌾𑌸𑍍𑌤𑍇 𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌰𑍍-
𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌤𑌤𑌸𑍍𑌯 𑌪𑌾𑌶𑌮𑍍 । 𑌅𑌥 𑌧𑍀𑌰𑌾 𑌅𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌂
𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑌧𑍍𑌰𑍁𑌵𑍇𑌷𑍍𑌵𑌿𑌹 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑌨𑍍𑌤𑍇 ॥"

"சிறுவர்கள் வெளியிலுள்ள காமப்பொருள்களைத் தொடர்கிறார்கள். அவர்கள் மிருத்தியுவினுடைய பரந்த வலையை அடைகிறார்கள். விவேகிகளோ (ஸ்வரூபநிலையான) சாகாமையை அநித்யங்களுள் நித்யமாக அறிந்து, இங்கே (ஒன்றையும்) வேண்டுவதில்லை"—(கட - உ - க - உ).

மற்று, தீரர்களோ ஸ்திரீமுதலான விஷயங்களைத் திண்மையான விவேகத்தால் வென்று, பரம்பொருளை ஆத்மாவாக அறிந்து மிருத்தியுவைக் கடந்திடுகிறார்கள். அவ்வாறே, சுருதியும் கூறுகின்றது:

"𑌨𑌿𑌚𑌾𑌯𑍍𑌯 𑌤𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍁𑌖𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇"

"அதனை அறிந்து, மிருத்தியுவினுடைய வாயினின்றும் தப்புகிறான்"—(கட - க - ங - கரு). (கக)

ஞானிக்கு மிருத்தியு இல்லை.

கஉ.

அந்தத் தீரர்கள் எவ்வாறு மிருத்தியுவை, மூப்பு இறப்புமுதலியவற்றைக் கடக்கிறார்கள்?— கூறுவோம்:

மேலே எழும்பி எழும்பி விழும் விஷயங்களை எவன் (நிலையில்லவையாக, அசுத்தமாக, துன்பமாக) நினைத்துத்தள்ளுகின்றானோ, அசட்டையி

𑌸 𑌵𑍈 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑌿𑌵𑌾𑌤𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾
𑌹𑍍𑌯𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌯𑍋𑌽𑌭𑌿𑌹𑌨𑍍𑌤𑍀𑌹 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 ॥

௧௯.

𑌕𑌾𑌮𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍀 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑌨𑍁 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌵𑍍𑌯𑍁𑌦𑌸𑍍𑌯 𑌧𑍁𑌨𑍁𑌤𑍇 𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌰𑌜𑌃 ॥

ஞல் (அவற்றை மீட்டும்) நினையாதிருக்கின்றனோ, எந்த ஞானி இவ்வாறு காமங்களைத் தொலைக்கின்றனோ, அவன் மிருத்தியுபோல ஆகி மிருத்தியுவை விழுங்குகின்றான்.

அசட்டையினல் - அமேத்யத்தைப் பார்த்தலிலே எப்படி உதாசீனமுள்ளதோ, அப்படிப்போன்ற உதாசீனத்தினல். இது இங்கே உணரத்தக்கது :

"𑌵𑌿𑌷𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌸𑌂𑌹𑌾𑌰𑌂 𑌯𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌵𑌿𑌵𑍇𑌕𑌤𑌃 ।
𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌰𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑌿𑌤𑌿 𑌖𑍍𑌯𑌾𑌤𑌃 𑌸 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌵𑌿-
𑌤𑍍𑌕𑌵𑌿𑌃 ॥"

"எவன் விவேகத்தினல் விஷயங்களை எதிர்த்து ஸம்ஹரித்தலைச் செய்கின்றனோ, அவன் மிருத்தியுவிற்கு மிருத்தியு எனப் பெயர்பெற்றவன், கற்றவன், தன்னையறிந்தவன், தேர்ந்தவன்." (௧௨)

காமத்தின் தீமையும், ஞானத்தின் நன்மையும்.

௧௯.

மற்று, காமங்களைப் பாராட்டி

காமங்களைப் பின்பற்றுகின்ற மனிதன் காமங்களைத் தொடர்ந்தே அழிகிறான். காமங்களைத் தள்ளி(யுள்ள)மனிதன் எத்தகைய குற்றத்தையும் உதறுகின்றான்.

எத்தகைய குற்றத்தையும் உதறுகின்றான் - இப்பிறப்பிலாயினும், முற்பிறப்பிலாயினும் தேடிக்கொண்ட புண்யம் பாவம் முதலாகிய கர்மத்தை விவேகபுத்தியினல் துடைக்கின்றான். (௧௯)

கச.

𑌦𑍇𑌹𑍋𑌽𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂𑌨𑌰𑌕𑍋𑌽𑌯𑌂𑌪𑍍𑌰𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇।
𑌗𑍃𑌧𑍍𑌯𑌨𑍍𑌤 𑌏𑌵 𑌧𑌾𑌵𑌨𑍍𑌤𑌿 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌵𑌭𑍍𑌰𑌮𑍁𑌨𑍍𑌮𑍁𑌖𑌾𑌃 ॥

கரு.

𑌅𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌨𑍍𑌯𑌤𑍍
𑌨𑌾𑌧𑍀𑌯𑌤𑍇 𑌤𑌾𑌰𑍍𑌣 𑌇𑌵𑌾𑌸𑍍𑌯 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌃 ।
𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌲𑍍𑌲𑍋𑌭𑌾𑌨𑍍𑌮𑍋𑌹𑌮𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾

கச.

ஆயின், கறுத்துச் சுருண்ட குழலும், மலர்ந்த முகமும், சிரித்த பார்வையும், குயிலன்ன குரலும், இறுமாந்து மதர்த்த கொங்கையும், இன்னுமிவைபோன்ற இனிமையெல்லாம் செவ்வனே வாய்ந்த பொன் மேனியிலே படும் இழுக்கு யாது? எனின்,—கூறுகிறார்:

பிராணிகளுடைய இவ்வுடலானது அசேதநமாக, நரகமாகக் காணப் படுகின்றது. (அவிவேகிகள் காமத்தை) அவாவிக்கொண்டே பள்ளத்தை எதிர்நோக்கிச் செல்பவராய் ஓடுகிறார்கள்.

இச்சரீரம் மண்ணாங்கட்டிபோல ஜடமாயுள்ளது; இரத்தம், கோழை, ஊன், புழு, மலம், மூத்திரம் முதலியன நிரம்பிக்கிடக்கின்றமையால் நரகமாயுமுள்ளது. இவ்வாறு மிக்கு அருவருக்கத்தக்கதாயினும், மூடர்கள் மாதரது உடலை விரும்பிமதித்து, விளக்கின்மேல் விட்டில் போல, அவ்வுடலின்மேல் சென்றுசென்று மயங்குகிறார்கள். குருடர் மேடுபள்ளங்களிலே தட்டுண்டு தடுமாறி வீழ்தல்போல, இந்திரியவிஷயக்குருடர்கள் ஸ்திரீமுதலானவற்றிலே தட்டுண்டு தடுமாறி வீழ்கிறார்கள் என்பதாம். (கச)

கரு.

இவ்வாறு எவர்கள் வீழ்கிறார்களோ, அவர்கட்குச் சரீரமும் வீணாம்:

க்ஷத்திரிய! வேறொன்றையும் நினையாதவன் (வேதாந்தநூல்களைப்) படிப்பதில்லை. இவனுக்கு(ச் சரீரம்)வைக்கோலினால் செய்த புலிபோன்றது. எந்த இவன் உனது சரீரத்தினுள் கோபத்தாலும் லோபத்தாலும்

ஸ வை ம்ருத்யுரந்தஶ்ஶரீரே ய ஏஷ꞉ |

௧௬.

ஏவம் ம்ருத்யும் ஜாயமாநம் விதித்வா
ஜ்ஞாநே திஷ்டந்ந பிபேதீஹ ம்ருத்யோ꞉ |
விநஶ்யதே விஷயே தஸ்ய ம்ருத்யு꞉
ம்ருத்யோர்யதா விஷயம் ப்ராப்ய மர்த்ய꞉ ||

மயக்கமும் அச்சமும் (கூடிய)உள்ளேயுள்ள ஆத்மாவா(யிருக்கின்றானோ) அவனே மிருத்தியுவாம்.

எவன் ஸ்திரீமுதலான விஷயங்களை அவாவிக்கொண்டு அவற்றின் மேல் குதித்துக்குதித்து ஓடுகின்றானோ, அவன் தன்ஆத்மாவான ப்ரஹ்மஸ்வரூபத்தை அறியாதவனாய் அந்த ப்ரஹ்மத்தைப்பற்றிய நூலை அறிவதில்லை. அவ்வாறு சிற்றின்பங்களுள் அழுந்திக்கிடப்பவன் நான்கு வேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையும் அறிந்த வித்வானாயினும், அவனுக்கு இம்மநுஷப்பிறவி வீணாம்; வைக்கோலினால் செய்த புலிபோல என்க. இவ்வாறு சரீரம் வீணென்பதுமாத்திர மில்லை; எவன் இவ்வாறிருக்கின்றானோ, அவனே அவனுக்கு மிருத்தியுவாம், கேட்டிற்குக் காரணமாம்.—எப்படி யெனில்,— எவன் இந்திரியங்களை வெல்லாது, கோபம் லோபம் முதலியவற்றைக்கொண்டுநிற்பவனாய் விஷயங்களின்மேல் செல்லுகின்றானோ, அவனே அவனுக்கு, அதாவது, தானே தனக்குப் பகைவனாம். அவ்வாறே, பகவான் அருளிச்செய்துள்ளார்:

"ஆத்மைவ ரிபுராத்மந꞉ |"

"தானே தனக்குச் சத்துரு"—(வே - கீ - ௬ - ௫). (௧௫)

௧௬.

அந்தச் சத்துருவான மிருத்தியுவைத் தொலைப்பது எதனால்? எனின்,—"ஞானத்தினால்" என்கிறார்:

மிருத்தியுவை இவ்வாறு கிளைப்பதாக உணர்ந்து ஞானத்திலே நிற்பவன், இங்கே மிருத்தியுவினின்று அஞ்சுவதில்லை. (பிராணிகளின்) சரீரம் யமனது எல்லையை யடைந்து (அழிந்திடுமாறு) போல, மிருத்தியு அவனது எல்லையிலே அழிந்திடுகின்றது.

கீழ்க்கூறிய(௨ - ௪) தமோற்றம்என்னும் அஜ்ஞானமே காமம் கோபம் லோபம் முதலியவையாக மாறி, பிறப்பிறப்பு முதலான எல்லாத்

கஎ.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌯𑌾𑌨𑍇𑌵𑌾𑌹𑍁𑌰𑌿𑌜𑍍𑌯𑌯𑌾 𑌸𑌾𑌧𑍁𑌲𑍋𑌕𑌾𑌨𑍍
𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑍃𑌤𑌾𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌾𑌨𑍍 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑍀𑌹 𑌵𑍇𑌦𑌾𑌃
𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑌿 𑌕𑌥𑌂 𑌨𑍁 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 ॥

தீங்குகட்கும் விதையா யுள்ளது எனத் தெளிவாய் உணர்ந்து, அக்காமம் கோபம் முதலிய குற்றங்களைக் கடிந்து, அமைதி பொறுமை அடக்கம் முதலிய குணங்களைத் தேடி, ஆத்மாவை பேரறிவான நித்யாநந்தமாகக் கண்டவன் மிருத்தியுவினின்று அஞ்சமாட்டான். அவ்வாறே, சுருதி கூறுகின்றது :

"𑌆𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 । 𑌨 𑌬𑌿𑌭𑍇𑌤𑌿 𑌕𑍁𑌤-
𑌶𑍍𑌚𑌨"

"ப்ரஹ்மாநந்தத்தை அறிந்தவன் எதனின்றும் பயப்படு வதில்லை"—(தை - உப - உ - சு)

அவன் ஏன் அஜ்ஞானமிருத்தியுவிற்கு அஞ்சுவதில்லை? எனில்,—கூறுவோம் : யமனுக்கு எதிர்ப்படும் பிராணி உடனே மாய்ந்திடுமாறுபோல, பரம்பொருளைக் கண்டுநிற்கும் ஞானிக்கு எதிர்ப்படும் அஜ்ஞானம் என்னும்மிருத்தியு சடக்கென்று விரைந்து மாய்ந்திடுகின்றது. ஆதலால், அவன் தானே தன்நிலையில் நிற்பவனாய்த், தானானவனாய்த், தன்னையல்லது வேறு காண்பதில்லை. இரண்டாவதுஎன்று ஒன்று இருந்தாலன்றோ, அதனினின்று அஞ்சுத லாகும் என்க. (கசு)

அஜ்ஞானிக்கே கர்மமாம்.

கஎ.

ஸம்ஸாரக்கட்டிற்குக் கர்மம் காரணம் என்றும், மோக்ஷத்திற்கு ஞானம் ஸாதநம் என்றும் கீழ்க் கூறப்பட்டவற்றிலே திருதராஷ்டிரன் வினவலாயினன் :

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான் :

வேதங்கள், மிகப்புண்யமான என்றுமுள்ள எந்த நல்லலோகங்களையே இருபிறப்பாளர்க்கு வழிபாட்டினால் (அடையப்படுவனவாகக்) கூறுகின்றனவோ, அவற்றை மேலான புருஷார்த்தமாக இங்கே உரைக்கின்றன. அறிந்தவன் இக்கர்மத்தைச் செய்வதில்லை (யென்பது) எப்படி ?

௧௮.

𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌏𑌵𑌂 𑌹𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍁𑌪𑌯𑌾𑌤𑌿 𑌤𑌤𑍍𑌰
𑌤𑌦𑌰𑍍𑌥𑌜𑌾𑌤𑌂 𑌚 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌵𑍇𑌦𑌾𑌃 ।
𑌸 𑌨𑍇𑌹 𑌆𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌂 𑌪𑌰𑌾𑌤𑍍𑌮𑌾
𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿 𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌨𑌿𑌹𑌤𑍍𑌯𑌮𑌾𑌰𑍍𑌗𑌾𑌨𑍍 ॥

ப்ரஹ்மலோகம் முதலியன - இந்திராதிலோகங்களைக்காட்டிலும் பரிசுத்தமானவையாம்; வியவகாரநிலையைக்காட்டிலும் நீட்டித்துநிற்பவையாம். பிராமணர்முதலானோர் இந்தலோகங்களை ஜ்யோதிஷ்டோமம் முதலிய வழிபாடுகளால் அடைகிறார்கள். இவ்வாறு இவ்வுலகங்களையடைதலே இந்த ஸம்ஸாரத்தில் பெறவேண்டிய முக்கிய புருஷார்த்தமாம். என்று வேதங்கள் கூறுகின்றன; கூறவே, ஞானியாவான் லோகங்களை யடைதற்குச் சாதநமான கர்மத்தை அநுஷ்டிப்பதில்லை யென்றல் எப்படி? (௧௭)

௧௮.

இவ்வாறு வினவப்பெற்ற பகவான்

ஸநத்ஸுஜாதர் சொல்லலுற்றார்:

அஜ்ஞானி இவ்வாறு (நினைத்து) அதிலே செல்லுகிறான். அப்படியே, வேதங்களும் பயன்களையெல்லாம் கூறுகின்றன. (மற்று, ஞானியான) அவன் இதிலே செல்வதில்லை; (நேரான) வழியினால் பரமாத்மாவாகிப் பரம்பொருளை அடைகிறான்; வழியல்லாதவற்றைத் தொலைக்கின்றான்.

இவ்வாறு ப்ரஹ்மலோகம் முதலியவற்றின் இன்பத்தைக் கருதுகின்ற அஜ்ஞானி அவற்றிற்கு ஸாதநமான கர்மத்தை மேற்கொள்ளுகிறான். அப்படியே, வேதங்களும் பலபல பயன்களை அந்த அஜ்ஞானிக்கே கூறுகின்றன. ஆதலால்(அஜ்ஞானிக்கே கூறுகின்றமையால்), ஞானியானவன் ப்ரஹ்மலோகம் முதலியவற்றினுடைய அநித்யமான இன்பத்திலாயினும், அதற்குச் சாதநமான கர்மத்திலாயினும் தலைப்படுதலில்லை. அங்ஙனமவன் யாது செய்கிறான்? எனில்,—அவன் பரம்பொருளை ஆத்மாவாகக் கண்டுணர்ந்து ப்ரஹ்மமாகி ப்ரஹ்மத்தை அடைகிறான். ஸம்ஸாரத்திற்குக் காரணமாய் ஆத்மாவை யடைதற்கு விரோதியான வழிகளை முற்றும் அறத் தொலைத்துவிடுகின்றான் என்க. (௧௮)

கக.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌕𑍋𑌽𑌸𑍌 𑌨𑌿𑌯𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌤𑌮𑌜𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂
𑌸 𑌚𑍇𑌦𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 ।
𑌕𑌿𑌂 𑌵𑌾𑌽𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌥𑌵𑌾𑌽𑌸𑍁𑌖𑌂 𑌚
𑌤𑌨𑍍𑌮𑍇 𑌵𑌿𑌦𑍍𑌵𑌨𑍍 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍 ॥

ஜீவனும், ப்ரஹ்மமும் உண்மையிலே ஒரேபொருள்.

கக.

தமோற்றம் என்னும் அஜ்ஞானம் - மிருத்தியு என்றும், தமோற்ற மின்மையாகிய தன்நிலைநிற்றல் - சாகாமைஎன்றும் கூறி (உ - ச), அந்த மிருத்தியு காமம்முதலாக மாறினவழி (உ - எ, அ.....) அனர்த்தங் கட்கெல்லாம் காரணமாம் என்று காட்டி(உ - எ........கடு),அந்த மிருத்தியுவை அழித்தல் ஆத்மஅறிவினால் ஆகும் என உணர்த்தி(உ - கரு), ப்ரஹ்மலோகம் முதலியனவெல்லாம் அஜ்ஞானியைப்பற்றியுள்ளமை யால் அவை புருஷார்த்தமாகா என ஞானவழியினால் மோக்ஷம் உபதே சிக்கப்பட்டது (உ - கஅ). படவே, "பரமாத்மாவாகிப் பரம்பொருளை யடைகிறான்" (உ - கஅ) என ஜீவனும்ப்ரஹ்மமும் ஒன்று என்பதிலே திருதராஷ்டிரனுக்குச் சந்தேகம் எழுகின்றது :

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான் :

அது முறையே இந்த எல்லாமாக இருந்தால், பிறவாத அப்பழம்பொருளை ஏவுகிறவன் யார்? அதற்குச் செய்யவேண்டியது என்ன? அல்லது, (அதற்கு நேர்ந்த) அனர்த்தம் என்ன? (முற்றும்) அறிந்தவரே! அதனை யெல்லாம் எனக்கு அருளிச்செய்வீராக.

நித்யமாய், அஸங்கமாய், நிர்விகாரியாய்ப், பரிசுத்தமான தனி அறிவாய் விளங்கும் பேரானந்தப்பொருள், முறையே ஆகாசம்முதலான இப்பிரபஞ்சத்தைப் படைத்து, அதனுள் புகுந்து உடம்பொடு நிற்பதாய்ப் பிறந்து இறந்து உழலுகின்றது எனில்,—அங்ஙன மப்பொருளை, பிறவாத இறவாத பரமாத்மாவை இவ்வாறு ஸம்ஸாரத்தினுள் உழலுமாறு யார் ஏவுகின்றான்?

அதனையல்லது வேறு இல்லாமையினால், அது தானே அவ்வாறிருக்கின்றது எனில்,—பலபல பிறவிகளில் அது அவ்வாறிருப்பதனால் அத

உ0.

ஸநத்ஸுஜாத உவாச ॥

ஶோஷோ ஜஹா நத்ரு விஹேஶயோகெ
ஹ்ரு நாஶியோமெ ந லவஞ்தி நித்ரா: ।
தஶாஉஸ்ரு நாயிகூஉிெவெதி கிஞ்சிசு
சு நாஶியோமெ ந லவஞ்தி வாஹஸ: ॥

ற்கு அடையவேண்டிய பயன் என்ன? அடையவேண்டுவன யாவும் அடையப்பெற்றநிலை அதுவாதலின்.

அல்லது, அது பலபல பிறவிகளில் செல்லாது ஸம்ஸாரத்தினுள் நுழையாது தானே தன்மகிமையில் சும்மாவிருப்பதனுல், அதற்கு வரும் தீங்கு என்ன?

"ஏவுவோன் - ஈச்வரன்; ஏவப்படுவோன் - ஜீவன்" என்பது முதலான வேற்றுமையெல்லாம் காணப்படுகின்றமையால், பேதம் இருக்கவேவேண்டும் என்பதாம். பகவானே! இவ்வாறு கிளம்புகின்ற என்ஸம்சயங்களைப் போக்கவேண்டும். (கக)

உ0.

இதற்கு ஸமாதாநத்தை

ஸநத்ஸுஜாதர் சொல்லலுற்ருர்:

இதிலே வேறுபாடுள்ளவழி பெரிய தீங்கு(வந்திட்டது). அநாதிஸம்பந்தத்தால் ஜீவர்கள் இருக்கிருர்கள். அவ்வாருக இதனது பெருமை சிறிதும் சிதைத லில்லை. ஜீவர்கள் அநாதிஸம்பந்தத்தால் (பற்பலராக) இருக்கிருர்கள்.

எவன் ப்ரஹ்மத்தினிடத்து வேற்றுமையைக் காண்கின்ருனே, அவனுக்குப் பிறப்பு பிணி மூப்பு இறப்பு முதலிய கேடுகள் வருகின்றன. என்று சுருதிகள் உணர்த்துகின்றன:

"யஜா ஹ்யேவெஷ வ தஸ்மிந்நுஜரஜேரம் குருதெ। அய தஸ்ய லயம் லவதி"

"எப்பொழுது இவன் இதனிடத்துச் சிறிதாயினும் வேற்றுமையைக் கொள்கின்ருனே, அப்பொழுது அவனுக்குப் பயம் இருக்கின்றது"—(தை - உப - உ - எ)

"ம்ருத்யோ: ஸ ம்ருத்யுமாப்நோதி ய இஹ நாநேவ பச்யதி।"

"எவன் இங்கே வேறுபட்டது போலக் காண்கின்றானோ, அவன் சாதலினின்று சாதலைப் பெறுகிறான் [மீண்டும் பிறக்கிறான், மீண்டும் இறக்கிறான்]"—(கட - ச - க0)

"அத யோ(அ)ந்யாம் தேவதாமுபாஸ்தே அந்யோ(அ)ஸா-வந்யோ(அ)ஹமஸ்மீதி ந ஸ வேத"

"இனி, எவன் 'அவன் வேறு, நான் வேறு' என வேறோர் தெய்வத்தைத் தொழுகின்றானோ, அவன் (உண்மையை) அறிவதில்லை"—(பிரு - க - ச - க0)

அல்லது, ஜீவனும் ப்ரஹ்மமும் வெவ்வேறு பொருள்களாம் எனக் கொண்டால்,—

"தத்த்வமஸி"

"நீ அதுவாக இருக்கிறாய்"—(சா - சு - கூ - ச)

"அஹம் ப்ரஹ்மாஸ்மி"

"நான் ப்ரஹ்மமா யிருக்கிறேன்"—(பிரு - க - ச - க0)

"அயமாத்மா ப்ரஹ்ம"

"இந்த ஆத்மா ப்ரஹ்மமாம்"—(பிரு - ச - ரு - கக)

"ய ஆத்மா ஸர்வாந்தர:"

"எந்த ஆத்மா எல்லாவற்றையும் வியாபித்திருப்பதோ"—(பிரு - ரு - ச - க)

"ப்ரஹ்மேதம் ஸர்வம்"

"இதெல்லாம் ப்ரஹ்மம்"—(பிரு - ச - ரு - உ)

"இதம் ஸர்வம் யதயமாத்மா"

"இந்த எல்லாம் எதுவோ, (அது) இந்த ஆத்மா"—(பிரு-ச - ச - சு)

என்பனமுதலாக, "ஜீவனும் ப்ரஹ்மமும் ஒரேபொருள்" என்று உபதேசித்தருளுகின்ற சுருதிகளின் கொள்கைக்குப் பெரியதோர் குற்றமாகும் என்றொழிக.

பிரதிவாதி :— ஆயின், ஜீவன் ஈச்வரன் முதலிய வியவகாரவேற்றுமை எவ்வாறு செல்லுகின்றது ?

வாதி :—அஃது அநாதிஸம்பந்தத்தா லாகின்றது. (அநாதியாவது - தொடக்க மில்லாதது ; அதாவது, மாயை. வே - த - ூ - க, உ - ஆம் உல்லாஸங்களைப் பார்க்க.) ஒன்றான பரம்பொருளுக்கு மாயையினால் பற்பலவடிவுடைமை பொருந்துகின்றது. அவ்வண்ணமே, சுருதிகளும் கூறுகின்றன :

"ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட: "

"ஒரே கடவுள் எல்லாப் பொருள்களுள்ளும் மறைந்திருக்கின்றார்"—(ச்வே - ஙு - கக)

"ஏகம் ஸத்விப்ரா பஹுதா வதந்தி"

"பிராமணர்கள் ஒரே உண்மையைப் பலவாறு கூறுகிறார்கள்"—(ருக்வே - க - கசுச - சசு)

"ஏகம் ஸந்தம் பஹுதா கல்பயந்தி"

"ஒரே உண்மையைப் பலவாறு கற்பனைசெய்கிறார்கள்"—(ருக்வே - க0 - ககச - ரு)

"த்வமேகோ(அ)ஸி பஹூநநுப்ரவிஷ்ட:"

"நீ பற்பலவற்றைப் புகுந்து ஒன்று யிருக்கிறாய்"—[தை- ஆ - ங - கக)

"அஜாயமானோ பஹுதா விஜாயதே"

"பிறவாதது பலவகையாகப் பிறக்கின்றது"—(தை - ஆ- கங - கச)

மாயையினால் வேற்றுமைப்பட்டாலும், அதனால் பரம்பொருளுக்கு யாதோர் குறையு மில்லை ; நீரினுள் பிரதிபிம்பித்தாலும், அதனால் சூரியனுக்குக் குறையொன்றுமில்லைபோல. ஸம்ஸாரம் மாயாமயமாதலால், ப்ரஹ்மம் என்றும் ஒருபடித்தாய், குறைவிலா நிறைவாம் என்றபடி. ஆகவே,மாயாஸம்பந்தத்தினால் ஜீவர்கள் பலவகையாக இருக்கின்றார்கள் என்பதாம். (உ0)

உக.

யச்சைதத³ஜாம் ஸமவாப்ய ஸ நித்யோ
விகாரயோகேந கரோதி விச்வம் ।
ததா² ச தச்ச²க்திரிதி ஸ்ம மந்யே
தத³ர்த²யோகே³ ச ப⁴வந்தி வேதா³꞉ ॥

பரம்பொருளுக்கு வேறாகப் பிரபஞ்ச மில்லை.

உக.

இனி, ப்ரஹ்மம் ஜகத்திற்குக் காரணமாதலும் மாயையினு லென்கின்றது எனக் காட்டுகிறார்:

இது எதுவோ, அது மெய்ப்பொருளாகிய நித்யமான பகவான். (அவன்) மாயாசம்பந்தத்தினுல் பிரபஞ்சத்தைப் படைக்கிருன். (அது) அப்படியே அவனது சக்தி யெனக் கோள்கிறேன். (அவனுக்கு) அப்போருளினுடைய சம்பந்தத்திலே வேதங்கள் (பிரமாணமாய்) உள்ளன.

தனிப்பொருளான ப்ரஹ்மம் மாயையினது கூட்டரவினுல் ஜகத்தைப் படைப்ப தாகின்றது. இதற்குப் பிரமாணமாயுள்ள சுருதி ஸ்மிருதிகள் வருமாறு:

"இந்த்³ரோ மாயாபி⁴꞉ புருரூப ஈயதே"
"பரமேச்வரன் மாயயைினுல் பற்பலவடிவுள்ளவனுகத் தோற்றுகிருன்"—(பிரு - உ - ரு - கக)

"மாயீ ஸ்ருஜதே விச்வமேதத்"
"மாயையையுடையவன் இப்பிரபஞ்சத்தைப் படைக்கின்ருன்"—(ச்வே - ச - கூ)

"மாயிநம் து மஹேச்வரம்"
"மாயையுடைய மகேச்வரனை"—(ச்வே - ச - கo)

"தை³வீ ஹ்யேஷா கு³ணமயீ மம மாயா து³ரத்யயா ।"
"குணங்களாலாகியதான என்னுடைய இந்தத் தைவமாயையானது கடக்கஅரிதுதான்"—(வே - கீ - எ - கச)

உஉ.

யுதராஷ்ட்ர உவாச ॥

யஸ்மாஜ்ஜாநாசரஞ்ஜீஹ கேசிஜ

தயாஸ்யஜ்ஜாநு கேசிதிஹாசரந்தி ।

யஜ்ஜ: பாபேந பூதிஹநூதே வா

உதாஹோ யஜ்ஜ: பூதிஹந்தி பாபம் ॥

"அஜோ஽பி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீஶ்வரோ஽பி ஸந் । ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா ॥"

"பிறவாதவனாலும், குறைவிலாத்தன்மையனானாலும், பூதங்கட்கு ஈச்வரனானாலும், (யான்) என்மாயையை வசப் படுத்திக்கொண்டு, என்மாயையினால் பிறக்கின்றேன்"— (வே - கீ - ச - சு)

"மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசரா-சரம் ।"

"ப்ரகிருதியானது கண்காணியான என்னால் ஜங்கமத்தை யும், ஸ்தாவரத்தையும் பிறப்பிக்கின்றது"— (வே - கீ - கூ - க0)

ஆக்ஷேபம்:—ஆயின், மாயை என்பதைக் கொண்டால், த்வைத மே ஆகின்றது.

ஸமாதாநம்:— (வே - த - மூ - 45 - ஆம் பக்கத்தைப் பார்க்க).

கர்மம்.

உஉ.

இதுவரை ஞானத்தைக் கேட்டு, இனிக் கர்மத்தைக் கேட்கவிரும்பிய திருதராஷ்டிரன் சொல்லலுற்றான்:

சிலர் இங்கே நல்வினைகளை அநுஷ்டிக்கிறார்கள்; அப்படியே, சிலர் இங்கே தீவினைகளை அநுஷ்டிக்கிறார்கள். ஆகவே, தீவினையினால் நல் வினை எதிர்த்தடிக்கப்படுகின்றதா? அல்லது, நல்வினை தீவினையை எதிர்த்தடிக்கின்றதா?

இங்கே - இவ்வுலகிலே. நல்வினை - அக்நிஹோத்ரம் முதலியன.

உரு.

ஸநத்ஸுஜாத உவாச ॥

தஸ்மிந் ஸ்திதோ வாப்யுபயம் ஹி நித்யம்
ஜ்ஞாநேந வித்வாந் ப்ரஜஹாதி ஸித்தம் ।
ததார்த்தவத்யா புண்யமுபைதி தேஹீ
ததாகதம் பாபமுபைதி ஸித்தம் ॥

உரு.

இதற்கு விடையை

ஸநத்ஸுஜாதர் சொல்லலுற்றார் :

ஞானி அதிலே நின்றவனாயினும், இரண்டையும் ஞானத்தால் தவறாது அடித்துவிடுகிறான். (இது) பிரசித்தமானது. உடம்போடுநிற்பவன் வேறுவிதமாயிருந்தால், புண்யத்தை யடைகிறான்; அப்படியே, வந்த பாவத்தை யடைகிறான். (இது) பிரசித்தமானது.

அதிலே - நல்வினை தீவினையாகிய கர்மத்திலே. இரண்டையும் - நல்வினையையும், தீவினையையும். ஞானிக்குக் கர்மத்தொடர்பு இல்லை என்று சுருதி ஸ்மிருதி முதலியவற்றுள் உணர்த்தப்பட்டிருக்கின்றது :

"க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே"

"அதனைக் கண்டவளவிலே, அவனது கர்மங்கள் தேய்ந்துவிடுகின்றன"—(மு - உ - உ - அ)

"யதா புஷ்கரபலாச ஆபோ ந ச்லிஷ்யந்தே ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ச்லிஷ்யதே"

"தாமரையிலையிலே எப்படி ஜலம் ஒட்டுதல் இல்லையோ, அப்படி,—இவ்வாறறிந்தவனிடத்துப் பாவகர்மம் ஒட்டுதல் இல்லை"—(சா - ச - கச - ரு)

"ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி"

"அவ்வாறே ஞானி புண்யபாவங்களை உதிர்த்துக் களங்கமற்றவனாய் உயர்ந்த ஒரேநிலையைப் பெறுகிறான்"—(மு - ரு - க - ரு)

௨௪.

𑌗𑌤𑍍𑌵𑌾 𑌲𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌭𑍁𑌜𑍍𑌯𑌤𑍇𑌽𑌸𑍍𑌥𑌿𑌰𑍇
𑌶𑍁𑌭𑌸𑍍𑌯 𑌪𑌾𑌪𑌸𑍍𑌯 𑌸 𑌪𑌾𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ।
𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌪𑌾𑌪𑌂 𑌪𑍍𑌰𑌣𑍁𑌦𑌤𑍀𑌹 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍
𑌧𑌰𑍍𑌮𑍋 𑌬𑌲𑍀𑌯𑌾𑌨𑌿𑌤𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 ॥

“𑌯𑌥𑍈𑌧𑌾𑌂𑌸𑌿 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌥𑌾 ॥”

“அர்ஜுந! ஜ்வலிக்கின்ற தணலானது விறகுகளை எவ்வாறு நீறாகச் செய்கின்றதோ, அவ்வாறே ஞானமென்னும் தணலானது ஸகல கர்மங்களையும் நீறாகச் செய்கின்றது”— (வே - கீ - ௪ - ௩௭)

ஞானமில்லாதவனே புண்யத்தையும் பாவத்தையும் அநுபவிக்கிறான் என்பதும் சுருதி ஸ்மிருதி முதலியவற்றில் நன்றாய்க் கூறப்பட்டிருக்கின்றது. மு - ௧ - ௨ - ௧௦; பிரு - ௫ - ௪ - ௧௧; வே - கீ - ௯ - ௨௦, ௨௧ முதலியவற்றைக் காண்க. இவை, இங்கே விரிவஞ்சி விடுக்கப்பட்டன. (௨௩)

௨௪.

(பரலோகத்தை) அடைந்து, நல்வினை தீவினைகளுடைய நிலையில்லாத இரண்டு(பயனும்) கர்மத்தால் அநுபவிக்கப்படுகின்றன. தெரிந்த அவன் கர்மத்தோடு (கூடியவனாய்), தர்மத்தினால் இங்கே பாவத்தைப் போக்கிக்கொள்கிறான் : (ஏனெனில்), அவனது தர்மம் வலியது என்று தெரிந்துகொள்.

இரண்டு (பயனும்) - நல்வினைப்பயனும், தீவினைப்பயனும். தெரிந்தவன் - கர்மத்தினது உபயோகத்தை அறிந்தவன்; ஈச்வரனுக்காகக் கர்மத்தை அநுஷ்டிப்பவன். இவன் தனக்கு உரிய கர்மத்தை ஈச்வரார்ப்பணமாகச் செய்வதனால் தருமம் உண்டாகின்றது; அதனால் பாவம் தேய்கின்றது. எனவே, தருமம் பாவத்தினும் வலியது, பாவத்தைக்

உரு, உசு.

யெஷாം யஜெஷு விஷயா ஸஹெ ஸஹுவதாஜிவ ।
தெஸ்ராஹணா ஊதஃஷ்ரத்யு ஷமெ யாதி ஷுகாமதாழ்॥
யெஷாம் யஜெ ந வ ஷயா தெஷாம் தஜ்ஞாநஸாயநழ் ।
தெஸ்ராஹணா ஊதொ ஃக்தாஃ ஷமஂயாதி திரவிஷுவழ்॥

கெடுக்கும் வல்லமையுள்ளது. ஆனுல், கர்மத்தை ஈச்வரார்ப்பணமாகச் செய்யாதவன் புண்யபாவங்களை அநுபவிக்கிருன்; அவற்றுள், ஒன்றை யொன்று கெடுப்பதில்லை. என்பது கருத்து. இங்கே - இவ்வுலகிலே. ௩ - அ, ௬ - ஆம் சுலோகங்களைப் பார்க்க. (உச)

உரு, உசு.

அங்ஙனம் யாவர்க்குக் கர்மமானது ஸ்வர்க்கம் முதலியவற்றிற்கு ஸாதநமாயுளது? அன்றியும், அது யாவர்க்கு மனந்திருந்துதல் மூலமாக ஞானத்திற்கு வழியாகின்றது ? எனில்,— கூறுவோம் :

வலிமையுடையவர் வலிமையிலேபோல, எவர்கட்கு தருமங்களிலே எதிர்செய்தல் உளதோ, அந்த ப்ராஹ்மணர்கள் இங்கிருந்து சென்று ஸ்வர்க்கத்திலே விளங்குதலைப் பெறுகிறுர்கள்.

எவர்கட்கு தருமத்திலே எதிர்செய்தல் இல்லையோ, அவர்கட்கு அது ஞானத்திற்கு வழி. அந்த ப்ராஹ்மணர்கள் இதனினின்று தப்பியவராய், மூன்றும் நீங்கிய ஸ்வர்க்கத்தை யடைகிறுர்கள்.

வலிய அரசனெருவன் வேருர் வலிய அரசனைக் கண்டு, "யான் இவனது வலிமையினும் மிக்க வலிமையைத் தேடிக்கொண்டு, இவனை வென்று, இவனைப்பார்க்கிலும் அதிக ஸுகியாக இருப்பேன்" என்று போட்டிகொள்ளுமாறுபோல,—ஸ்வர்க்கலோகவாழ்க்கையிலே ஊர்வசி போகம் முதலியவற்றை விரும்பி, அவற்றிற்குச் சாதநமான வேள்வி முதலிய தருமங்களிலே "நான், இவன்செய்கின்ற தருமத்தினும் மேம்பட்டதான தருமத்தைச் செய்து இவனைப்பார்க்கிலும் அதிக ஸுகியாவேன்" எனப் பிறனெடு போட்டி செய்து தருமங்களை அநுஷ்டிக்கின்றவர்கள் - ஸ்வர்க்கத்திலே அவற்றினது புண்ணியமுள்ளவரை இன்புறு

உஎ.

தஸ்ய ஸ்வாத்யாயவாச: ஸ்துவந்த்யேவம்விதோ ஜநா: ।
ந தேநம் மந்யேத ஸம்பீஷம் பாஹ்யா ஸ்துவந்த்யமீ ஜநா: ॥

கிறுர்கள். எனவே, விஷயங்களை விரும்பிப் பயனிலே பற்றுக்கொண்டவர்க்குக் கர்மமானது ஸ்வர்க்கம் முதலியவற்றிற்கு ஸாதநம் என்றபடி. **ப்ராஹ்மணர்கள்** - வேள்விக்கு உரியவர்கள்.

ஆனுல், எவர்கள் விஷயங்களால் மனம்கவரப்படாதவராய், அழியும் பயனை நோக்காதவராய், தருமத்திலே பிறரொடு எதிர்செய்யாது வேள்விமுதலிய கர்மங்களை ஈச்வரார்ப்பணமாக அநுஷ்டிக்கிறுர்களோ, அவர்கட்கு அவை மனந்திருந்துதல்மூலமாக ஆத்மஅறிவிற்கு ஸாதநமாம். அவ்வாறே, மேலே [ந - அ] கூறுவதைக் காண்க. அவர் இவ்வாறு மாசற்று மனம் தெளிய ஞானத்தால் பரமாத்மாவைத் தன் ஆத்மஸ்வரூபமாகக் கண்டு தேறியவழி இப்பிறப்புஇறப்பினின்றும் அகன்றவராய், மூன்றும்நீங்கிய ஸ்வர்க்கத்தை யடைகிறுர்கள்: தொல்லையில்லா இடத்தை, இன்பமான ப்ரஹ்மத்தைப் புகுகிறுர்கள்: அந்த ப்ரஹ்மஸ்வரூப மாகிறுர்கள் என்றபடி. **மூன்று** - ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்னும் துன்பங்கள்; அல்லது, ஸத்துவம் ரஜஸ் தமஸ் என்னும் குணங்கள்; அல்லது, நனவு கனவு உறக்கம் என்னும் நிலைமைகள். (உரு, உசு)

ஞானியின் வாழ்க்கை.

உஎ.

இவ்வாறு கர்மியின் ஒழுக்கத்தைக் கூறி, இப்பொழுது ஞானியின் ஒழுக்கத்தைக் கூறத் தொடங்குகிறுர்:

வேதங்களை அறிந்தவர்கள் அவனது ஒழுக்கத்தை நல்லதாகக் கூறுகிறுர்கள். (ஆனுல்), அன்னிய ஜனங்களும் கிட்டிய ஜனங்களும் இவனை நன்கு மதிக்கமாட்டார்.

அவனது - முற்றத்துறந்த ஞானியினது. **கிட்டிய ஜனங்கள்** - மனைவி, மக்கள் முதலானேர். (உஎ)

உவு.

யத்ர மந்யேத பூயிஷ்டம் ப்ராவ்ருஷீவ த்ருணோலபம் ।
அந்நம் பாநம் ப்ராஹ்மணஸ்ய தஜ்ஜீவேந்நாநுஸஞ்ஜ்வரேத் ॥

துறவிக்கு உரிய இடம்.

உவு.

மனைவிமுதலானோரைத் துறந்த ஞானிக்குத் தங்குமிடம் யாது? எனின்,—அருளிச்செய்கிறார்:

மாரிகாலத்தில் புல்லிலே நீர் (நிரம்ப நிற்பது)போல, எங்கே ப்ராஹ்மணனுக்கு உணவும் பாநமும் மிகுதியா(யிருப்பதாக அவன்) அறிவானோ, அதனை (யடைந்து) உயிர்வாழவேண்டும்; வருந்தக்கூடாது.

எங்கே - புலி முதலியவற்றின் தொந்தரவு இல்லா இடத்திலே; அல்லது, இல்வாழ்வோனது வீட்டிலே. ஒன்று, அவன் மிருகங்களின் தொந்தரவு இல்லாததாய், பசிக்குக் காய் கனி கிழங்கு முதலிய உண்டியும் தாகத்திற்கு நீரும் கிடைக்கக்கூடிய ஒரு தனிமையான இடத்தில் வசிக்கவேண்டும்; அல்லது, செல்வமுடைய நல்ல கிருகஸ்தரது வீட்டிலே பிக்ஷை செய்து கொள்ளவேண்டும். அற்பஜீவநமுள்ள ஏழையை உபத்திரவித்தல் கூடாது என்பது பொருள். ப்ராஹ்மணனுக்கு - துறவிக்கு. பாநம் - பருகுவன; நீர் முதலியன. வருந்தக்கூடாது - "உணவு முதலியனஇல்லா இடத்திலே நான் எப்படிச் சரீரத்தைக் கொண்டு செலுத்துவேன்?" என ஏங்கித் தவித்தலாகாது; பசியினால் பீடித்து வருந்துவோனுக்கு யோகம் கைகூடாமையின் என்க. அவ்வண்ணமே, பகவான் அருளிச்செய்கிறார்:

"யுக்தாஹாரவிஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு ।
யுக்தஸ்வப்நாவபோதஸ்ய யோகோ பவதி து:கஹா॥"

"சரியான உணவும் விநோதமும், செய்தொழில்களிலே சரியான செய்கையும், சரியான தூக்கமும் விழிப்பும் உடையவனுக்கு யோகம், துன்பத்தைத் துடைப்ப தாகின்றது"—(வே - கீ - சு - கஎ) (உஅ)

துறவிக்கு நல்லது செய்வோர்.

உகூ.

யத்ராகதயமாநஸ்ய ப்ரயச்சத்யஶிவம் பயம் ।
அதிரிக்தமிவாகுர்வந் ஸ ஶ்ரேயாந்நேதரோ ஜந: ॥

உகூ.

அவன் நாட்டிலே வாழ்பவனுயின், ஸாதாரண ஜனங்கள் அவனது பெருமையை அறியாது அவனை அவமதிக்குமே யெனின்,— நன்று சொன்னுய்; எங்ஙன மெனில்,

எங்கே (ஒருவன்) பேசாதவனுக்கு நல்லதல்லாததை, அச்சத்தைக் கோடுக்கின்றுனே, அதிகத்தையே செய்யாதவனு(யிருக்கின்றுனே, அங்கே) அவன் நல்லவன் : மற்றை ஜனங்க ளல்லர்.

நல்லதல்லாததை - அவமாநம் முதலியவற்றை. அதிகத்தை - அளவுகடந்ததை, மேலானதை ; பிராமணவர்ணத்திற்குரிய உபசாரத்தினும் மேம்பட்ட உபசாரத்தை, ப்ரஹ்மத்தை அறிந்தவனுக்குரிய வழிபாட்டை என்பது பொருள். பேசாதவனுய், தனது மாட்சிமையை வெளிக்காட்டாதவனுய், யாதாயினுமொன்றை உடுத்து, யாதாயினுமொன்றை உண்டு, யாதாயினுமோரிடத்துக் கிடப்பவனுய் ஆத்மஉலகையே காண்பவனுய், மடையன்போல ஊமைபோல குழந்தைபோல பிசாசம்போலத் திரிபவனுன முற்றத்துறந்த ஞானியை எவன் பயமுறுத்துகின்றுனே, அவமதிக்கின்றுனே, மற்றுமிவைபோன்றவற்றைச் செய்கின்றுனே, அவன் அந்த ஞானிக்கு நல்லவன் ; அவ்வாறே, எவன் அவனுக்கு வழிபாடு செய்வதில்லையோ, அவனும் அத்துறவிக்கு நல்லவனும். ஆனல், "ப்ரஹ்மமான ஆத்மஸ்வரூபத்தைக் கண்டறிந்தவ னுதலால் இவனே ஈச்வரன் ; ஈச்வரன் என்னும் பொருள் இவனையல்லது வேறென்று இல்லை" என அவனை வலம்செய்து வணங்கித் துதித்துத் தொழுவோர் அவனுக்கு நல்லோ ரல்லர். அவ்வாறே,ஸ்மிருதிகள் கூறுகின்றன:

"ஸம்மாநநாத் பராம் ஹாநிம் யோகர்த்தே: குருதே யத: । ஜநேநாவமதோ யோகீ யோகஸித்திம் ச விந்ததி ॥"

"ஜனங்களால் அவமதிக்கப்பெற்ற யோகீ, யோகம்கைகூடுதலைப் பெறுகிறுன் ; ஏனெனில், நன்மதிப்பானது யோகம்

௩௦.

யோ வா(அ)கதயமாநஸ்ய ஹ்யாத்மாநம் நாநுஸஞ்ஜ்வரேத் ।
ப்ரஹ்மஸ்வம் நோபஹந்யாத்வா தத³ந்நம் ஸம்மதம் ஸதாம் ॥

வளர்தற்கு மிகுந்த கெடுதியைச் செய்கின்றது"—(விஷ்ணுபு - உ - கங - சஉ)

"ஸம்மாநாத் ப்ராஹ்மணோ நித்யம் உத்³விஜேத விஷாதி³வ ।
அம்ருதஸ்யேவ சாகாங்க்ஷேத³வமாநஸ்ய ஸர்வதா³ ॥
ஸுகம் ஹ்யவமத: ஶேதே ஸுகம் ச ப்ரதிபு³த்⁴யதே । ஸுகம் சரதி லோகே(அ)ஸ்மிந் அவமந்தா விநஶ்யதி ॥"

"ப்ராஹ்மணனை ஞானி விஷத்தைப்போல, நன்மதிப்பை வெறுக்கவேண்டும்; அமிருதத்தைப்போல, அவமதிப்பை எப்பொழுதும் விரும்பவேண்டும்.

அவமதிக்கப்பெற்றவன் ஸுகமாகவன்றே தூங்குகிறான்: ஸுகமாகவன்றே விழித்துக்கொண்டிருக்கிறான்: இவ்வுலகிலே ஸுகமாக வாழ்கிறான். அவமதிப்பவன் (ஞானியை அவமதித்த பாவத்தினால்) கெடுகின்றான்"— (மநு - கசுஉ, கசுங)

துறவியான ஞானி தன்மாநத்தையும் அவமாநத்தையும் பாராட்டாது முற்ற ஒழித்திடவேண்டும் என்பது தேர்ந்த கருத்து. (உகூ)

ஞானி அங்கீகரிக்கும் உணவு.

௩௦.

இனி, அவன் தனக்கு எத்தகையோர் அர்ப்பிக்கும் உணவை ஏற்றுக்கொள்கிறான்? எனில்,— கூறுகிறார்:

எவன் பேசாதவனது ஆத்மாவை வருத்தமாட்டானோ, அல்லது ப்ராஹ்மணனுடைய சொத்தைக் கெடுக்கமாட்டானோ, அவனது அன்னம் ஸாதுக்களுக்கு ஸம்மதமாம்.

பேசாதவனது - எல்லாவற்றையும் ஒடுக்கி, ஆநந்தமான ஆத்மஸ்வரூபநிலையிலே நிற்பவனுடைய. **வருத்தமாட்டானோ** - தொல்லைப்படுத்தமாட்டானோ. **ப்ராஹ்மணனுடைய சொத்தை** - துறவியினுடைய ப்ர

௫௧.

நித்யமஜ்ஞாதசர்யா மே இதி மந்யேத ப்ராஹ்மண: |
ஜ்ஞாதீநாம் து வஸந்மத்யே நைவ வித்யேத கிஞ்சந ||

ஹ்மநிஷ்டைக்கு ஸாதநமான மான்தோல் புஸ்தகம் முதலியவற்றை; அல்லது, பிராமணவருணத்தானுடைய பொருளை. **ஸம்மதம்** - ஒப்புக்கொள்ளப்பட்டது. (௫௦)

ஞானியின் ஒழுக்கம்.

௫௧.

மீண்டும், அவனது நடக்கையை அருளிச்செய்கிறார் :

ப்ராஹ்மணன் "எனது செய்கை எப்பொழுதும் அறியப்படாததாய் (இருக்கக்கடவது)" எனக் கொள்ளவேண்டும். ஞாதிகளது நடுவில் வசிப்பவனே, (ப்ரஹ்மநிஷ்டையைச்) சிறிதும் அடையமாட்டான்.

ப்ராஹ்மணன் - ப்ரஹ்மத்தை அறிந்தவன். **ஞாதிகளது** - மனைவி, மக்கள் முதலானோருடைய. மனைவி முதலானோரை முற்றத் துறந்து, பிற ரறியாவண்ணம் தனது செய்கையை வெளிப்படுத்தாமல் ஒழுகுவோனுக்கு ஞானநிஷ்டை கைகூடுமேயன்றிப் பிறனுக்கு இல்லை; பிந்தினவனது சித்தம் பலபடியாகச் சிதறிக்கிடக்குமாதலின் என்க.

அல்லது, வேறுவிதமாய் உரைக்கலாம் :

ப்ராஹ்மணன் ஞாதிகளது நடுவிலே வசிப்பவனாயினும், "அறியப்படாதபொருளிலே எனது நிஷ்டை எப்பொழுதும் (இருக்கக்கடவது)" என்று கொள்ளவேண்டும்; (ஞாதிகளுள்) ஒன்றையும் கொள்ளக்கூடாது.

ஞாதிகளுடைய - விஷயங்கள், இந்திரியங்கள், கோபம், மானம் முதலியவற்றினுடைய;

"க்ரோதமாநாதயோ தோஷா விஷயாச்சேந்த்ரியாணி
ச | ஏத ஏவ ஸர்வதா ஜ்ஞாதயோ தேஹிந-
ஸ்த்வ ||"

"கோபம் மானம் முதலிய குற்றங்களும், விஷயங்களும், இந்

௩௨.

கோ ஹ்யேவமந்தராத்மாநம் ப்ராஹ்மணோ ஹந்துமர்ஹதி ।
நிர்லிங்கமசலம் ஶுத்தம் ஸர்வத்வைதவிவர்ஜிதம் ॥

திரியங்களும் ஆகிய இவையே - உடம்பொடுநிற்கின்ற உனக்கு ஞாதிகளாகச் சொல்லப்படுகின்றன ”—

என “ஞாதி” என்னும் சொல் - இந்திரியங்கள் முதலியவற்றைக் குறிக்கின்றது. **அறியப்படாத பொருளிலே** - கண் செவி மூக்கு முதலியவற்றால் அறிதலாகாத ப்ரஹ்மத்திலே. “கண் முதலியவற்றிற்கு எட்டாததாய், தோற்றமும் கேடுமில்லாத ஞானவடிவாய், பசி முதலியன கலத்தலில்லாததாய், எங்கும் நிறைந்ததாய், உள்ளேயுள்ள ஆநந்தஸ்வரூபமான ப்ரஹ்மத்தினிடத்தே எப்பொழுதும் ஸமாதியாகிய நிஷ்டையைச் செய்யவேண்டும்; மற்று, வெளியிலுள்ள ஸ்தூலஸூக்ஷ்மஉடம்புகள், இந்திரியங்கள், மனைவி, மக்கள், நண்பர் முதலானோரிடத்து ‘நான் இளைத்திருக்கின்றேன், பருத்திருக்கின்றேன்: நான் செவிடன், குருடன், ஊமை: நான் பிராமணன், க்ஷத்திரியன்: எனது மனைவி: எனது மக்கள்: எனது வீடு: எனது சொத்து’ என இத்தகையவற்றைச் செய்தல் கூடாது” என்பது - ஞானி உறைத்துப்பிடிக்கவேண்டிய நிச்சயம். ஆகவே, அவன் உடம்பு இந்திரியங்கள் முதலியவற்றினது மத்தியிலே வசிப்பவனாய், பார்ப்பவனாய், கேட்பவனாய், தொடுபவனாய், முகர்பவனாய், செல்பவனாய், உண்பவனாய், நினைப்பவனாய் இருந்தாலும், தன்னை அவ்வாறு கொள்ளுதல் கூடாது; தன் ஆத்மாவை உண்பவனாக, செல்பவனாக, மற்றுமித்தன்மையனாகத் துணிதலாகாது: அதாவது - உண்பவன் எவனோ, அவனே அவ்வடிவினனே ஆத்மா; நடப்பவன் எவனோ, அவனே அவ்வடிவினனே ஆத்மா; பேசுபவன் எவனோ, அவனே அவ்வடிவினனே ஆத்மா என இவைபோலக்கொள்ளுதல் நேரில்லை. ஆத்மா ஸ்தூலஉடம்பிற்கும் ஸூக்ஷ்மஉடம்பிற்கும் ஸாக்ஷியாய் நிற்றலால், அவற்றையாயினும் அவற்றினது தன்மைகளையாயினும் ஆத்மாவாகக் கொள்ளுதல் மயக்கமாம் என்க. (௩௧)

௩௨.

ஏன் இவ்வாறு கொள்ளுதல் மயக்க மாகும்?— கூறுவோம், கேட்பாயாக:

குறியில்லதாய், அசையாததாய், சுத்தமாய், த்வந்துவமெல்லாம் ஒழிந்ததாய், உள்ளேயுள்ள ஆத்மாவை எவன்தான் ப்ராஹ்மணனாயிருந்து இவ்வாறு கோள்ளக்கூடும்? (ஒருவனு மில்லை.)

௩௩.

யோऽந்யதா ஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்யதே ।
கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா ॥

குறியில்லதாய் - ஸ்தூலஸூக்ஷ்மமில்லதாய். அசையாததாய் - செய்கை செய்பவன் முதலியன இல்லாததாய். சுத்தமாய் - மாசற்றதாய். த்வந்துவம் - பசியும் தாகமும், துயரமும் மயக்கமும், குளிரும் வெப்பமும், இன்பமும் துன்பமும் முதலியன. இவ்வாறு கோள்ளக்கூடும் - கீழ்க்கூறியவாறு ஸ்தூலஸூக்ஷ்ம உடம்புகளையாயினும், அவற்றினது குணங்களையாயினும் ஆத்மாவாகக்கொள்ளுத லாகும். இவ்வாறு கொண்டால், அங்ஙனம் ப்ராஹ்மணத்தன்மையே இல்லாமற்போம்: துறவி ப்ரஹ்மத்தை அறிந்தவனாகமாட்டான் என்பது பொருள். அப்படியே, மேலே (௩ - ௪௰) கூறுவர். (௩௨)

ஆத்மாவை யறியாமையே பெருங்குற்றம்.

௩௩.

மற்று, எவன் உடம்பு முதலியவற்றை ஆத்மாவாகக் கொள்கின்றானே, அவன் பெரும்பாவியாம் :

எவன் வேறுவிதமாயுள்ள ஆத்மாவை வேறுவிதமாய்க் கோள்கின்றானே, அவனால், ஆத்மாவைத் திருடுகின்ற (அந்தக்) கள்ளனால் என்ன பாவந்தான் செய்யப்பட்ட தில்லை.

ஆத்மா குறியில்லாது, பசி தாகம் முதலிய த்வந்துவ மில்லாது, அஸங்கமாய், அறிவாய், ஆநந்த உண்மையான ப்ரஹ்மமாயிருக்க, "நான் செய்பவன், அநுவிப்பவன், பருத்தவன், இளைத்தவன், இன்பமுடையவன், துன்பமுடையவன்: நான் இவனது மகன், இவனது பேரன்: நான் க்ஷத்திரியன், பிராமணன்" என ஸ்தூலஸூக்ஷ்ம உடம்புகளையும் அவற்றினது தன்மைகளையும் தன் ஆத்மாவாகக்கொள்கின்றவன் ஆத்மாவை யறியாத மூடனும். அவன் ஆத்மசோரன் என்னும் ஆத்மத்திருடனாதலால், மஹாபாதகம்முதலிய எல்லாப் பாவங்களையும் செய்தவனாகிறான். என்பது பொருள். இப்படிப்பட்டவரை - சுருதி (ஈ - ௩) "ஆத்மகாதகர் [ஆத்மாவைக் கொல்பவர்]" எனக் கூறுகின்றது. (௩௩)

௫௪.

அஶ்ராந்த꞉ ஸ்யாத³நாதா³தா ஸம்மதோ நிருபத்³ரவ꞉ ।
ஶிஷ்டோ ந ஶிஷ்டவத் ஸ ஸ்யாத் ப்³ராஹ்மணோ ப்³ரஹ்மவித் கவி꞉ ॥

௫௫.

யதா² ஸ்வம் வாந்தமஶ்நாதி ஶ்வா வை நித்யமபூ⁴தயே ।
ஏவம் தே வாந்தமஶ்நந்தி ஸ்வவீர்யஸ்யோபஜீவநாத் ॥

அடக்கமுள்ள ஞானி.

௫௪.

இனி, ஆத்மாவான

ப்ரஹ்மத்தை அறிந்த ப்ராஹ்மணனுகிய கவியானவன் பற்றுதவனுக, சிரமமில்லாதவனுக, நன்கு மதிக்கப்பெற்றவனுக, உபத்திரவம் நீங்கியவனுக, ஆன்றேனுக இருப்பான். (என்றுலும்), அவன் ஆன்றேன் போல இரான்.

கவி - சென்றதையும், நிகழ்வதையும், வருவதையும் அறிபவன். பற்றுதவன் - ஆத்மா அல்லாத உடம்பு முதலியவற்றையும் அவற்றினது தன்மைகளையும் தன் ஆத்மாவாகக் கொள்ளாதவன். ஆதலால், சிரமமில்லாதவன் - பிறப்பு, இறப்பு, பசி, தாகம், பிணி, மூப்பு முதலிய ஸம்ஸாரத்தொல்லை யில்லாதவன். உபத்திரவங்கள் - கோபம், உலோபம், மகிழ்ச்சி, மயக்கம் முதலிய ஸங்கடங்கள். ஆன்றேன்போல இரான் - உலகநோக்கிற்கு ஜடன்போல் ஒழுகுவான் என்றபடி. (௫௪)

டம்பமுள்ள ஞானி.

௫௫.

இப்பொழுது, தனது பெருமையையும் கல்வித்திறமையையும் யோக்கியதையையும் முழக்குகின்ற ஞானியை இகழ்ந்துரைக்கின்றார் :

நாய் தான் கக்கியதைத் தின்குமாறுபோல, அவர்கள் தமது வீர்யத்தை அநுபவிப்பதனுல், வாந்தி செய்ததைத் தின்கிறுர்கள். எப்பொழுதும் (அது அவரது) தீமைக்கேன்க.

எனவே, ஞானி தனது பெருமைமுதலியவற்றை வெளிக்காட்டாது மறைத்துவைப்பவனுய்ப் பேதைபோல் ஒழுகவேண்டும் என்ற

௩௬.

𑌅𑌨𑌾𑌢𑍍𑌯𑌾 𑌮𑌾𑌨𑍁𑌷𑍇 𑌵𑌿𑌤𑍍𑌤𑍇 𑌆𑌢𑍍𑌯𑌾 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌯𑍇 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 ।
𑌤𑍇 𑌦𑍁𑌰𑍍𑌧𑌰𑍍𑌷𑌾 𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑌕𑌮𑍍𑌪𑍍𑌯𑌾𑌃 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑌨𑍁𑌮𑍍 ॥

௩௭.

𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌕𑍃𑌤𑍋 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌯 𑌇𑌹 𑌕𑌶𑍍𑌚𑌨 ।
𑌨 𑌸𑌮𑌾𑌨𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍍𑌰𑌯𑌤𑌤𑍇 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ॥

படி யாயிற்று. தமது வீர்யத்தை அநுபவிப்பதனல் - *தமது பெருமை முதலியவற்றைச் சாற்றுவதனல் என்பது பொருள்.* (௩௫)

ஞானியின் மகிமை.

௩௬.

இனி, துறந்த ஞானியைப் புகழ்ந்துரைக்கின்றார் :

எந்த இருபிறப்பாளர் மாநுஷச்செல்வத்திலே தரித்திரரோ, வேதங்களில் ஸம்பந்நரோ, அவர் (பிறரால்) வெல்லவொண்ணுதவர், அசைக்கமுடியாதவர். (ஒருவன்) அவர்களை ப்ரஹ்மஸ்வரூபமாக அறியவேண்டும்.

மாநுஷச்செல்வத்திலே - *மனைவி, மக்கள், பணம் முதலியவற்றிலே.* வேதங்களில் - *வேதங்களால் உணர்த்தப்படுகின்ற அஹிம்ஸை ஸத்தியம் முதலியவற்றில்.* (௩௬)

௩௭.

இன்னும்,

இங்கே எவனெருவன் நன்ருகவேண்டியதைச் செய்கின்ற எல்லா தேவதைகளையும் அறிவானே, அவன் ப்ராஹ்மணனுக்கு ஸமானனல்லன் ; எவன்விஷயத்திலே (அவன்) தானே முயலுகின்றனே, (அவனும் ஸமான னல்லன்).

வேண்டியதைச் செய்கின்ற - *(வேள்விசெய்வோன் அநுபவிக்க) விரும்பிய மகளிர் முதலான போகப்பொருள்களைத் தருகின்ற.* எவன்விஷயத்திலே - *எந்த அக்நி இந்திரன் முதலிய தேவதாவிஷயத்திலே. யாரைக் குறித்து யாகம் செய்யப்படுகின்றதோ, அவரே, அந்த அக்நி இந்திரன் முதலான தேவர்களே ப்ரஹ்மத்தை அறிந்தவனுக்கு நிகரல்லர். ஆகவே, மனிதர்கட்கு ஆடுமாடு எப்படியோ, அப்படி தேவர்கட்கு ஆடுமாடாயுள்ள யஜமானன் ப்ரஹ்மத்தை அறிந்தவனுக்கு ஸமான னல்லன் என்பது ஆச்சரிய மாகாதென்க.* (௩௭)

௩அ.

யமப்ரயதமாநம் து மாநயந்தி ஸ மாநித: |
ந மாந்யமாநோ மந்யேத நாவமாநேந ஸஞ்ஜ்வரேத் ||

௩௯, ௪௦.

லோகஸ்வபாவவ்ருத்திர்ஹி நிமேஷோந்மேஷவத்ஸதா |
வித்வாம்ஸோ மாநயந்தீஹ இதி மந்யேத மாநித: ||
அதர்மவிதுஷோ மூடா: லோகஶாஸ்த்ரவிவர்ஜிதா: |

ஞானியின் ஒழுக்கம்.

௩அ.

இன்னும், அவனது சமாசாரத்தையே தொடர்ந்து கூறுகிறார் :

முயலாத எவனை (நல்லோர்கள்) நன்கு மதிக்கிறார்களோ, அவன் நன்குமதிக்கப்பெற்றுத் (தன்னை) நன்குமதிக்கப்படுகிறவனாக எண்ணிக் கொள்ளக்கூடாது; அவமதிப்பில் எரிச்ச லடையக்கூடாது.

முயலாத - முயற்சியில்லாத, மௌநமுடைய. எவனை - ஞானியை. ஸ்திதப்ரஜ்ஞன் என்னும் புத்திநிலைத்தயோகியின் லக்ஷணங்களை அறிந்த விவேகிகள் "இவன் ப்ரஹ்மத்தை அறிந்தவன்" என்று அவனைப் பூஜிக்குமிடத்து, அவன் "நான் மதிக்கப்பெறுகிறேன்" என இறுமாப்புறுத லாகாது. அப்படியே, அந்த லக்ஷணங்களை யறியாத அவிவேகிகள் "இவன் ஜடன்" என்று அவனை அவமதிக்குமிடத்து, அவன் "நான் அவமதிக்கப்படுகிறேன்" என எரிச்சலடைதலும் ஆகாது என்பது பொருள். (௩அ)

௩௯, ௪௦.

அப்பொழுது அவன் மதிக்கப்பெற்றவழியும் அவமதிக்கப்பெற்ற வழியும், எவ்வாறு கொள்ளுதல் வேண்டும்? என்பது— கூறுகிறார் :

"அறிவுடையோர் இங்கே (ப்ரஹ்மத்தை யறிந்தவனை) மதிக்கிறார்கள்" என்பது - எப்பொழுதும் இமைமூடுவதும் திறப்பதும்போல உலக ஸ்வபாவப்போக்கு (என), மதிக்கப்பெற்றவன் கொள்ளவேண்டும்.

"அறத்தை யறியாதவராய், உலக(அறிவு)ம் சாஸ்திர(அறிவு)ம் இல்

ந ஜா நு௦. ஜா நயிஷ்யஞ்ஜீ ஐதி ஜெநு௦ஜா நிதஃ ॥

சக.

ந வெ ஜா நஸூ ஜள நஂ வ ஸஹிதள வஸதஃ ஸதா ।
சுயம் ஜா நஸ்ய விஷயொ ஹ்யஸள ஜள நஸ்ய தஸிதஃ ॥

லாத மூடர்கள் - மதிக்கத்தகுந்தவனை மதியார்'' என, மதிக்கப்பெருத வன் கொள்ளவேண்டும்.

ஞானி மதிக்கப்பெற்றவழி - தன்னை மதித்தல் விவேகிகளது இயல்பு எனவும், அவமதிக்கப்பெற்றவழி - தன்னை அவமதித்தல் அவிவேகிகளது இயல்பு எனவும் கொள்ளுதல் வேண்டும் என்பது தேர்ந்த கருத்து. (௩௯, ௪௦)

மாநமும். மௌநமும்.

சக.

இனி, மாநமென்பது அஜ்ஞானிக்கு என்றும், மௌநமென்பது ஞானிக்கு என்றும் காட்டுபவராய் அவற்றினது விஷயங்களைப் பகுத்து உணர்த்துகின்றார் :

மாநமும் மௌநமும் ஒருகாலும் (ஓரிடத்தும்) ஒருங்குகூடி வாழா. ஏனெனில், இது மாநத்திற்கு விஷயம் ; அது மௌநத்திற்கு (விஷயம். வேதாந்தத்தை யறிந்தோர் அதனை) அதுவாக அறிகிறார்கள்.

இது - பிரத்தியக்ஷமாகக் காணப்படுகின்ற இப்பிரபஞ்சம். மௌநமாவது - முநியின் செய்கை, யோகியின் ஒழுக்கம் ; அதற்கு - மௌநத்திற்கு. அதுவாக - ப்ரஹ்மமாக; "அது" என்பது ப்ரஹ்மத்தின் பெயராதலின். இதனை,

" தத்த்வமஸி "

" நீ அதுவாக இருக்கிறாய் "—(சா - ௬ - ௯ - ௪)

"ஓம் தத்ஸதிதி நிர்தெஶொ ப்ரஹ்மணஸ்த்ரிவிதஃ ஸ்ம்ருதஃ॥"

" ஓம் தத் ஸத் என்பது - ப்ரஹ்மத்தின் மூன்றுவிதமான பெயராகக் கொள்ளப்பட்டிருக்கின்றது"—(வே-கீ-௧௭-௨௩)

என்னும் சுருதிஸ்மிருதிகளால் அறிக. இவ்வுலகம் மாநத்திற்கு விஷயமாம் ; ப்ரஹ்மமோ மௌநத்திற்கு விஷயமாம். ஆகவே, மாநத்தால் ஸம்ஸாரத்தையும், மௌநத்தால் ப்ரஹ்மத்தையும் அடைத லாகும் என்றவா றாயிற்று. (௪௧)

சஉ.

ஸ்ரீர்ஹி தாராய்ஸ்ஸம்வாஸாத் ஸா வாபி பரிவர்த்திநீ ।
ப்ராஹ்மீ ஸாதுரதிகா ஸ்ரீர்ஹி ப்ரஜ்ஞாஹீநேந க்ஷத்ரிய ॥

சங.

ஆசாராணி ஸங்க்ருஹ்ணந்தி ஸந்த:
பஹுத்வாராணி துராசராணி ।

சஉ.

மாநத்திற்கு விஷயமான இவ்வுலகத்தின் வாழ்க்கையிலே, ஸம்ஸாரத்திலே உறுதியான நன்மை இல்லை :

ஏனெனில், மாநவிஷயத்தின் வாழ்க்கையினுல் சம்பத்து (உண்டாகின்றது) ; அதுவோ இடையூறு, க்ஷத்திரிய! ப்ரஹ்மத்தினுடைய சம்பத்தோ ஞானமில்லாதவனுல் அடைதற்கு மிக்க அரிதாம்.

மாநவிஷயத்தின் - உலகத்தின். சம்பத்து - பணம், வீடு, மனைவி முதலியன. ப்ரஹ்மத்தினுடைய சம்பத்து-ப்ரஹ்மாநந்தமாகிய லக்ஷ்மி. இம்மை மறுமைக்கான செய்கைகளைச் செய்பவனுக்கு பணம் வீடு முதலிய சம்பத்துக் கூடிவருகின்றது. என்றாலும், அந்த சம்பத்து நல்ல வழிக்கு, மோக்ஷமார்க்கத்திற்கு விரோதியாம் ; அதனுல் மனிதன் மயங்கிப்போய் மகளிர் முதலான விஷயங்களுள் மூழ்கிவிடுகின்றுனுதலின். இவ்வாருக அறிவை இழந்தோனுக்கு இது கேட்கக்கிடைப்பதும் மிக்க அரிதாம்.—எது ?— ப்ரஹ்மாநந்த லக்ஷ்மி. அவ்வாறே, சுருதி கூறுகின்றது :

"ஶ்ரவணாயாபி பஹுபிர்யோ ந லப்ய: ।"
"கேட்பதற்குங்கூட எது அனேகர்களால் அடையப்படாததோ" (கட - க - உ - எ) (சஉ)

ப்ரஹ்மாநந்தலக்ஷ்மி வந்துநுழையும் வழிகள்.

சங.

இனி, அந்த ப்ரஹ்மாநந்தத்தைப் பெறுதற்கான வழிகள் யாவை? எனின்,— அருளிச்செய்கிறுர் :

நல்லோர்களானவர், அநுஷ்டிப்பதற்கு அரியவையான பலவகை

𑌸𑌤𑍍𑌯𑌾𑌰𑍍𑌜𑌵𑍇 𑌹𑍍𑌰𑍀𑌰𑍍𑌦𑌮𑌶𑍌𑌚𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌃
𑌷𑌣𑍍𑌮𑌾𑌨𑌮𑍋𑌹𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌕𑌾𑌨𑌿 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤𑍀𑌯𑍇 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

வழிகளை நன்றாய்ச் சொல்லுகிறார்கள் :— ஸத்தியம், நேர்மை, நாணம், அடக்கம், சுத்தம், ஞானம் (என்பன - அவை. இந்த) ஆறும் மாநமய க்கங்கட்கு இடறுகளாம்.

ஸ்ரீமத் ஸநத்ஸுஜாதீயத்தில் இரண்டாம் அத்தியாயம் முற்றும்.

நாணம் - ஆகாதன செய்வதிலே மனம்மடங்குதல். ஞானம் - ப்ர ஹ்மவித்யை.

(சங.)

இரண்டாம் அத்தியாயம்.

பதவுரை.

க.

𑌵𑍈𑌶𑌂𑌪𑌾𑌯𑌨𑌃	வைசம்பாயனர்
𑌉𑌵𑌾𑌚	சொன்னார் :
𑌤𑌤𑌃	பின்பு
𑌮𑌨𑍀𑌷𑍀	அறிவுள்ள
𑌰𑌾𑌜𑌾	அரசனை
𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌃	திருதராஷ்டிரன்
𑌵𑌿𑌦𑍁𑌰𑍋𑌰𑌿𑌤𑌂	விதுரனால் கூறப்பட்ட
𑌤𑌤𑍍	அந்த
𑌵𑌾𑌕𑍍𑌯𑌂	வார்த்தையை
𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯	நன்குமதித்து,
𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾	பரமாத்மாவாக [ப்ரஹ்மமாக]
𑌬𑍁𑌭𑍂𑌷𑌨𑍍	ஆகவிரும்பியவனைப்,
𑌰𑌹𑌿𑌤𑍇	தனிமையிலே
𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤𑌂	ஸநத்குமாரரை
𑌪𑌰𑌾𑌂	மேலான
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂	ஞானத்தை
𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛	வினவினான்.

உ.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌃	திருதராஷ்டிரன்
𑌉𑌵𑌾𑌚	சொன்னான் :
𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤	ஸநத்ஸுஜாதரே !
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌹𑌿	மிருத்தியுவானது

𑌨 𑌅𑌸𑍍𑌤𑌿	இல்லை
𑌇𑌤𑌿	என்னும்
𑌤𑌵	உமது
𑌉𑌪𑌦𑍇𑌶𑌂	உபதேசத்தை
𑌶𑍃𑌣𑍋𑌮𑌿	கேட்கின்றேன்
(𑌇𑌤𑌿) 𑌯𑌤𑍍	(என்பது) எதுவோ,
(𑌤𑌤𑍍) 𑌇𑌦𑌂	(அந்த) இது
(𑌸𑌤𑍍𑌯𑌂 𑌕𑌿𑌂)	(உண்மையா ?)
𑌦𑍇𑌵𑌾𑌸𑍁𑌰𑌾𑌃	தேவர்களும் அஸுரர்களும்
𑌅𑌮𑍃𑌤𑍍𑌯𑌵𑍇	சாகாமைக்காக
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂	ப்ரஹ்மசர்யத்தை
𑌆𑌚𑌰𑌨𑍍	அநுஷ்டித்தார்கள் ;
𑌤𑌤𑍍	அது
(𑌸𑌤𑍍𑌯𑌂 𑌕𑌿𑌂)	(உண்மையா ?)
𑌕𑌤𑌰𑌤𑍍 𑌨𑍁	இரண்டினுள் எதுதான்
𑌸𑌤𑍍𑌯𑌂	உண்மையாய் (உளது) ?

௩.

𑌶𑍍𑌰𑍀𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤𑌃	ஸ்ரீஸநத்ஸுஜாதர்
𑌉𑌵𑌾𑌚	சொன்னார் :
𑌕𑍇𑌚𑌿𑌤𑍍	சிலர், —
𑌅𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃	சாகாமை
𑌕𑌰𑍍𑌮𑌣𑌾	கர்மத்தால்
(𑌭𑌵𑌤𑌿 𑌇𑌤𑌿)	(ஆகின்றது எனவும்),
𑌅𑌪𑌰𑍇	மற்றையோர், —
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃	மிருத்தியுவானது

𑌨 𑌅𑌸𑍍𑌤𑌿	இல்லை
𑌇𑌤𑌿 𑌚	எனவும்
(𑌆𑌹𑍁𑌃)	(கூறுகிறார்கள்),
𑌰𑌾𑌜𑌨𑍍	அரசனே !
𑌏𑌤𑌤𑍍	இதனை
𑌯𑌥𑌾	உள்ளபடி
𑌬𑍍𑌰𑍁𑌵𑌤𑌃	சொல்லுகின்ற
𑌮𑍇	எனது
(𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍍)	(வார்த்தையை)
𑌶𑍃𑌣𑍁	கேள் ;
𑌮𑌾 𑌵𑌿𑌶𑌂𑌕𑌿𑌥𑌾𑌃	ஸந்தேகப்படாதே.

௪.

𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯	க்ஷத்திரிய !
𑌉𑌭𑍇	இரண்டும்
𑌸𑌤𑍍𑌯𑍇	சரியானவையாய்
𑌆𑌦𑍍𑌯𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇	முதலிலிருந்து தலைப்பட்டவை ;
𑌮𑍋𑌹𑌃	மயக்குமென்பது
𑌯𑌃	எதுவோ,
(𑌸𑌃)	(அது)
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃	மிருத்தியுவாக
𑌕𑌵𑍀𑌨𑌾𑌮𑍍	கவிகளுக்கு
𑌸𑌮𑍍𑌮𑌤𑌃	சம்மதம்.
𑌅𑌹𑌂 𑌵𑍈	நானோ
𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌮𑍍	தடுமாற்றத்தை
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍍	மிருத்தியுவாக

𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿	கூறுகிறேன் ;
𑌸𑌦𑌾 𑌅𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌮𑍍	எப்பொழுதும் தடுமாற்றமின்மையை
𑌅𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑍍	சாகாமையாக
𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌿	கூறுகிறேன்.

௫.

𑌅𑌸𑍁𑌰𑌾𑌃	அஸுரர்கள்
𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌤𑍍 𑌵𑍈	தடுமாற்றத்தினுலன்றே
𑌪𑌰𑌾𑌭𑌵𑌨𑍍	தோற்றூர்கள் ;
𑌸𑍁𑌰𑌾𑌃 𑌚	ஸுரர்களோ
𑌅𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌤𑍍	தடுமாற்றமின்மையினுல்
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌾𑌃	ப்ரஹ்மமானுர்கள்.
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃	மிருத்தியுவானது
𑌜𑌨𑍍𑌤𑍂𑌨𑍍	பிராணிகளை
𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌃 𑌇𑌵	புலிபோல
𑌨 𑌵𑍈 𑌅𑌤𑍍𑌤𑌿	தின்கின்றதில்லை ;
𑌹𑌿	ஏனெனில்
𑌅𑌸𑍍𑌯	அதற்கு
𑌰𑍂𑌪𑌮𑍍 𑌅𑌪𑌿	உருவமே
𑌨 𑌉𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇	காணப்படுகின்றதில்லை.

௬.

𑌤𑍁	ஆனல்
𑌏𑌕𑍇	சிலர்
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍍	மிருத்தியுவை

அத:	இதனினும்
அந்யம்	வேறாக
யமம்	யமனாக
ஆத்மாவஸந்நம்	மனத்தில் வசிப்பவனாக
அம்ருதம்	சாகாதவனாக
ப்ரஹ்மசர்யம்	ப்ரஹ்மத்திலே அமர்ந்தவனாக
ஆஹு:	கூறுகிறார்கள் ;
தேவ:	(அக்)கடவுள்
பித்ருலோகே	பிதிருலோகத்திலே
ராஜ்யம்	ராஜ்யத்தை
அநுஶாஸ்தி	ஆளுகிறான் ;
ஶிவாநாம்	(அவன்) நல்லோர்களுக்கு
ஶிவ:	நல்லவனாய்,
அஶிவாநாம்	தீயோர்களுக்கு
அஶிவ:	தீயவனாய் (இருக்கிறான்).

எ.

நராணாம்	மனிதர்கட்கு
ஏஷ:	இந்த
ப்ரமாத:	தடுமாற்றமாகிய
ம்ருத்யு:	மிருத்தியுவானது
ஆஸ்யாத்	காமத்தினின்று
க்ரோத:	கோபமாகவும்
மோஹரூப: ச	மயக்கவடிவமாகவும்
நிஸ்ஸரதே	வெளிவருகின்றது.
கஶ்சித்	ஒருவன்

அஹம்மதேந	நான் என்னும் வடிவையடைந்த
(அஜ்ஞாநேந) ஏவ	(அஜ்ஞாநத்தினலே)யே
விபரீதாந்	விபரீதவழிகளை
வ்ரஜந்	திரிபவனாய்,
ஆத்மந:	ஆத்மாவினுடைய
யோகம்	யோகத்தை
ந உபைதி வை	அடைகிறானில்லை.

அ.

தே	அவர்கள்
மோஹிதா:	மயக்கப்பட்டவராய்
தத்வஶே	அதனது வசத்திலே
வர்த்தமாநா:	இருக்கின்றவராய்
இத:	இங்கிருந்து
ப்ரேதா:	இறந்துபோனவராய்
தத்ர	அங்கிருந்து
புந:	திரும்பி
பதந்தி	விழுகிறார்கள்.
தத:	பின்பு
தேவா:	இந்திரியங்கள்
தம்	அவனை
அநுபரிவர்த்தந்தே	(கர்மத்திற்குத்) தகச் சுற்றிச்சூழ்கின்றன.
அத:	ஆதலால்
மரணாத்	(ஒருவன்) மரணத்தினின்றும்
ம்ருத்யும்	மரணத்தை
ஸம்ருபைதி	அடைகிறான்.

௯.

𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌾𑌨𑍁𑌰𑌾𑌗𑌾𑌃	கர்மப்பயனிலே ஆசையுள்ளவர்கள்
𑌕𑌰𑍍𑌮𑍋𑌦𑌯𑍇 (𑌸𑌤𑌿)	கர்மமுண்டாகும்(பொழுது)
𑌤𑌤𑍍𑌰	அதிலே
𑌅𑌨𑍁𑌯𑌾𑌂𑌤𑌿	பின்செல்லுகிறார்கள் ;
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍍	மிருத்தியுவை
𑌨 𑌤𑌰𑌂𑌤𑌿	கடக்கிறார்களில்லை.
𑌦𑍇𑌹𑍀	தேகத்தையுடையவன்
𑌸𑌦𑌰𑍍𑌥𑌯𑍋𑌗𑌾𑌨𑌵𑌗𑌮𑌾𑌤𑍍	உண்மைப்பொருளைக் கூடுதலை அறியாமையினால்
𑌸𑌮𑌨𑍍𑌤𑌾𑌤𑍍	எப்புறத்தும்
𑌭𑍋𑌗𑌯𑍋𑌗𑍇𑌨	போகப்பற்றோடு
𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇	செல்லுகிறான்.

௧௦.

𑌤𑌤𑍍 𑌵𑍈	அதுவோ
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂	இந்திரியங்கட்கு
𑌮𑌹𑌾𑌮𑍋𑌹𑌨𑌂	பெருமயக்க(மாம்).
𑌅𑌸𑍍𑌯	இவனுக்கு
𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌯𑍋𑌗𑌸𑍍𑌯	பொய்ப்பொருள்களுடைய சம்பந்தத்தால்
𑌗𑌤𑌿𑌃	(ஸம்ஸார)நிலையானது
𑌨𑌿𑌤𑍍𑌯𑌾	நித்தியமாக
(𑌭𑌵𑌤𑌿) 𑌹𑌿	(இருக்கின்றது).
𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌯𑍋𑌗𑌾𑌭𑌿𑌹𑌤𑌾𑌨𑍍𑌤-𑌰𑌾𑌤𑍍𑌮𑌾	(இவன்) பொய்ப்பொருள்களுடைய சம்பந்தத்தால் ஆத்மா தாக்கப்பட்டவனாய்

விஷயாந்	விஷயங்களை
ஸ்மரந்	கருதுகின்றவனாய்
ஸர்வதஃ	எப்புறத்தும்
உபாஸ்தே	(அவற்றையே) தொழுகிறான்.

கக.

த்யாநமேவ	(விஷயங்களைக்) கருதுதலே
ப்ரதமம்	முதலில்
நரம்	இவனை
ஹந்தி ச	கெடுக்கின்றது.
பஶ்சாத்	பின்பு
காமக்ரோதௌ ச	காமமும் கோபமும்
நரம்	இவனை
க்ருஹ்ய	பிடித்து
(ஹதஃ) ச	(கெடுக்கின்றன).
ஏதே	இவை
பாலாந்	சிறுவர்களை
ம்ருத்யவே	மரணத்திற்கு
ப்ராபயந்தி	செலுத்துகின்றன.
தீராஃ து	தீரர்களோ
தைர்யேண	தைரியத்தினால்
ம்ருத்யும்	மரணத்தை
தரந்தி	கடக்கிறார்கள்.

கஉ.

யஃ	எவன்
உத்பதிஷ்ணூந்	எழும்பி விழும்தன்மையுள்ள விஷயங்களை

𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍	(நிலையில்லவையாக) நினைக்கின்றவனாய்
𑌨𑌿𑌹𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌶𑍁	விட்டிடுவானோ,
𑌅𑌨𑌾𑌦𑌰𑍇𑌣	அசட்டையினால்
𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑍁𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑌃	(அவற்றை மறுபடியும்) நினையாத
𑌯𑌃	எந்த
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍	ஞானி
𑌏𑌵𑌮𑍍 𑌹𑌿	இவ்வாறாக
𑌇𑌹	இங்கே
𑌕𑌾𑌮𑌾𑌨𑍍	காமங்களை
𑌅𑌭𑌿𑌹𑌂𑌤𑌿	தொலைக்கின்றானோ,
𑌸𑌃 𑌵𑍈	அவன்
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌇𑌵	மிருத்தியுபோல
𑌭𑍂𑌤𑍍𑌵𑌾	ஆகி
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑍍	மிருத்தியுவை
𑌅𑌤𑍍𑌤𑌿	விழுங்குகிறான்.

கரு.

𑌕𑌾𑌮𑌾𑌨𑍁𑌸𑌾𑌰𑍀	காமங்களை அநுஸரிக்கின்ற
𑌪𑍁𑌰𑍁𑌷𑌃	மனிதன்
𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌅𑌨𑍁	காமங்களைத் தொடர்ந்து
𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿	அழிகின்றான்.
𑌪𑍁𑌰𑍁𑌷𑌃	மனிதன்
𑌕𑌾𑌮𑌾𑌨𑍍	காமங்களை
𑌵𑍍𑌯𑍁𑌦𑌸𑍍𑌯	தள்ளி
𑌯𑌤𑍍 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍	யாதோர்
𑌰𑌜𑌃	அழுக்கையும்
𑌧𑍂𑌨𑍁𑌤𑍇	உதறுகின்றான்.

௧௪.

ஜந்தூநாம்	பிராணிகளுடைய
அஸ்ய	இந்த
தேஹ꞉	உடலானது
அப்ரகாஶ꞉	பிரகாசமில்லதாக
நரக꞉	நரகமாக
ப்ரத்ருஶ்யதே	காணப்படுகின்றது.
க்ருத்யந்த꞉ ஏவ	(ஜனங்கள் விஷயங்களை) அவாவிக்கொண்டே
ஶ்வப்ரம்	பள்ளத்தை
உந்முகா꞉	எதிர்நோக்குபவராகி
கச்சந்த꞉	செல்பவராய்
தாவந்தி	ஓடுகிறார்கள்.

௧௫.

க்ஷத்ரிய	க்ஷத்திரிய !
அந்யத்	(விஷயங்களினும்) வேறான
கிஞ்சித்	ஒன்றையும்
அசிந்தயாந꞉	நினையாதவன் (எவனோ, அவன்)
ந அதீயதே	(வேதாந்தநூல்களைப்) படிக்கிறானில்லை.
அஸ்ய	இவனது
(தேஹ꞉)	(சரீரம்)
த்ருணை꞉	வைக்கோலினா லான
வ்யாக்ர꞉ இவ	புலிபோல
(அஸ்தி)	(இருக்கின்றது).
த்வச்சரீரே	உனது சரீரத்தினுள்

𑌯𑌃	எவன்
𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌤𑍍	கோபத்தினுல்
𑌲𑍋𑌭𑌾𑌤𑍍	லோபத்தினுல்
𑌮𑍋𑌹𑌭𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾	மயக்கத்தோடும் பயத்தோடும் கூடிய உள்ளேயுள்ள ஆத்மாவாய்
(𑌵𑌰𑍍𑌤𑌤𑍇)	(இருக்கின்ருனே),
𑌸𑌃 𑌏𑌷𑌃 𑌏𑌵	அந்த இவனே
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃	மிருத்தியு(வாம்).

௧௬.

𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂	(ஒருவன்) மிருத்தியுவை
𑌏𑌵𑌂	இவ்வாறு
𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌂	உண்டாகின்றதாக
𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾	அறிந்து
𑌜𑍍𑌞𑌾𑌨𑍇	ஞானத்திலே
𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍	நிற்கின்றவனுய்
𑌇𑌹	இங்கே
𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌃	மிருத்தியுவினின்றும்
𑌨 𑌬𑌿𑌭𑍇𑌤𑌿	பயப்படுகிறுனில்லை.
𑌯𑌥𑌾	எப்படி
𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌃	மரிக்கக்கூடியது [சரீரம்]
𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌃	யமனுடைய
𑌵𑌿𑌷𑌯𑌂	கோசரத்தை
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯	அடைந்து
(𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑍇)	(அழிகின்றதோ),
(𑌤𑌥𑌾)	(அப்படி)
𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃	(அஜ்ஞான)மிருத்தியுவானது

𑌤𑌸𑍍𑌯	அவனுடைய
𑌵𑌿𑌷𑌯𑍇	கோசரத்திலே
𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑍇	அழிந்திடுகின்றது.

கஎ.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌃	திருதராஷ்டிரன்
𑌉𑌵𑌾𑌚	சொன்னான் :
𑌪𑍁𑌣𑍍𑌯𑌤𑌮𑌾𑌨𑍍	(வேதங்கள்) மிகப்புண்ணியமான
𑌸𑌨𑌾𑌤𑌨𑌾𑌨𑍍	என்றுமுள்ள
𑌯𑌾𑌨𑍍	எந்த
𑌸𑌾𑌧𑍁𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌵𑍈	நல்லலோகங்களையே
𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂	இருபிறப்பாளர்க்கு
𑌇𑌜𑍍𑌯𑌯𑌾	யஜ்ஞத்தினால்
𑌆𑌹𑍁𑌃	கூறுகின்றனவோ,
𑌤𑍇𑌷𑌾𑌂	அவற்றிற்கு
𑌇𑌹	இங்கே
𑌪𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌂	மேலான புருஷார்த்தத்தன்மையை
𑌵𑍇𑌦𑌾𑌃	வேதங்கள்
𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑌿	கூறுகின்றன.
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍	ஞானியானவன்
𑌏𑌤𑌸𑍍𑌯	இந்த
𑌕𑌰𑍍𑌮	கர்மத்தை
𑌨 𑌏𑌤𑌿	அடைகிறானில்லை ;
𑌕𑌥𑌂 𑌨𑍁	(என்ற இது) எப்படி ?

கஏ.

ஸநத்ஸுஜாத:	ஸநத்ஸுஜாதர்
உவாச	சொன்னார் :
அவித்வாந்	அஜ்ஞானி
ஏவம்	இவ்வாறு
தத்ர	அதிலே
உபயாதி ஹி	செல்லுகிருன்.
ததா	அப்படியே
வேதா:	வேதங்கள்
அயம் ஜாதம் ச	பயன்களையெல்லாம்
வதந்தி	கூறுகின்றன.
ஸ:	அவன்
இஹ	இதிலே
ந ப்ரயாதி	செல்கிருனில்லை ;
மார்கேண	வழியினுல்
பராத்மா	பரமாத்மாவாகி
பரம்	பரம்பொருளை
ப்ரயாதி	அடைகிருன் ;
அமார்காந்	வழியில்லாதவற்றை
நிஹந்தி	தொலைக்கிருன்.

கஅ.

த்ருதராஷ்ட்ர:	திருதராஷ்டிரன்
உவாச	சொன்னுன் :
ஸ:	அது
க்ரமேண	முறையே

𑌏𑌤𑌤𑍍	இந்த
𑌸𑌰𑍍𑌵𑌂	எல்லாமாக
(𑌭𑌵𑌤𑌿) 𑌯𑌦𑌿	இருந்தால்,
𑌅𑌜𑌂	பிறவாத
𑌪𑍁𑌰𑌾𑌣𑌂	பழைமையான
𑌤𑌂	அதனை
(𑌯𑌃)	(எவன்)
𑌨𑌿𑌯𑌚𑍍𑌛𑍇𑌤𑍍	ஏவுகின்றானோ,
𑌅𑌸𑍌	அவன்
𑌕𑌃	யார் ?
𑌅𑌸𑍍𑌯	அதற்கு
𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌾	செய்யவேண்டியதுதான்
𑌕𑌿𑌂	என்ன ?
𑌅𑌥 𑌵𑌾	அல்லது
𑌅𑌸𑍁𑌖𑌂 𑌚	தீங்குதான்
(𑌕𑌿𑌂)	(என்ன ?)
𑌵𑌿𑌦𑍍𑌵𑌨𑍍	அறிந்தவரே !
𑌤𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂	அதனை யெல்லாம்
𑌮𑍇	எனக்கு
𑌯𑌥𑌾𑌵𑌤𑍍	உள்ளபடி
𑌬𑍍𑌰𑍂𑌹𑌿	சொல்லுக.

௨0.

𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤𑌃	ஸநத்ஸுஜாதர்
𑌉𑌵𑌾𑌚	சொன்னார் :
𑌅𑌤𑍍𑌰	இந்த
𑌵𑌿𑌭𑍇𑌦𑌯𑍋𑌗𑍇	வேற்றுமையுடைமையிலே

மஹாந்	பெரிய
தோஷ:	தீங்கு (வருகின்றது).
(ஜீவாத்யா:)	(ஜீவன் முதலானோர்)
அநாதியோகேந	ஆதியில்லா [மாயா] ஸம்பந்தத்தால்
நித்யா:	நித்யராக
ஸந்தி ஹி	இருக்கின்றார்கள்.
ததா	அவ்வாறாக
அஸ்ய	இதனது
ஆதிக்யம்	பெருமை
கிஞ்சித்	சிறிதும்
ந அபைதி	குறைகின்றதில்லை.
பும்ஸ:	புருஷனுடைய [ப்ரஹ்மத்தினுடைய]
அநாதியோகேந	அநாதி [மாயா] ஸம்பந்தத்தால்
ஸந்தி	(ஜீவர்கள் பற்பலராக) இருக்கின்றார்கள்.

உக.

ஏதத்	இது
யத்	எதுவாய் (இருக்கின்றதோ),
ஸ:	அது
ஸத்யா	மெய்ப்பொருளாகிய
நித்ய:	நித்யமான
பகவாந்	பகவானாக (இருக்கின்றது);
விகாரயோகேந	(அவன்) மாயா ஸம்பந்தத்தினால்
விஶ்வம்	ஜகத்தை

𑌕𑌰𑍋𑌤𑌿	படைக்கின்ருன்.
𑌤𑌥𑌾 𑌚	அப்படியே
𑌤𑌚𑍍𑌛𑌕𑍍𑌤𑌿𑌃	அவனது சக்தி
𑌇𑌤𑌿	என
𑌮𑌨𑍍𑌯𑍇	எண்ணுகிறேன்.
𑌵𑍇𑌦𑌾𑌃	வேதங்கள்
𑌤𑌦𑌰𑍍𑌥𑌯𑍋𑌗𑍇	அப்பொருளினுடைய ஸம்பந்தத்திலே
𑌸𑌨𑍍𑌤𑌿 𑌚	(பிரமாணமாய்) உள்ளன.

௨௨.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌃	திருதராஷ்டிரன்
𑌉𑌵𑌾𑌚	சொன்னான் :
𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍	எதனால்
𑌕𑍇𑌚𑌿𑌤𑍍	சிலர்
𑌇𑌹	இங்கே
𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍	தர்மங்களை
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿	அநுஷ்டிக்கிறார்களோ,
𑌤𑌥𑌾	அப்படியே
𑌕𑍇𑌚𑌿𑌤𑍍	சிலர்
𑌇𑌹	இங்கே
𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍	அதர்மங்களை
𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿	அநுஷ்டிக்கிறார்களோ,
(𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍)	(அதனால்)
𑌧𑌰𑍍𑌮𑌃	தர்மமானது
𑌪𑌾𑌪𑍇𑌨	பாவத்தினால்
𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌨𑍍𑌯𑌤𑍇 𑌵𑌾	எதிர்த்தடிக்கப்படுகின்றதா ?

𑌉𑌤𑌾𑌹𑍋	அல்லது
𑌧𑌰𑍍𑌮𑌃	தர்மம்
𑌪𑌾𑌪𑌂	பாவத்தை
𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌂𑌤𑌿 (𑌕𑌿𑌂)	எதிர்த்தடிக்கின்றதா ?

௨௫.

𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤𑌃	ஸநத்ஸுஜாதர்
𑌉𑌵𑌾𑌚	சொன்னார் :
𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍	ஞானி
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍	அதிலே
𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌵𑌾 𑌅𑌪𑌿	நின்றவனாயினும்
𑌉𑌭𑌯𑌂	இரண்டையும்
𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨	ஞானத்தால்
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂	தவறாது
𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌂𑌤𑌿 𑌹𑌿	அடித்துவிடுகிறான் ;
𑌸𑌿𑌦𑍍𑌧𑌂	(இது) பிரசித்தமானது.
𑌦𑍇𑌹𑍀	சரீரத்தையுடையவன்
𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 (𑌸𑍍𑌯𑌾𑌤𑍍) 𑌚𑍇𑌤𑍍	வேறுவிதமாயிருந்தால்,
𑌪𑍁𑌣𑍍𑌯𑌂	புண்ணியத்தை
𑌉𑌪𑍈𑌤𑌿	அடைகிறான் ;
𑌤𑌥𑌾	அப்படியே
𑌆𑌗𑌤𑌂	வந்த
𑌪𑌾𑌪𑌂	பாவத்தை
𑌉𑌪𑍈𑌤𑌿	அடைகிறான் ;
𑌸𑌿𑌦𑍍𑌧𑌂	(இது) பிரசித்தமானது.

௨௪.

கத்வா	(பரலோகத்திற்குப்) போய்,
ஸுக்ருதஸ்ய	நல்வினையினுடைய
பாபஸ்ய	தீவினையினுடைய
அஸ்திரம்	நிலையில்லாத
உபயம்	இரண்டும்
கர்மணா	கர்மத்தால்
புஜ்யதே	அநுபவிக்கப்படுகின்றன.
வித்வாந்	தெரிந்த
ஸ: ச அபி	அவன்
கர்மணா	கர்மத்தோடு (கூடியவனாய்)
தர்மேண	தர்மத்தினால்
பாபம்	பாவத்தை
இஹ	இங்கே
ப்ரணுததி	போக்கிக்கொள்கிறான்.
தஸ்ய	அவனுடைய
தர்ம:	தர்மம்
பலீயாந்	வலியது
இதி	என்று
வித்தி	அறிந்துகொள்.

௨௫, ௨௬.

பலவதாம்	வலிமையுடையவர்க்கு
பலே இவ	வலிமையிலேபோல,
யேஷாம்	எவர்க்கு
தர்மேஷு	தர்மங்களிலே
விஸ்பர்தா	போட்டிசெய்தல் (உளதோ),
தே	அந்த
ப்ராஹ்மணா:	ப்ராஹ்மணர்கள்

𑌇𑌤𑌃	இங்கிருந்து
𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯	இறந்துபோய்
𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑍇	ஸ்வர்க்கத்தில்
𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑌾𑌂	விளங்குதலை
𑌯𑌾𑌨𑍍𑌤𑌿	பெறுகிறார்கள்.
𑌯𑍇𑌷𑌾𑌂	எவர்கட்கு
𑌧𑌰𑍍𑌮𑍇	தர்மத்தில்
𑌸𑍍𑌪𑌰𑍍𑌧𑌾	போட்டிசெய்தல்
𑌨 (𑌭𑌵𑌤𑌿) 𑌵𑍈	இல்லையோ,
𑌤𑍇𑌷𑌾𑌂	அவர்கட்கு
𑌤𑌤𑍍	அது
𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌾𑌧𑌨𑌂	ஞானத்திற்குக் கருவியாய் (உளது).
𑌤𑍇	அந்த
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃	ப்ராஹ்மணர்கள்
𑌇𑌤𑌃	இதனினின்று
𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃	தப்பியவராய்
𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌪𑌂	மூன்றும் நீங்கிய
𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂	ஸ்வர்க்கத்தை
𑌯𑌾𑌨𑍍𑌤𑌿	அடைகிறார்கள்.

௨௭.

𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑌃	வேதங்களை யறிந்த
𑌜𑌨𑌾𑌃	ஜனங்கள்
𑌤𑌸𑍍𑌯	அவனுடைய
𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌂	ஒழுக்கத்தை
𑌸𑌮𑍍𑌯𑌕𑍍	நல்லதாக
𑌆𑌹𑍁𑌃	சொல்லுகிறார்கள்.
𑌬𑌾𑌹𑍍𑌯𑌃	வெளியிலுள்ள
𑌜𑌨𑌃	ஜனமும்

ஸுஹ்ருஜ்ஜநா:	உள்ளேயுள்ள
(ஜநா: ச).	(ஜனமும்)
ஏநம்	இவனை
பூ⁴யிஷ்ட²ம்	அதிகமாக
ந விந்தே³த	மதியார்.

உஅ.

ப்ராவ்ருஷி	மாரிகாலத்தில்
த்ருணோத³கம் இவ	புல்நீர்போல,
யத்ர	எங்கே (துறவி)
ப்³ராஹ்மணஸ்ய	ப்ராஹ்மணனுக்கு
அந்நம்	உணவையும்
பாநம் (ச)	பானத்தை(யும்)
பூ⁴யிஷ்ட²ம்	அதிகமாக
விந்தே³த	அறிவானோ,
தத்ர	அதனை(யடைந்து)
ஜீவேத்	உயிர்வாழவேண்டும்;
ந அநுஸஞ்ஜ்வரேத்	வருந்தக்கூடாது.

உகூ.

யத்ர	எங்கே (ஒருவன்)
அகத²யமாநஸ்ய	பேசாதவனுக்கு
அஶிவம்	நல்லதல்லாததை
ப⁴யம்	பயத்தை
ப்ரயச்ச²தி	கொடுக்கின்றானோ,
அதிரிக்தம் இவ	அதிகத்தையே
அகுர்வத:	செய்யாதவனைப் (இருக்கின்றானோ),
ஸ:	(அங்கே) அவன்
ஶ்ரேயான்	நல்லவன்;

𑌇𑌤𑌰𑌃	மற்றைய
𑌜𑌨𑌃	மனிதன்
𑌨	அல்லன்.

௯௦.

𑌯𑌃 𑌵𑌾	எவன்
𑌅𑌕𑌥𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯	பேசாதவனுடைய
𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂	ஆத்மாவை
𑌨 𑌅𑌨𑍁𑌸𑌂𑌜𑍍𑌵𑌰𑍇𑌤 𑌹𑌿	வருத்தமாட்டானோ,
𑌵𑌾	அல்லது
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌂	ப்ராஹ்மணனுடைய சொத்தை
𑌨 𑌉𑌪𑌹𑌨𑍍𑌯𑌾𑌤𑍍	கெடுக்கமாட்டானோ,
𑌤𑌦𑌨𑍍𑌨𑌂	அவனது அன்னம்
𑌸𑌤𑌾𑌂	ஸாதுக்களுக்கு
𑌸𑌂𑌮𑌤𑌂	சம்மதமானது.

௯௧.

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃	ப்ராஹ்மணன்,—
𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌚𑌰𑍍𑌯𑌾	"அறியப்படாத செய்கை
𑌮𑍇	எனக்கு
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂	எப்பொழுதும்
(𑌸𑍍𑌯𑌾𑌤𑍍)	(இருக்கக்கடவது)"
𑌇𑌤𑌿	என்று
𑌮𑌨𑍍𑌯𑍇𑌤	கொள்ளவேண்டும்.
𑌜𑍍𑌞𑌾𑌤𑍀𑌨𑌾𑌂	ஞாதிகளுடைய
𑌮𑌧𑍍𑌯𑍇	நடுவிலே
𑌵𑌸𑌨𑍍	வசிக்கின்ற
(𑌪𑍁𑌰𑍁𑌷𑌃) 𑌤𑍁	(மனித)னோ
𑌕𑌿𑌞𑍍𑌚𑌨	(ப்ரஹ்மநிஷ்டையைச்) சிறிதும்
𑌨 𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌤 𑌏𑌵	அடையவேமாட்டான்.

(இச்சுலோகத்திற்கு வேறுவிதமான பதவுரை வருமாறு)

𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃	ப்ராஹ்மணன்
𑌜𑍍𑌞𑌾𑌤𑍀𑌨𑌾𑌂	ஞாதிகளது
𑌮𑌧𑍍𑌯𑍇	நடுவிலே
𑌵𑌸𑌨𑍍 𑌅𑌪𑌿	வசிக்கிறவனாயினும்,
𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌚𑌰𑍍𑌯𑌾	"அறியப்படாத (பொருளிலே) நிஷ்டை
𑌮𑍇	எனக்கு
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂	எப்பொழுதும்
(𑌸𑍍𑌯𑌾𑌤𑍍)	(இருக்கக்கடவது)"
𑌇𑌤𑌿	என்று
𑌮𑌨𑍍𑌯𑍇𑌤	கொள்ளவேண்டும் ;
𑌕𑌿𑌞𑍍𑌚𑌨	(ஞாதிகளுள்) ஒன்றையும்
𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑍇𑌤 𑌏𑌵	கொள்ளவேகூடாது.

௩௨.

𑌕𑌃 𑌹𑌿	எவன்தான்
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 (𑌸𑌨𑍍)	ப்ராஹ்மணனா(யிருந்து),
𑌨𑌿𑌰𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌂	குறியில்லதாய்
𑌅𑌚𑌲𑌂	அசையாததாய்
𑌶𑍁𑌦𑍍𑌧𑌂	சுத்தமாய்
𑌸𑌰𑍍𑌵𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂	த்வந்துவமெல்லாம் ஒழிந்ததாய்
𑌅𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂	உள்ளேயுள்ள ஆத்மாவை
𑌏𑌵𑌂	இவ்வாறு
𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂	கொள்ள
𑌅𑌰𑍍𑌹𑌤𑌿	உரியவனாகிறான் ?

௩௩.

𑌯𑌃	எவன்
𑌅𑌨𑍍𑌯𑌥𑌾	வேறுவிதமாய்

ஸந்தம்	உள்ள
ஆத்மாநம்	ஆத்மாவை
அந்யதா	வேறுவிதமாய்
ப்ரதிபத்யதே	கொள்கின்றானோ,
ஆத்மாபஹாரிணா	ஆத்மாவைத் திருடுகின்ற
சோரேண	கள்ளனாகிய
தேந	அவனால்
கிம் பாபம்	என்ன பாவந்தான்
ந க்ருதம்	செய்யப்பட்டதில்லை ?

௬௪.

ப்ரஹ்மவித்	ப்ரஹ்மத்தை யறிந்த
ப்ராஹ்மண:	ப்ராஹ்மணனை
கவி:	கவியானவன்
அநாதாதா	பற்றாதவனாக
அஶ்ராந்த:	சிரம மில்லாதவனாக
ஸம்மத:	நன்கு மதிக்கப்பெற்றவனாக
நிருபத்ரவ:	உபத்திரவ மில்லாதவனாக
ஶிஷ்ட:	ஆன்றோனாக
ஸ்யாத்	இருப்பான் ;
ஸ:	அவன்
ஶிஷ்டவத்	ஆன்றோன்போல
ந ஸ்யாத்	இருக்கமாட்டான்.

௬௫.

யதா	எப்படி
ஶ்வா	நாயானது
ஸ்வம் வாந்தம்	தான் கக்கியதை

𑌅𑌶𑍍𑌨𑌾𑌤𑌿 𑌵𑍈	தின்கின்றதோ,
𑌏𑌵𑌂	அப்படி
𑌤𑍇	அவர்கள்
𑌸𑍍𑌵𑌵𑍀𑌰𑍍𑌯𑌸𑍍𑌯	தமது வீரியத்தினுடைய
𑌉𑌪𑌜𑍀𑌵𑌨𑌾𑌤𑍍	அநுபவத்தினால்
𑌵𑌾𑌨𑍍𑌤𑌂	வாந்திசெய்ததை
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂	எப்பொழுதும்
𑌅𑌭𑍂𑌤𑌯𑍇	தீமைக்கு
𑌅𑌶𑍍𑌨𑌨𑍍𑌤𑌿	தின்கிறார்கள்.

௩௬.

𑌯𑍇	எந்த
𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃	இருபிறப்பாளர்
𑌮𑌾𑌨𑍁𑌷𑍇	மநுஷ்யசம்பந்தமான
𑌵𑌿𑌤𑍍𑌤𑍇	செல்வத்திலே
𑌅𑌨𑌾𑌢𑍍𑌯𑌾𑌃	சம்பன்ன ரல்லாதவர்களாய் (இருக்கிறார்களோ),
𑌵𑍇𑌦𑍇𑌷𑍁	வேதங்களிலே
𑌆𑌢𑍍𑌯𑌾𑌃	சம்பன்னர்களாய் இருக்கிறார்களோ,
𑌤𑍇	அவர்கள்
𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑌧𑍃𑌷𑍍𑌯𑌾𑌃	வெல்லவொண்ணாதவராய்
𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑌕𑌂𑌪𑍍𑌯𑌾𑌃	அசைக்கமுடியாதவராய் (இருக்கிறார்கள்).
𑌤𑌾𑌨𑍍	அவர்களை
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃	ப்ரஹ்மத்தினுடைய
𑌤𑌨𑍁𑌂	ஸ்வரூபமாக
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍	(ஒருவன்) அறியவேண்டும்.

௯௭.

இஹ	இங்கே
ய: கஶ்சந	எவனொருவன்
ஸ்விஷ்டக்ருத:	நன்றாக வேண்டியதைச் செய்கின்ற
ஸர்வாந்	எல்லா
தேவாந்	தேவர்களையும்
வித்யாத்	அறிவானோ,
(ஸ:)	(அவன்)
ப்ராஹ்மணஸ்ய	ப்ராஹ்மணனுக்கு
ஸமாந:	சமானனாக
ந (பவதி)	ஆகமாட்டான்;
யஸ்மிந்	(அவன்) எவன்விஷயத்திலே
ஸ்வயம்	தானே
ப்ரயததே	முயலுகின்றானோ,
(ஸ: அபி)	(அவனும்)
ப்ராஹ்மணஸ்ய	ப்ராஹ்மணனுக்கு
ஸமாந:	சமானனாக
ந (பவதி)	ஆகமாட்டான்.

௯௮.

அப்ரயதமாநம்	முயலாத
யம்	எவனை
மாநயந்தி தே	(ஸாதுக்கள்) மதிக்கிறார்களோ,
மாநித:	மதிக்கப்பட்ட
ஸ:	அவன்
மாந்யமாந:	(தன்னை) மதிக்கப்படுகிறவனாக
ந மந்யேத	நினைத்துக்கொள்ளக்கூடாது;
அவமாநே	அவமானத்திலே
ந அநுஸஞ்ஜ்வரேத்	எரிச்சலடையக்கூடாது.

௩௯, ௪௦.

𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑌃	"அறிவுடையோர்
𑌇𑌹	இங்கே
𑌮𑌾𑌨𑌯𑌨𑍍𑌤𑌿	(ஞானியை) மதிக்கிறார்கள்"
𑌇𑌤𑌿	என்பது,
𑌸𑌦𑌾	எப்பொழுதும்
𑌨𑌿𑌮𑍇𑌷𑍋𑌨𑍍𑌮𑍇𑌷𑌵𑌤𑍍	இமைமூடுவதும் திறப்பதும்போல
𑌲𑍋𑌕𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃	உலகஸ்வபாவப்போக்காய்
(𑌵𑌰𑍍𑌤𑌤𑍇) 𑌹𑌿	(இருக்கின்றது)
(𑌇𑌤𑌿)	(என்று),—
𑌮𑌾𑌨𑌿𑌤𑌃	மதிக்கப்பெற்றவன்
𑌮𑌨𑍍𑌯𑍇𑌤	கொள்ளவேண்டும்.
𑌅𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌦𑍁𑌷𑌃	'தர்மத்தை யறியாதவராய்
𑌲𑍋𑌕𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃	உலகமும் சாஸ்திரமும் இல்லாத
𑌮𑍂𑌢𑌾𑌃	மூடர்கள்
𑌮𑌾𑌨𑍍𑌯𑌂	மதிக்கத்தகுந்தவனை
𑌨 𑌮𑌾𑌨𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿	மதிக்கிறார்களில்லை"
𑌇𑌤𑌿	என,—
𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑌃	மதிக்கப்பெறாதவன்
𑌮𑌨𑍍𑌯𑍇𑌤	கொள்ளவேண்டும்.

௪௧.

𑌮𑌾𑌨𑌃 𑌚	மானமும்
𑌮𑍌𑌨𑌂 𑌚	மௌநமும்
𑌸𑌦𑌾	எக்காலத்தும்
𑌸𑌹𑌿𑌤𑍌	சேர்ந்தவையாய்
𑌨𑍈𑌵 𑌵𑌸𑌤𑌃	வசிக்கமாட்டா.
𑌹𑌿	ஏனெனில்

ஈயம்	இது
ஊாநஸ்ய	மாநத்திற்கு
விஷயஃ (ஈஸ்தி)	விஷயமாய் (இருக்கின்றது);
ஈவஸ	அது
ஊௌநஸ்ய	மௌநத்திற்கு
(விஷயஃ ஈஸ்தி)	(விஷயமாய் இருக்கின்றது);
தஈ	(சுருதியை யறிந்தோர் அதனை) அதுவாக
விஜுஃ	அறிகிறார்கள்.

சஉ.

ஹி	ஏனெனில்
ஸ்ரீஃ	சம்பத்து
ஊாநாயஃவஸம்வாஸாஈ	மாநவிஷயத்தின் வாழ்க்கை யினால்
(ஹவதி)	(ஆகின்றது).
ஸா வ ஈவி	அதுவோ
வஸிவநீ	இடையூறுய் (உள்ளது).
க்ஷத்ரிய	க்ஷத்திரிய!
ஸ்ராஹ்மீ	ப்ராஹ்மசம்பந்தமான
ஸ்ரீஃ ஹி	சம்பத்தோ
வஜ்ஞாஹீநேந	ஞானமில்லாதவனால்
ஸுஃஜுஸஃஹா	அடைதற்கு மிக்க அரிதாம்.

சங.

ஸஷஃ	சாதுக்கள், —
ஃராவராணி	அநுஷ்டிப்பதற்கு அரியவையாய்
ஸஹுவகாராணி	பலவிதமான
உாராணி	வழிகளை

𑌸𑌾𑌧𑍁	நன்றாய்
𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑌿.	சொல்லுகிறார்கள் :
𑌸𑌤𑍍𑌯𑌾𑌰𑍍𑌜𑌵𑍇	ஸத்தியம், நேர்மை
𑌹𑍍𑌰𑍀𑌃	நாணம்
𑌦𑌮𑌶𑍌𑌚𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌃	அடக்கம், சுத்தம், அறிவு(என்பன, அவை).
𑌷𑌟𑍍	(இந்த) ஆறும்
𑌮𑌾𑌨𑌮𑍋𑌹𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌕𑌾𑌨𑌿	மாநத்திற்கும், மயக்கத்திற்கும் இடறுகளாய் (உள்ளன)-

𑌅𑌥

𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

க.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰 𑌉𑌵𑌾𑌚—

𑌕𑌸𑍍𑌯𑍈𑌷 𑌮𑍌𑌨𑌃 𑌕𑌤𑌰𑌨𑍍𑌨𑍁 𑌮𑍌𑌨𑌂
𑌪𑍍𑌰𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌨𑍍𑌨𑌿𑌹 𑌮𑍌𑌨𑌭𑌾𑌵𑌮𑍍 ।
𑌮𑍌𑌨𑍇𑌨 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍁𑌤 𑌯𑌾𑌤𑌿 𑌮𑍌𑌨𑌂
𑌕𑌥𑌂 𑌮𑍁𑌨𑍇 𑌮𑍌𑌨𑌮𑌿𑌹𑌾𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 ॥

மூன்றும் அத்தியாயம்.

சென்ற அத்தியாயமுடிவிலே, மௌநத்தின் மாட்சிமையும், ஸத்தியம் நேர்மை முதலியன் மயக்கத்தைத் தொலைப்பவை என்றும் கூறப்பட்டன. அவற்றையே வினாவிடைகளாக விரித்துணர்த்தும்பொருட்டு இவ்வத்தியாயம் தொடங்கப்படுகின்றது :

மௌநம்.

க.

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான் :

இந்த மௌநம் எதற்கு? இரண்டனுள் எது மௌநம்? (எல்லாம்) அறிந்தவரே! இங்கு மௌநத்தின் இயல்பை அருளிச்செய்க. கற்றறிந்தவன் மௌநத்தால் மௌநத்தைப் பெறுகின்றானா? முனிவரே! (கற்றறிந்தவர்) இங்கே எவ்வாறு மௌநத்தை அநுஷ்டிக்கிறார்கள்?

மௌநம் என்னும் சொல் - "வாய் திறந்து பேசாமை," "இந்திரிய மனஅடக்கம்," "வாக்குமனாதீதநிலை" என்னும் மூன்று பொருளின்மேல் நிற்கின்றது.—முற்றுமுணர்ந்த பெரியோரே! க. இங்குச் சிறப்பித்துக் கூறிவரும் மௌநத்தின் பயன் யாது? உ. அம்மௌநம், வாய்

உ.

ஸநத்ஸுஜாத உவாச—

யதோ ந வேதா மநஸா ஸஹைநம்
அநுப்ரவிஶந்தி ததோऽத மௌநம் ।
யத்ரோத்திதோ வேதஶப்தஸ்ததாऽயம்
ஸ தந்மயத்வேந விபாதி ராஜந் ॥

திறந்து பேசாமையா? அல்லது, இந்திரியமனஅடக்கமா? ௩. அதனது தன்மை என்ன? ௪. அதனுல், வாக்குமனுதீதநிலையைப் பெறுதலாகுமா? ௫. எதனுல் அம்மௌநத்தை யநுஷ்டித்த லாகும்? என்பது தேர்ந்த பொருள். (௧)

உ.

பல பொருள்களும் தோன்றுமாறு ஓர் விளக்கை வைப்பதுபோல், பகவான் ஸநத்ஸுஜாதர் இவ்வினுக்கட்கு விடைகள் தோன்றுமாறு இதனை அருளிச்செய்கிறுர்:

ஸநத்ஸுஜாதர் சொல்லலுற்றுர்:

எதனுல் வேதங்கள் மனத்தோடுகூட இதனைச் செல்லமாட்டாவோ, அதனுல் (அது) மௌநமாம், அரசனே! வேதசப்தமும் இதுவும் [உலகசப்தமும்] எதனிடத்துத் தோன்றியுளதோ, அது அதுவாகவே விளங்குகின்றது.

இதனை - பரமாத்மாவை. அதுவாகவே - சப்தமயமாகவே, பிரணவமாகவே என்றபடி.

"யதோ வாசோ நிவர்த்தந்தே । அப்ராப்ய மநஸா ஸஹ"

"வாக்கும் மனமும் (எதனை) யடையமுடியாது, எதனினின்று திரும்பிச்செல்கின்றனவோ"—(தை - உப - உ - ௪)

என்னும் சுருதியினுல் ப்ரஹ்மம் வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாத பொருளாதலால், அதனது பெயர் மௌந மாம். இதனுல் - ௧. வாக்குமனுதீதநிலையை யடைதல் மௌநத்தின் பயன் என்றும்; உ. அம் மௌநமாவது, இந்திரியமனஅடக்க மென்றும்; ௩. இந்திரியஅடக்கத்தால் வெளிப்பிரபஞ்சமும், மனஅடக்கத்தால் உள்பிரபஞ்சமும் தோன்று

௩.

த்ருதராஷ்ட்ர உவாச—

ருசோ யஜூம்ஷ்யதீதே ய: ஸாமவேதம் ச யோ த்விஜ: |
பாபானி குர்வன் பாபேன லிப்யதே கிம் ந லிப்யதே ||

மையே அதனது இயல்பு என்றும்; ச. அந்தத் தோன்றாமையினால், வாக்குமனாதீதநிலையை யடைத லாகுமென்றும்; முறையே முதல் நான்கு வினாக்கட்கு விடை கூறப்பட்ட தாயிற்று. இனி, வேதசப்தம் என்பது - ஸகலவேதங்களின் ஸாரமாய் உண்மையினை விளங்கஉணர்த்தும் பிரணவத்தைக் குறிக்கின்றது; குறிக்கவே, பிரணவத்தால் மௌநத்தை யநுஷ்டித்த லாகுமென ஐந்தாம் வினாவிற்கு விடை கூறப்பட்டதென்க. இப் பிரணவத்தைப்பற்றி, பஞ்சீகரணத்தையும் அதனது வார்த்திகத்தையும் பார்க்க. (௨)

வேதஇயல்பின் திறமை.

௩.

ஆயின்,

"ஸர்வே வேதா யத்பதமாமனந்தி"

"வேதங்களெல்லாம் எந்த நிலையை உணர்த்துகின்றனவோ"—(கட - உ - கரு)

"வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:"

"எல்லா வேதங்களாலும் யானே உணர்த்தப்படும் (பொருள்)"—(வே - கீ - கரு - கரு)

எனச் சுருதிஸ்மிருதிகள் கூறுமாறு, ப்ரஹ்மமான ஆத்மாவைக் காண்பதற்கு வேதங்கள் கருவியாதலால் - வேதங்களை யோதுவோன் மௌநமில்லாதவனாயினும், ஈடேறுவானோ? ஈடேறமாட்டானோ? எனச் சங்கித்து

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான்:

எந்த இருபிறப்பாளன் தீவினைகளைச் செய்பவனாய் ரிக்குக்களையும் யஜுஸ்களையும் ஸாமவேதத்தையும் ஓதுகின்றானோ, (அவன்) பாவத்தால் பற்றப்படுகின்றானா? பற்றப்படுகின்றானில்லையா?

பாவங்களைச் செய்துகொண்டு ரிக்வேதம்முதலான வேதங்களை ஓதுபவன் அதனால் [வேதமோதுவதனால்] சுத்தமாகின்றானா? இல்லையா? என்பது. (௩)

ச.

ஸநத்ஸுஜாத உவாச—

நைநம் ஸாமாந்ய்ருசோ வாபி ந யஜூம்ஷி விசக்ஷண!

த்ராயந்தே கர்மிணம் பாபாத் ந தே மித்யா ப்ரவீம்யஹம் ||

ரு.

ந ச்சந்தாம்ஸி வ்ருஜிநாத் தாரயந்தி

மாயாவிநம் மாயயா வர்த்தமாநம் |

ச்சந்தாம்ஸ்யேநம் ப்ரஜஹத்யந்தகாலே

நீடம் சகுந்தா இவ ஜாதபக்ஷா: ||

ச.

ஸநத்ஸுஜாதர் சொல்லலுற்றார் :

ஸாமங்களாயினும், ரிக்குக்களாயினும், யஜுஸ்களாயினும் சாமர்த்தியமில்லாத இவனைப் பாவத்தினின்றும் காக்கமாட்டா. யான் உனக்குப் பொய்யைச் சொல்லமாட்டேன்.

சாமர்த்தியமில்லாத இவனை - *இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கும் திறமையில்லாதவனைப், பாவகாரியங்களைச் செய்துகொண்டே வேதங்களை ஓதுவோனை.* (ச)

ரு.

வேதங்கள், கள்ளமாய் ஒழுகுகின்ற மாயாவியைப் பாவத்தினின்றும் தப்புவிக்கமாட்டா. இறகுமுளைத்த பறவைகள் கூட்டை (விட்டோடுமாறு)போல், வேதங்கள் (இவனது வாழ்க்கையின்)முடிவுகாலத்தில் இவனை விட்டோழிகின்றன.

கள்ளமாய் ஒழுகுகின்ற மாயாவியை - *பாவங்களைச் செய்துகொண்டே வேதங்களை ஓதியுணர்பவனாய், தருமங்களை அநுஷ்டிப்பவன்போல் வெளிக்குப் பகட்டுகின்ற ஆசாரக்கள்ளனை என்க.* வே - கீ - ௩ - சு *ஐப் பார்க்க.*

சங்கை:—அவன் பாவங்களைச் செய்வோனாயினும், இடைவிடாது செய்யும் வேதப்பயிற்சியின் வலிமையினால் மரணகாலத்திலே வேதப் பொருளை நினைந்து ஈடேறலாம்; அவ்வாறே,

"யம் யம் வாபி ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே கலேவரம் |

தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித: ||"

சு.

யுதராஷ்ட்ர உவாச—

ந வேதா விநா யஜ்ஞம் த்ராதும் ஸக்தா விசக்ஷண ।
அத கஸ்மாத் ப்ரலாபோயம் ப்ராஹ்மணாநாம் ஸநாதந: ॥

"கௌந்தேய! (ஒருவன் தனது வாழ்வின்) முடிவுகாலத்திலே எந்தெந்தப் பொருளை நினைந்து சரீரத்தை விடுகின்றானே, அதனைப்பற்றிய பாவனையை எப்பொழுதும் பாவித்துக்கொண்டவனாய், அதனையே அடைகிறான்"—(வே - கீ - அ - சு)

எனப் பகவான் அருளிச்செய்கிறார். ஆகவே, மௌநத்தால் [இந்திரிய மனஅடக்கத்தால்] ஆவதென்ன?

ஸமாதாநம்:—அப்படியன்று; அவ்வடக்க மில்லாவழி, மரணகாலத்திலே வேதங்கள் அவனது நினைவிற்கு எழமாட்டாவாதலின். ஆகவே, அவை அவனுக்குப் பயன்படா என்பதாம். (ரு)

சு.

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான்:

அறிஞரே! வேதங்கள் தர்மமில்லாது (ஒருவனைக்) காக்கவல்லவையில்லையாயின், அங்ஙனம் ஏன் ப்ராஹ்மணர்கட்கு இப் பேச்சு எப்பொழுது முள்ளது?

வினா:—வேதங்களை ஓதியுணர்ந்தும் தீவினைகளைச் செய்பவன், பாவலோகங்களை யடைந்து மீண்டும் வந்து பிறக்கிறான். அவ்வாறே வேதங்களை ஓதியுணர்ந்து நல்வினைகளைச் செய்பவனே புண்ணியலோகங்களை யடைந்து, அவனைப்போலவே மீண்டும் வந்து பிறக்கிறான். இவ்வாறு, இவ்விருவர்க்கும் போதலும்வருதலும் பிறப்புஇறப்புத்துன்பங்களும் சமமா யுள்ளன. எனவே, வேதங்கள் தர்மமுடையவனையும் காக்கமாட்டா என்பதாயிற்று. இனி, இவ்வாறானவளவிலே, ப்ராஹ்மணர்கள் "வேதங்களை ஓதியுணர்ந்து நல்லொழுக்கத்தைக் கைக்கொண்டவனே, போதலும்வருதலும்நீங்கியவனாய்ப் பிறப்பிறப்புத்துன்பங்களைத் துடைத்துவிடுகின்றான்" என்று எதனால் கூறுகிறார்கள்? (சு)

எ.

ஸநத்ஸுஜாத உவாச—

தஸ்யைவ நாமாதிவிஶேஷரூபை:
இதம் ஜகத் பாதி மஹாநுபாவ ।

விடை:—உண்மை, தீவினையும் நல்வினையும் இரும்புவிலங்கும் பொன்விலங்கும்போல பந்தமாம் என்பது. ஆயினும், கர்மத்தின் பயனை எதிர்நோக்காது அதனை ஈச்வரார்ப்பணமாகச் செய்யின், அது முக்திக்குப் பரம்பரையான காரணமாம். (வே - கீ - 7, 8 - ஆம் பக்கங்களைப் பார்க்க.) அதனால் அவர்கள் அவ்வாறு கூறுகிறார்கள். அன்றியும், வேதங்கள் மோக்ஷத்தையும் அதற்கு ஸாதநங்களையும் இவ்வாறு உணர்த்துகின்றமையால், பிறப்புஇறப்புத்துன்பங்களை நீக்கக் காரண மாகின்றன. ஆகவே, இதனால் - அவை, அவற்றை ஓதியுணர்ந்து நல்லொழுக்கமுடையோனைக் காக்கவல்லவை என்பதையும் கண்டுகொள்க.

சங்கை:—தீவினையையும் ஈச்வரார்ப்பணமாகச் செய்தல் கூடுமோ? எனின்,—

ஸமாதாநம்:—கூடாது; அவன் மறுத்தவற்றைச் செய்தல் அவனது ஸந்தோஷத்திற்காகாதெனத் தானே தெற்றெனத் தெரியக்கிடத்தலின். தீவினையெல்லாம் அவனால் மறுக்கப்பட்டவை. அவற்றைச் செய்தல், அவனது கட்டளையை மீறுதலாகிய பெருங் குற்றமேயன்றோ.

ஸநத்ஸுஜாதர் இவையெல்லாவற்றையும் உட்கொண்டு, வருகின்ற மூன்று (எ, அ, கூ) சுலோகங்களையும் கூறுபவராய், "யாருக்காகக் கர்மத்தைச் செய்யவேண்டுமோ அவனை" அந்த ஈச்வரனை முதலில் அருளிச்செய்கிறார்:

ஈச்வரன்.

எ.

ஸநத்ஸுஜாதர் சொல்லலுற்றார்:

பெருந்தகைமையுள்ளவனே! இப் பிரபஞ்சம் அதே (பரம்பொருளினுடைய) பெயர்முதலிய சிறப்புவடிவங்களால் விளங்குகின்றது. வேதங்

நித்யஸ்ய ஸர்வஸ்ய வதந்தி வேதா:
தஸ்மிந்ஸ்வவேதா: ப்ரத்யாஹரந்தி ॥

கள் அதனைக் குறிப்பிட்டு நேராக உணர்த்துகின்றன ; அதனைப் பிரபஞ்சத்திற்கு வேருக(வும்) எடுத்துக்காட்டுகின்றன.

ஈச்வரன் நாமரூபவிகாரமான அந்தந்த மலை கடல் முதலிய சகல ப்ரபஞ்சமாக விளங்குகிருன் ; உண்மையிலோ, வேறுபாடாகிய விகாரமென்பது ஒருபொருளன்று ஆதலால், அந்த நாமரூபவிகாரமெல்லாம் அகன்றுநிற்கும் தனிமுதற்பொருளான ப்ரஹ்மமாகவும் இருக்கிருன். ஆகவே, நாம் வாழ்கின்ற பற்பலவகையான ப்ரபஞ்சமனைத்தும் அவனினும் வேருய் இல்லை என்பது. அவ்வாறே, சுருதிகள்

"யத்ர ஹி த்வைதமிவ பவதி ததிதர இதரம் பச்யதி"

"எங்கே இரண்டுபட்டதுபோல் உளதோ, அங்கே ஒன்று மற்றொன்றைக் காண்கின்றது"—(ப்ரு - ச - ரு - கரு)

எனக் கூறி

"யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத்கேந கம் பச்யேத்"—(ப்ரு - ச - ரு - கரு)

"எங்கே இவனுக்கு எல்லாம் ஆத்மாவாக இருந்ததோ, அங்கே எதனுல் யாரைப் பார்க்கக்கூடும்?"

எனவும் கூறுவதையும்,

"அத யத்ராந்யத் பச்யத்யந்யச்ச்ருணோத்யந்யத்விஜாநாதி ததல்பம் ... யதல்பம் தந்மர்த்யம்"

"இனி, எங்கே வேறென்றைக் காண்கின்ருனே, வேறென்றைக் கேட்கின்ருனே, வேறென்றை அறிகின்ருனே, அது அற்பமானது ... எது அற்பமானதோ, அது அழியக்கூடியது"— (சா - எ - உச - க)

எனக் கூறி

"யத்ர நாந்யத் பச்யதி நாந்யச்ச்ருணோதி நாந்யத்விஜாநாதி ஸ பூமா ... யோ வை பூமா ததம்ருதம்"

"எங்கே வேறொன்றைப் பார்க்கிறானில்லையோ, வேறொன்றைக் கேட்கிறானில்லையோ, வேறொன்றை அறிகிறானில்லையோ, அது பூமா [பெருமை, யாவற்றினும் மேம்பட்டது] ... எது பூமாவோ, அது சாகாமையாம்"—(சா - எ - உச - க)

எனவும் கூறுவதையும்,

"ஸ்வ்யாக்ருதோவஸீத்தந்நாமரூபாப்யாமேவ வ்யாக்ரியத"

"வேறுபடாததா யிருந்தது; அது பெயரினுலுமே வடிவத்தினுலுமே வேறுபட்டது"—(ப்ரு - க - ச - எ)

எனக் கூறி

"நேதி நேதி ... ..."

"(ப்ரஹ்மம்) இப்படியன்று, இப்படியன்று ... ..."—(ப்ரு - உ - ௩ - ௬)

எனவும் கூறுவதையும்,

"தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ் ஸம்பூத:।
ஆகாஶாத்வாயு:। வாயோரக்நி:। ... ..."

"அந்த இவ்வாத்மாவினின்றே ஆகாசம் உண்டாயிற்று; ஆகாசத்தினின்று வாயு; வாயுவினின்று அக்னி ... ..."

எனக் கூறி

"யதோ வாசோ நிவர்தந்தே। அப்ராப்ய மநஸா ஸஹ"

"சொற்கள் மனத்தோடுகூட (எதனை) அடையமுடியாது எதனின்று திரும்புகின்றனவோ"—(தை - உப - உ - ௪ - க)

எனவும் கூறுவதையும் ஆராய்க. அன்றியும், இதற்குஇணங்க,

"ஸர்வவாதிமஸாதிமதா விதி:
ஸர்வவாதநஸவ்யவஹாரஹாக் ॥"

அ, கூ.

𑌤𑌦𑌰𑍍𑌥𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌪 𑌏𑌤𑌦𑌿𑌜𑍍𑌯𑌾
𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌸𑍌 𑌪𑍁𑌣𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 ।
𑌪𑍁𑌣𑍍𑌯𑍇𑌨 𑌪𑌾𑌪𑌂 𑌵𑌿𑌨𑌿𑌹𑌤𑍍𑌯 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍
𑌸 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌦𑍀𑌪𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 ॥

𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌚𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍
𑌅𑌥𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 𑌵𑌰𑍍𑌗𑌫𑌲𑌾𑌨𑍁𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑍀 ।
𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑍃𑌤𑌂 𑌤𑌤𑍍𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍
𑌅𑌮𑍁𑌤𑍍𑌰 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌪𑍁𑌨𑌰𑍇𑌤𑌿 𑌮𑌾𑌰𑍍𑌗𑌮𑍍 ॥

"வாக்குமனமெல்லாம் கடந்துநிற்கும் அறிவு - வாக்கு மனமெல்லாவற்றினுடைய வ்யவஹாரங்களையும் பெறுவதாம் [உண்மையிலே நிஷ்ப்ரபஞ்சமான பொருளே நமது அஜ்ஞானவாழ்க்கையில் ஸப்ரபஞ்சமாய்க் காணப்படுகின்றது]"—(ஸம்க்ஷேப - க - ருருக)

எனப் பெரியோரும் அருளிச்செய்ததை நோக்குக. (எ)

கர்மம்.

அ, கூ.

இனி, அந்த ஈச்வரனுக்கென்று கர்மங்களைச் செய்பவனுக்கு அவை முக்திக்குப் பரம்பரையாகப் பயன்படுதலையும், மற்றையோர்க்கு அவை அங்ஙன மாகாமையையும் அருளிச்செய்கிறார்:

அதற்காக இந்தத் தவமும் யாகமும் கூறப்பட்டுள்ளன. தெரிந்த அவன் அவற்றால் புண்யத்தைப் பெறுகிறான்; புண்யத்தால் பாவத்தைத்தொலைத்துப், பின்பு அவன் ஞானத்தால் ஆத்மாவிளங்கப்பெற்றவனாகிறான்.

(அவ்வாறு ஆத்மாவைக் கண்டு) உணர்ந்தவன் ஞானத்தால் ஆத்மாவை யடைகின்றான். மற்று, மாறானவளவிலே, (அவன்) இந்திரியக் கூட்டத்திற்கு (இனிமையான) பயனைத் தொடர்ந்துவேண்டும் இயல்பினனாய், இங்கே அஃதனைத்தையும் எடுத்துக்கொண்டு மறுமையிலே அனுபவிக்கிறான்; மீள (ஸம்ஸார) வழியை அடைகிறான்.

எது ப்ரபஞ்சத்திற்கு வேறாக இல்லையென்று சொல்லப்பட்டதோ (௩ - ௭), அதனை யடைதற்காக சாந்திராயணம் முதலிய தவங்களை யும், ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்களையும் வேதங்கள் கூறு கின்றன. கர்மங்களினுடைய உபயோகத்தைத் தெரிந்தவன் அவற்றை ஈச்வரனுக்காக அனுஷ்டிக்க, அதனால் புண்யம் உண்டாகின்றது; அப் புண்யத்தினால் பாவம் தேய்கின்றது; பாவம் தேய, புத்தி திருந் துகின்றது. புத்திதிருந்தியவனுக்கே ஞானத்தினால் ஆத்மஉண்மை விளங்குகின்றது. விளங்கவே, அவன் அந்த அறிவினால் ஆத்மாவை அடைகிறான், ஆநந்த அறிவான ப்ரஹ்மஸ்வரூப மாகிறான் என்றபடி.

"𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌚𑍇𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌦𑌯𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌪𑍂𑌰𑍁𑌷𑌃। 𑌕𑌿𑌮𑌿-
𑌚𑍍𑌛𑌨𑍍 𑌕𑌸𑍍𑌯 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌶𑌰𑍀𑌰𑌮𑌨𑍁𑌸𑌂𑌜𑍍𑌵𑌰𑍇𑌤𑍍॥"

"மனிதன் ஆத்மாவை 'இதோ இருக்கிறேன்' என்று அறி வானாகில், எதனை விரும்பி எதனுடைய ப்ரயோஜனத்திற்கா க உடம்பை யடுத்து வருந்துவான்?"—(ப்ரு - ௪ - ௪ - ௧௨)

"𑌆𑌤𑍍𑌮𑌲𑌾𑌭𑌾𑌨𑍍𑌨 𑌪𑌰𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇"

"ஆத்மாவை அடைவதினும் வேறு இல்லை"—(ஆப - ௧ - ௨௨ - ௨)

என்னும் சுருதிஸ்மிருதிகளால் ஆத்மாவைப் பெறுதலே மிக மேலான புருஷார்த்தமாம் என்பது கருத்து. வே - மா - ௧ - ௨ - ஆம் சுலோ கத்தைப் பார்க்க.

ஆனால், இவ்வாறு கர்மத்தை ஈச்வரார்ப்பணமாகச் செய்யாதவ னுக்கு ஆத்மஅறிவு பிறவாததலால், அவன் அநாத்மப்பொருளையே புருஷார்த்தமாகக் கொள்கிறான். கொள்ளவே, இந்திரியங்கட்கு ப்ரிய மான விஷயஸுகத்தையே அடுத்தடுத்து நாடுபவனாய்த், தான் இம்மை யிலே செய்த புண்யபாவங்களை எடுத்துக்கொண்டு மறுமையிலே ஸ்வர் க்கநரகங்களில் அவற்றினது பயனாகிய இன்பத்தையேனும் துன்பத்தை யேனும் அநுபவிக்கிறான்; மீண்டும் இவ்வுலகிலே வந்து பிறக்கிறான். ௨ - ௮ - ஆம் சுலோகத்தைப் பார்க்க. (௮, ௯)

௧௦.

அஸ்மிம்ல்லோகே தபஸ்தப்தம் ஃபலமந்யத்ர புஜ்யதே ।
ப்ராஹ்மணாநாம் தப: ஸ்வ்ருத்தம் அந்யேஷாம் தாவதேவ தத் ॥

௧௦.

ஒருகர்மத்தைத் தெரிந்து செய்தற்கும், தெரியாது செய்தற்கும் பயனிலே ஏற்றக்குறைவைக் கூறுகிறார் :

இவ்வுலகிலே தவம் செய்யப்படுகின்றது ; வேறு (உலகிலே) பயன் அநுபவிக்கப்படுகின்றது. ப்ராஹ்மணர்களுடைய தவம் ஓங்கிவளர்வது ; மற்றையோர்கட்கு அது அவ்வளவேதான்.

தவமாவது - உடம்பையும் இந்திரியங்களையும் கொழுக்கச்செய்யாது, சாஸ்திரத்தில் கூறிய வழிகளால் அவற்றை வாடச்செய்தல். வே - கி - ௧௧ - ௧௪, ௧௫, ௧௬ - ஆம் சுலோகங்களைப் பார்க்க. ப்ராஹ்மணர்களுடை - வேதங்களை ஒதி யுணர்ந்தவர்களுடைய. இம்மையிலே எந்தத் தவம் செய்யப்பட்டதோ, அதனது பயனை மறுமையிலே அநுபவித்தலென்பது யாவர்க்கும் சமமாம். என்றாலும், எவன் அக்கர்மத்தை எவ்வளவிற்கெவ்வளவு தெரிந்து செய்கின்றானோ, அவன் அவ்வளவிற்கவ்வளவு அதிகமான பயனைப் பெறுகிறான். தெரியாது செய்பவனோ, அக்கர்மத்திற்கு அமைந்த பயனைமாத்திரம் அடைகிறான், அதற்குச் சுருதியினுள் எவ்வளவு பயன் கூறப்பட்டுளதோ அவ்வளவுபயனையே பெறுகிறான் என்றபடி. பயன் மிகுதற்கு அவனது கர்மம் காரணமாகாது என்பது பொருள். அறிவு அதிகமாதற்கு ஏற்பப் பயனும் அதிகமாதலை,

"யதேவ வித்யயா கரோதி ... ... ததேவ வீர்யவத்தரம் பவதி"

"(ஒருவன்) எதனை ஞானத்தோடு செய்கின்றானோ, ... அதுதான் அதிகநலமுடையதாகும்"—(சா - ௧ - ௧ - ௧௦)

என்னும் சுருதியினாலும்

"உலகத்திலே, ரத்நம் விற்பவரான நகைவியாபாரியும் நாட்டுப்புரத்தானுமாகிய இவ்விருவருள், முந்தினவன் அந்த ரத்நத்தைப்பற்றி அதிகமாக அறிந்திருப்பதனாலன்றோ பிந்தினவனைக்காட்டிலும் அதிகமான பணத்தைப் பெறுகிறான்"

என்னும் பாஷ்யத்தினாலும் கண்டுகொள்க. (௧௦)

௧௧.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰 𑌉𑌵𑌾𑌚—

𑌕𑌥𑌂 𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌮𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌤𑌪𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌕𑍇𑌵𑌲𑌮𑍍 ।
𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌕𑌥𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮 𑌤𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋 ॥

௧௨.

𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤 𑌉𑌵𑌾𑌚—

𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑍍𑌮𑌷𑌂 𑌤𑌪𑌸𑍍𑌤𑍍𑌵𑍇𑌤𑌤𑍍 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌪𑌰𑌿𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ।
𑌏𑌤𑌤𑍍𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌮𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌤𑌪𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 ॥

௧௩.

𑌤𑌪𑍋𑌮𑍂𑌲𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌨𑍍𑌮𑌾𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯 𑌪𑍃𑌚𑍍𑌛𑌸𑌿 ।
𑌤𑌪𑌸𑌾 𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑌃 𑌪𑌰𑌂 𑌤𑍍𑌵𑌮𑍃𑌤𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑍁𑌃 ॥

௧௧.

இதனைக் கேட்ட

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான் :

சுத்தமான தவம் வளர்ந்ததாயினும், எப்படி நிரம்ப வளர்ந்ததாக ஆகின்றது? ஸநத்ஸுஜாதரே! நான் அதனை எப்படி அறியக்கூடும்? ப்ரபுவே! அதனை அருளிச்செய்க.

௧௨.

இதற்கு விடையை

ஸநத்ஸுஜாதர் சொல்லலுற்றார்:

(ரிஷிகள்) இந்த சுத்தமான தபஸையே குற்றமற்றதாகக் கூறுகிறார்கள். இந்த தபஸ் நிரம்ப வளர்ந்த தாகின்றது; வேறுவகையாக இல்லை.

குற்றமில்லாத தபஸே நிரம்ப வளர்வதாம். குற்றமுடைய தபஸோ அவ்வாறு வளரமாட்டாததாம் என்பது கருத்து. (௧௨)

௧௩.

தபஸையே புகழ்கின்றார் :

க்ஷத்திரிய! நீ எதனை(ப்பற்றி) என்னை வினவுகின்றாயோ, அந்தத் தபஸையே இதெல்லாம் வேராகக் கொண்டது. வேதத்தை யுணர்ந்தவர்கள் தபஸால், சாகாமையை இறந்தபின்பு அடைந்தார்கள்.

௧௪.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰 𑌉𑌵𑌾𑌚—

𑌕𑌲𑍍𑌮𑌷𑌂 𑌤𑌪𑌸𑍋 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑍍𑌮𑌷𑌂 𑌤𑌪𑌃 ।
𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤 𑌯𑍇𑌨𑍇𑌦𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ॥

௧௫.

𑌸𑌨𑌤𑍍𑌸𑍁𑌜𑌾𑌤 𑌉𑌵𑌾𑌚—

𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌦𑌯𑍋 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌯𑌸𑍍𑌯 𑌦𑍋𑌷𑌾𑌃
𑌤𑌥𑌾 𑌨𑍃𑌶𑌂𑌸𑌾𑌨𑌿 𑌚 𑌸𑌪𑍍𑌤 𑌰𑌾𑌜𑌨𑍍 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌯𑍋 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶 𑌚𑌾𑌤𑌤𑌾𑌨𑌾𑌃
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌗𑍁𑌣𑌾 𑌯𑍇 𑌵𑌿𑌦𑌿𑌤𑌾 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

தபஸையே இதெல்லாம் வேராகக் கொண்டது - நாம் அநுபவிக்கின்ற பொருள்களெல்லாம் தபஸினாலேயே கிடைக்கின்றன என்றவாறு. (௧௩)

௧௪.

௩ - ௧௨ - ஆம் சுலோகத்திலே குற்றமற்ற தபஸ் கூறப்பட்டது; அதிலே, குற்றமென்பது யாது? என வினவும்பொருட்டு

திருதராஷ்டிரன் சொல்லலுற்றான்:

குற்றமற்ற தபஸ் கேட்கப்பட்டது. தபஸின் குற்றத்தைக் கூறுக. ஸநத்ஸுஜாதரே! நான் எதனால் இந்த என்றுமுள்ள ரஹஸ்யத்தை அறியக்கூடுமோ, (அந்தக் குற்றத்தை அருளிச்செய்க.)

எதனால் - எந்தக்குற்றங்களை அகற்றி அநுஷ்டிக்கப்படும் தபஸினால். ரஹஸ்யத்தை - ஆத்மஅறிவை. (௧௪)

௧௫-

இதற்கு விடையை

ஸநத்ஸுஜாதர் சொல்லலுற்றார்:

கோபம்முதலான பன்னிரண்டும், அரசனே! அவ்வாறே கொடுமைகள் ஏழும் அதனது குற்றங்களாம். எவை இருபிறப்பாளர்க்குத் தெரிந்து விரிக்கப்படுகின்றனவோ, (அந்த) ஞானம்முதலிய பன்னிரண்டு குணங்களும் சாஸ்திரத்தில் (கூறப்பட்டுள்ளன).

கசு.

க்ரோத: காமோ லோபமோஹௌ விதித்ஸா-
க்ருபாஸூயா மானசோகௌ ஸ்ப்ருஹா ச ।
ஈர்ஷ்யா ஜுகுப்ஸா ச மநுஷ்யதோஷா:
வர்ஜ்யா: ஸதா த்வாதசைதே நரேண ॥

குற்றங்கள்.

கசு.

இனி, கீழ்க்கூறிய குற்றங்களுள் கோபம்முதலான பன்னிரண்டு குற்றங்களையும் கூறுகிருர் :

கோபமும், காமமும், லோபமும், மோஹமும், தாகமுடைமையும், தயையின்மையும், அஸூயையும், மாநமும், சோகமும், அவாவும், ஈர்ஷ்யையும், ஜுகுப்ஸையும், மனிதருடைய குற்றங்களாம். மனிதர்கள் இப் பன்னிரண்டையும் எப்போழுதும் நீக்கவேண்டும்.

க. **கோபம்** - *ஆசை தடைப்பட்டவிடத்து எழுவதாய், வைதல் அடித்தல் முதலியவற்றிற்குக் காரணமான மனக்கொதிப்பு.* *உ.* **காமம்** - *ஸ்திரீகள்மீது ஆசை.* *ந.* **லோபம்** - *தேடியபொருளைத் தக்கோர்க்குக் கொடாமையிலே கடும்பற்று.* *ச.* **மோஹம்** - *செய்வன செய்யாதன பகுத்தறியாமை.* *ரு.* **தாகமுடைமை** - *மேன்மேலும் கிடைக்கப்பெற்ருலும் திருப்தியின்மை விவித்ஸா என்னும் பாடத்தில், விஷயரஸங்களை மேன்மேலும் அறியவிரும்புதல்.* *சு.* **தயையின்மை** - *நெஞ்சில் இரக்கமில்லாமை* *எ.* **அஸூயை** - *பிறருடைய குணங்களிலே குற்றத்தை ஏற்றுதல்.* *அ.* **மாநம்** - *தற்பெருமை, தன்னை மிக்கு மதித்தல்.* *கூ.* **சோகம்** - *வேண்டிய பொருளை இழந்தவிடத்து மனநோய்மை.* *கo.* **அவா** - *அநுபவிக்கப்படும் பொருள்களின்மேல் ஆதரவு.* *கக.* **ஈர்ஷ்யை** - *பிறராக்கம்பொருமை.* *கஉ.* **ஜுகுப்ஸை** - *பிறரை இகழ்தல்; அல்லது அருவருப்பு.* *இப் பன்னிரண்டு குற்றங்களும் கேடுசெய்வனவாதலால், இவையனைத்தையும் அறத் தொலைக்கும்பொருட்டு எப்பொழுதும் முயலவேண்டும் என்பது பொருள்.* (கசு)

கஎ.

ஏகைகமேதே ராஜேந்த்ர மநுஷ்யம் பர்யுபாஸதே |
லிப்ஸமாநோऽந்தரம் தேஷாம் ம்ருகாணாமிவ லுப்தக: ||

கஅ.

ஸம்போகஸம்வித் விஷமேதமாந:
தத்தாநுதாபீ க்ருபணோऽபலீயாந் |
வர்கப்ரஶம்ஸீ வநிதாம் ச த்வேஷ்டா
ஏதே பரே ஸப்த ந்ருஶம்ஸவர்கா: ||

கஎ.

அவற்றை ஏன் எப்பொழுதும் நீக்கவேண்டும்? எனில்,—

அரசரிற் சிறந்தோனே! மிருகங்களுடைய ஓட்டைகளைக் கண்டுபிடிக்கக் கருதும் வேடன்போல, அவர்களுடைய (ஓட்டைகளைக் கண்டுபிடிக்கக் கருதிநிற்கும்) இவை - ஒவ்வொரு மனிதனையும் சூழ்கின்றன.

எவ்வாறு வேடனானவன் மிருகங்களுடைய மெலிவுநிலைமைகளைத் தேடி மிருகங்களைத் தொடர்ந்து கொல்கின்றானோ, அவ்வாறு இந்தக் கோபம் முதலியன மனிதருடைய மெலிவுநிலைமைகளைத் தேடி அவர்களைத் தொடர்ந்து கெடுக்கின்றன என்பது தேர்ந்தகருத்து. (கஎ)

கஅ.

ந - கரு, ஆம் சுலோகத்தினுள் கூறிய கொடுமைகள் ஏழும் இன்னவை என்று சொல்லுகிறார்:

ஸம்போகத்திலே எண்ணமுள்ளவன், விஷம்(போல) வளர்பவன், கொடுத்தபின் வருந்துபவன், கிருபணன், திண்மையில்லாதவன், இந்திரியக்கூட்டத்தைப் புகழ்பவன், மனைவியைப் பகைப்பவன்,— இந்த வேறு எழுவரும் கொடுமைவடிவனராம்.

